# இருக்கிறம்

மாதம் இருமுறை

ISSN 1800-3699

காத்திருப்பு 4 - இருக்கை 10 ஒரு பொல்லாப்புமில்லை 01-15/01/2010





இலவச இணைப்பு உள்ளே

"சாமியே சரணம் ஐயப்பா"

50/-

மேல் மாகாண சாகித்திய விழாவும் கலைமகளின் கண்ணீரும்

ஊடக மயக்கம்

இலட்சியத்தை நோக்கி 2010

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




விளைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய
அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.

The Asia Foundation


ஒரு பொல்லாப்புமில்லை

# இருக்கிறம்

மாதம் இருமுறை — இதழ் 46


காத்திருப்பு 04 - இருக்கை 10

ஈகோ பப்ளிசிங் ஹவுஸ் பிரைவேட் லிமிட்டட்டால் வெளியிடப்படுகிறது.



#3, டொரிங்டன் அவனியூ, கொழும்பு 07.
தொலைபேசி: +94 11 3150836 +94 11 2506272
தொலைநகல் +94 11 2585190
மின்னஞ்சல் irukiram@gmail.com



ஸ்தாபக ஆசிரியர் :
இளையதம்பி தயானந்தா

நிர்வாக ஆசிரியர் :
சாந்தி சச்சிதானந்தம்

இணை ஆசிரியர் :
அருளானந்தம் சஞ்ஜீத்

ஆசிரியர் குழு :
பஸ்லான் மொஹமட்

ஓவியர் :
சஞ்ஜீத்

வடிவமைப்பு :
சோ.விபுலன்
செ. ஜெயதேவன்
திவாகரன்

புகைப்படம் :
பா.கரன்
சோ.விபுலன்

கணனி தட்டச்சு :
எஸ். சதிஸ்



கதைகளில் வரும் பெயர்களும் நிகழ்ச்சிகளும் கற்பனையே. இதழில் வெளிவரும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நாம் பொறுப்பல்ல.




14


24


52


82



PUBLIC LIBRARY

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வணக்கம் என் சனங்களே!

உங்களை யாரும் வணங்குவதில்லை என்று எனக்கும் தெரியும். வணக்கத்துக்குரிய மனிதர்களாக நீங்கள் மாறுகிறபோது 'சனமாய்' இருக்கும் நீங்கள் 'மக்களாக' மாற்றப்படுவீர்கள் என்பதையும் நான் அறிவேன். என் தாய் மொழி மீதான ஆச்சரியமாகவும் கோபமாகவும் இதுவே எனக்கு அமைகிறது. சாதிக்காரி ஆடினால் நாட்டியம் அல்லது பரதம் என்றும், தாழ்த்தப்பட்டவள் ஆடினால் அதைச் சதிர் என்றும் சொல்ல வல்லது தமிழும் தமிழரும் மட்டுமே. இந்தத் 'தமிழ்' என்ன சாதி என்றுதான் இன்னும் தெரியவில்லை.

என்னவர்களே! நீங்கள் அலைகிறபோதும், அடிபடுகிறபோதும், அகதியாகிற போதும் மட்டுமல்ல சிந்திக்காத அல்லது சிந்திக்கமுடியாத வேளைகளிலெல்லாம் நீங்கள் சனங்கள் மட்டுமே. "சனம் அலையுது", "சனத்தின்ர பாடுதான் இப்ப சிக்கல்", எனப்படுவதாக 'மேன் மக்கள்' பேசுகிறபோதெல்லாம், மனித இனத்தின் இழிபட்ட கூட்டமாகவே நீங்கள் தெரிகிறீர்கள், மன்னிக்கவும் நாங்கள் தெரிகிறோம்.

இழிபட்டு அடிபட்டு இன்று அடைபட்ட சனம், மக்களாகும் ஓர் மகோன்னத தினம் மிக அருகில் வருகிறது. ஆம், தேர்தல் மிக நெருங்கி வருகிறது. நடு வீதியில் நிற்கிறபோது வேகமாக மோத வருகிற ஒரு சரக்கு வண்டிபோல, எமக்கான தேர்தல் வேகமாய் வருகிறது. சாதித்ததைச் சொல்கிறவர்களும், சாதிக்கப் போகிறவற்றைச் சொல்கிறவர்களுமாக எல்லோரும் நடுவீதியில் நிற்கிறார்கள். புதிய கட்சிகள், புதிய தலைகள் தேர்தல் பரபரப்புக்கள் என எல்லாமே மீண்டும் உயிர்த்துவிட்டது. எம்மைத் தவிர.

மகிழ்ச்சிதான் என் சனமே, நீங்கள் மக்களாய் வாழும் ஓர் ஈசல் காலம் இது. அவசரமான மகிழ்ச்சிப் பிரசவம், அனுபவியுங்கள். ஆனாலும் அவதானம் என்சனமே! இந்திரன் கௌதம முனிவனாய் வருகிற காலமும் இதுதான்.

என்றும் அன்புடன்
உங்கள்,

ஆசிரியர்
01.01.2010



இருக்கிறம்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பதிப்பகத்தார்




"நான் உனது கருத்தை எதிர்க்கின்றேன். ஆனால் அதைத் தெரிவிப்பதற்கு உனக்குள்ள உரிமையை எனது உயிரைக் கொடுத்துப் பாதுகாப்பேன்" பிரபலமான இந்த வாசகங்களை நாம் பல முறை பல நூல்களில் படித்திருப்போம். பல மேடைகளில் கேட்டிருப்போம். ஒரு ஜனநாயகக் கலாசாரத்தின் உயிர் நாடியை விவரித்திருப்பதனாலோ என்னவோ இவை பலரினாலும் அடிக்கடி மீட்கப்படும் வாசகங்களாக மாறின? ஒரு சமூகத்தில் எத்தனை விதமான மனிதர்கள் இருக்கின்றனரோ, அத்தனை விதமான கருத்துக்களும் கண்ணோட்டங்களும் இருக்கின்றன. அத்தனை விதமான தோற்ற, நடத்தை, கலாசார வேறுபாடுகள் இருக்கின்றன. இவையத்தனையையும் அனுமதிக்கின்ற அவை வாழ்வதற்கான இடத்தினை வழங்குகின்ற பண்பாடே ஜனநாயகமாகும்.

இப்படி எங்கள் ஒவ்வொருவருடைய சிந்தனைகளுக்குள்ளும் ஊற்றுப்பெறும் இந்த விழுமியங்களே பிறகு சமூகத்தில், நாட்டில் எங்கள் அரசில் ஜனநாயகம் வேரூன்றக் காலாக நிற்கின்றது. எங்கள் சிந்தனைகளுக்குள் இல்லாத ஜனநாயகப் பண்பாடு எப்படி நாங்கள் வாழும் நாட்டில் மலர முடியும்? பொதுவாக, ஜனநாயகம் பற்றிப் பேசும்போது, ஏதோ ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஸ தான் அல்லது எங்கள் சுயநலமுள்ள அரசியல்வாதிகள்தான் அதனை இல்லாமல் செய்கின்றார்கள் என்று நம்பிக்கொள்வது எங்கள் வழக்கம். ஆனால் அவர்களெல்லோரையும் இங்கு எங்கள் மத்தியில் நடமாட நாங்கள்தான் அனுமதித்திருக்கின்றோம் என்று சொன்னால் நம்புவீர்களா? ஆம் எங்களைச் சுற்றியுள்ள அநீதிகள் எல்லாமே எமது அங்கீகாரத்தின் பெயரில்தான் நடக்கின்றது. இது தவறு. இதனை நாம் ஒருபோதும் அனுமதிக்க முடியாது என்கின்ற சங்கற்பம் எங்கள் மனதில் தோன்றிய அக்கணமே குறித்த நிலைமை மாறத்தொடங்கி விடுகின்றது.

## எமது பை:.போஸ் உலகம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நூலகம்
யாழ்ப்பாணம்

எங்கள் சிந்தனைகளே எம்மைச் சுற்றியுள்ள உலகத்தினை சிருஷ்டிக்கின்றன. இவ்வளவு சக்தி வாய்ந்த "மாற்ற முகவர்களாக" நாங்கள் மக்கள் இருப்பதனை உணராது வாழ்வதுதான் எமது வரலாற்றின் மிகப்பெரிய சோகமாகும். இந்த இதழில் இருக்கிறம் மீதான ஒரு ஒலிபரப்பாளரின் கண்டன வலைப்பதிவினைப் பிரசுரித்திருக்கின்றோம். ஊடக மயக்கம் என்கின்ற கட்டுரையை நாம் பிரசுரித்த விளைவினால், அதைத் தொடர்ந்தும் பிரசுரிக்கப்போகின்றோம் என்று அறிந்தமையால் இனி இருக்கிறம் சஞ்சிகைக்கு நான் எழுதப்போவதில்லை என்று அவர் தெரிவித்திருக்கின்றார். அவர் எங்கள் மதிப்பிற்கும் மரியாதைக்குமுரிய ஒலிபரப்பாளர். இருக்கிறம் சஞ்சிகைக்கு அவர் "டு" போட்டுவிடக் கூடாதே என நாம் அஞ்சுகின்றோம். மனதார வேண்டுகின்றோம். அவர் தனது முடிவை மாற்றுவார் என்றே பெரிதும் நம்புகின்றோம். ஆனால் அவருடைய மனஸ்தாபம் அல்ல இங்கு நாம் எடுத்துக்கொள்ள வந்த விடயம். எங்கள் பலருடைய சிந்தனைகளில் எங்களை அறியாமலே ஊறியுள்ள அராஜகத்தை ஆராயும் ஒரு வாய்ப்பினை, அவரது எழுத்து கொடுத்ததனாலேயே நாம் இதைப் பற்றிப் பேசுகின்றோம்.

இருக்கிறம் சஞ்சிகை மட்டுமல்ல. யாரும் எவரும் என்ன பேச வேண்டும்? எப்படி இருக்க வேண்டும் என்பதை தலையில் சம்மட்டி கொண்டு அடிப்பது போல அடித்து செய்விப்பதில்தான் எமது சமூகம் ஆர்வப்படுகின்றது. ஒரு விஷயம் எப்படி இருக்க வேண்டும் என்று நாம் நினைக்கின்றோமோ அதை அப்படியே இருக்கச் செய்ய வைக்கும் பலாத்காரம். அதைப் பலாத்காரம் என்றுதான் சொல்ல வேண்டும். எங்கள் கிராமங்களிலெல்லாம் இதற்கு "பைஃபோஸ்" என்னும் வார்த்தையைத்தான் பயன்படுத்துவார்கள். கேட்க நகைச்சுவையாக இருக்கும். By force என்னும் ஆங்கில வார்த்தை இவ்வாறு தமிழ் மயப்படுத்தப்பட்டுவிட்டது. "பெரிசு (புலிகள் இயக்கத்தினர்) வந்து பைஃபோஸா என்ட பிள்ளையை இயக்கத்தில சேரச்சொல்லிக் கேட்டது. அல்லது பைஃபோஸா வந்து என்டை மோட்டர் பைக்கை எடுத்துக்கொண்டு போட்டாங்கள்" என்று இவ்வாறு



கதைகள் சொல்லுவார்கள். மட்டக்களப்பில் அதன் ஒரே பிரதேசப் பத்திரிகை தினக்கதிர் நடத்தப்பட்ட காலத்திலே பைஃபோஸாகத்தான் “அதைப் பிரசுரித்தால் போட்டுடுவம் இதைப் பிரசுரித்தால் அடிப்பம்” என்று பெரிசு காலத்துக்குக்காலம் பயமுறுத்திக் கொண்டு வந்தது. கடைசியில் அடித்து எரித்து அதை இல்லாமலும் ஆக்கியது. அந்த இழப்பைப் பற்றி இன்றும் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் மனம் வருந்துவதைக் காணலாம். இப்படி பெரிசுக்கு மட்டுமல்ல எங்கள் எல்லோருக்குமே எதுவும் பைஃபோஸாக செய்துதான் பழக்கம். செய்யவும் விருப்பம். ஆவ்ட்ரோல் பெரிசும்கூட எங்கள் சிருஷ்டிதானே.

ஊடகமயக்கம் கட்டுரை தொடர்ந்தால் நான் என்னுடைய தொடரை எழுத மாட்டேன் என்று சொன்னாலும் அதுவும் ஒருவிதத்தில் பைஃபோஸ் தான். அக்கட்டுரைக்குப் பதில் கட்டுரை எழுதியிருக்கலாம். இன்னும் கட்டுரையாளரை அழைத்து பிரச்சினை என்ன என்பதைப் பேசி அறிந்திருக்கலாம். யார் கண்டது அதன் மூலம் சில பிரச்சினைகளுக்கான தீர்வுகளையும் செயற்படுத்தத் தொடங்கியிருக்கலாம். இதைத்தானே எங்கள் அரசியல் தலைவர்களைச் செய்யச் சொல்லிக் கேட்கின்றோம். ஆனால் இதெல்லாவற்றையும்விட இலேசாக பைஃபோஸா அமுக்கி விடலாம் என்பது எங்கள் சமூக விழுமியமாகி விட்டது. அதே போலத்தான், கணவன் மனைவி புதினங்கள் என்கின்ற தொடரை நாம் பிரசுரித்தால் உடனே இருக்கிறம் சஞ்சிகைகளைக் குவித்து நெருப்பு மூட்டப்போகின்றோம் என்ற பயமுறுத்தல். அது எங்களெல்லோருடைய வாழ்க்கையிலும் நடக்கும் விஷயங்களைப் பற்றித்தான் பேசுகின்றது என்பது இரண்டாம் பட்சம். இங்கு எங்கள் நாட்டில் அரசாங்கம் மட்டுமா சென்ஸர்ஷிப் விளையாட்டு விளையாடுகின்றது? நாங்களுந்தானே?




விமர்சனங்களை, எங்களை நோக்கி வீசப்பட்ட கண்டனங்களாகக் கருதிப் பொருதுவதில் எங்களுக்கு இன்னுமொரு விதமும் இருக்கின்றது. விமர்சனத்தை வைத்தவரின் கருத்து என்ன? அதன் பிழை, சரி என்ன என்பதைப் பாராது அவரின் பூர்வீகத்தை ஆராய்வதுதான் அந்த விதமாகும். இனியென்ன? அவருடைய குடும்பம், பின்னணி, ஏன் அப்படிக் கூறினான்? என்று பலவிதமாக உள்நோக்கங்களைக் கிளறிக் கொண்டு போய் அந்த ஆராய்ச்சி சொல்ல வந்த விடயத்தையே அடித்துக் கொண்டு போகும். தீராத முரண்பாடுகளைத் தொடர்ந்து தோற்றுவித்துக் கொண்டு போவதற்கு இதுவொன்று போதுமே. மோதல்களைத் தவிர்க்கும் பண்பாட்டினை வளர்க்க உதவும் கோட்பாடுகளில் முரண்பாடுகளை உருவாக்கும் இந்தத் தன்மையைப் பற்றித்தான் திரும்பத்திரும்பப் பேசப்படுகின்றது. தர்க்க ரீதியில் (rational discourse) தொடர்பாடும் பண்பினை சிறுவயது முதலே வளர்க்க முயலும் கல்வி முறைமைக்கு முதலிடம் கொடுக்கப்படவேண்டும் என்று வலியுறுத்தப்படுகின்றது.

எங்களுக்குள் சகிப்புத் தன்மை இல்லாத பட்சத்தில்தான் எங்களைச் சுற்றியுள்ள நிறுவகங்கள் சகிப்புத் தன்மை இல்லாமல் நடக்கும்பொழுது அதை எங்கள் உள் மனது ஏற்றுக்கொள்ளப் பழகுகின்றது. அந்த சந்தர்ப்பத்தில் நாங்கள் பாதிக்கப்பட்டவர்களாக இருந்தாலும் கூட எதிரணியின் இடத்தில் இருந்திருந்தால் நாங்களும் அப்படித்தான் செய்திருப்போம் என்பது அதற்கு நன்றாகத் தெரியுமல்லவா? நாம் அதனை உள்ளூர ஏற்றுக்கொள்கின்றபடியால்தான் அந்நிறுவகங்கள் தொடர்ந்து தமது அநியாயங்களைச் செய்து கொண்டு போகின்றன. பொதுவிடங்களில் தவறான கருத்துக்கள் கூறப்பட்டால் நாம் அதனை விமர்சிக்கப் பயந்து மௌனம் சாதிப்பதும் எங்களால் விமர்சனங்களை ஏற்க முடியாத தன்மையாலேயே. ஆதரவாளர்கள் தங்கள் தலைவர்களை விமர்சிக்கப் பயந்து அதனால் தலைவர்கள் தங்கள் தவறுகளைத் தொடர்ந்து கொண்டுபோய் முழு நாட்டையும் குட்டிச்சுவராக ஆக்குவதும் அதே வியாதிதான். எங்கள் சமீபகால வரலாறு இதற்கு சான்று.

நாங்கள் எப்போது ஒன்றை நிராகரிக்க ஆரம்பிக்கின்றோமோ அப்போதே அதன் வலுவும் குறைய ஆரம்பிக்கின்றது. இவ்வாறு ஒரு critical mass ஆகிய மக்கள், அதாவது தகுந்த அளவிலான மக்கள் ஒரு பொது அநீதியை நிராகரிக்கும்பொழுது அப்பொழுதே அது மாற்றமடைகின்றது. சகிப்புத் தன்மையும் ஜனநாயகப் பண்பும் அவ்வாறுதான் ஒரு சமூகத்தில் வேரூன்றுகின்றன.

சுதந்திரமான கருத்தாடல் இல்லாத சமூகத்தில் ஒன்றுமே விருத்தியடையாது. இதுதான் உண்மை.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மேல் மாகாண சாகித்திய விழாவும்

## கலைமகளின் கண்ணீரும்



**மருதானை** எல்பின்ஸ்டன் அரங்கு வாழைமரங்களாலும் தென்னங்குருத்துத் தோரணங்களாலும் அன்று விழாக்கோலம் பூண்டிருந்தது. தசாப்தங்கள் தாண்டிவரும் மேல் மாகாண தமிழ் சாகித்திய விழா அது. மிகுந்த எதிர்பார்ப்புக்களுடன் நாங்களும் சென்றோம்.

வடக்கு, கிழக்கு மற்றும் மலையகத்தைச் சேர்ந்த கணிசமான தமிழ் மக்கள் கொழும்பைத் தமது வாழ்விடமாகக் கொண்டிருக்கிறார்கள். ஆனாலும் தமிழ் பேசும் மக்களின் கலை, இலக்கிய முயற்சிகளுக்கு உற்சாகமும் உந்து சக்தியும் அளிக்கக்கூடிய ஒரு களமாக தலைநகர் ஏனோ அமையவில்லை. மேல் மாகாண சபை நடாத்திய முதலாவது தமிழ் மாகாண சாகித்திய விழா இதுதான். மிக நீண்டகாலக் குறைகளைத் தீர்க்கும் வகையில் மேல் மாகாண சபை உறுப்பினர் எஸ். இராஜேந்திரனின் அயரா முயற்சியில் மாகாண சபை, கலாசார விளையாட்டுத்துறை அமைச்சினால் இவ்விழா நடத்தப்பட்டது. இவ்விழாவில் பலரும் கௌரவிக்கப் பட்டனர். அதிகபட்சம் ஒரு 1300 பேரைத் தாங்கக்கூடிய அந்த மண்டபம் மேலதிகமாக வந்திருந்தவர்களை தாங்கமுடியாமல் திண்டாடியது. வழமைபோல் விழா மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமாகியது. தமிழ் சாகித்திய விழாவின் வரவேற்புரை சிங்களத்தில் வாசிக்கப்பட்டதில் ஆரம்பித்த சலிப்பு, சகிப்பின் எல்லையை தொடர்ந்தும் தாண்டிய வண்ணம் இருந்தது. அதிக மொழிபெயர்ப்புக்கள், சிங்கள உரைகள், தேவையற்ற முகஸ்துதிகள், இதைவிட ஆளுங்கட்சியினரும் எதிர்க்கட்சியினரும் தமது உரையில் ஒருவரையொருவர் சாடித், தத்தமது கட்சி அரசியலைப் பேச முனைந்ததால் சாகித்திய விழாவைப் பார்க்க வந்த பலர் வெறுத்துப்போய் தூங்கிவழிந்து கொண்டிருந்தனர். ஏன் இந்தக் குளறுபடிகள்? நடந்ததை அறிய களத்தில் குதித்தது இருக்கிறம். ஏற்கனவே உண்மைகளை எழுதப்போய் சர்ச்சைகளில் சிக்கியுள்ள எமக்கு இது ஒன்றும் புதிதல்லவே. விருது வாங்கியவர்கள், விழா ஏற்பாட்டாளர்கள், வந்திருந்தவர்கள் என பலதரப்பட்டவர்களையும் சந்தித்தது இருக்கிறம். பல ஆச்சரியமான தகவல்கள் வெளிவந்தன. தகவல் தந்தவர்கள் மறக்காமல் சொன்ன ஒரேயொரு விடயம் "நாங்கள் கூறியதாக எழுத வேண்டாம், பெயர்களை போடவேண்டாம்" என்பது மட்டுமே. ஏன் இந்த நிலை? அங்கு நடந்த தெரிவுகளில் ஏற்பட்ட குளறுபடிகளை பரிசுபெற்றவர்களே பரிகசித்ததைப் பார்த்தோம்.

கௌரவிக்கப்படவேண்டிய மூத்தவர்கள் எத்தனையோபேர் இருக்க தம்மைப் புகழப் பயன்படக்கூடிய ஊடகவியலாளர்களுக்கு அதீத முக்கியத்துவம் அளித்து விருது கொடுத்திருக்க வேண்டிய தேவையில்லை. அதிகமாக ஊடகவியலாளர்களுக்கே விருதுகள் கொடுக்கப்பட்டதாக பெரும்பாலானவர்கள் தெரிவித்தனர். இவர்கள் விருது கொடுத்த ஏனைய பல கலைஞர்களை விட விருது கொடுக்கத் தகுதியுள்ள எத்தனையோ 'கலைஞர்கள் மேல் மாகாணத்திலே இருக்கின்றார்கள். சாகித்திய விழாவை நடத்த முதல், மேல் மாகாணத்தினுடைய இலக்கிய வளர்ச்சி பற்றிய அறிதலை இவர்கள் சரியாகச் செய்திருக்க





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வேண்டும். தேவைப்பட்டவர்களுக்கு பரிசும் பொன்னாடையும் அணிவிப்பது சாகித்திய விழா அல்ல. அடுத்தது அன்று வெளியான சிறப்பு மலர். அதில் பேராசிரியர் சிவத்தம்பி சஞ்சிகையொன்றில் எழுதிய பந்தியை கத்தரித்து வெளியிட்டிருக்கிறார்கள். மேல் மாகாண இலக்கிய வளர்ச்சியில் சிவத்தம்பி அவர்களின் பங்கு என்ன? அது பற்றி அவர் என்ன சொல்கிறார்? என்பதைப் போட்டிருக்கலாம். நாங்கள் விசாரித்த அளவில் சாகித்திய விழா ஏற்பாட்டுக் குழுவில் இலக்கியத் துறையைச் சார்ந்தவர்கள் இல்லை. எழுத்தாளர் தெளிவத்தை யோசப் மட்டுமே இருந்தார். குழுவில் இருந்ததாக இதழில் பிரசுரிக்கப்பட்ட அந்தனிஜீவா மற்றும் கலைச்செல்வன் ஆகியோர் அந்தக் கூட்டத்தில் சமூகமளித்திருக்கவில்லை. இப்படி ஒரு மலர் தயாரித்ததே அவர்களுக்குத் தெரிந்திருக்குமோ தெரியாது.

சாகித்திய விழா எனும்போது அந்தந்த மாகாணத்தைச் சேர்ந்த இலக்கியவாதிகளுக்கே விருதுகள் வழங்கப்படவேண்டும். அதை வட கிழக்கு மாகாணம் அப்படியே செய்து வருகிறது. ஆனால் மேல்மாகாண சாகித்திய விழாவில் அப்படி நடைபெறவில்லை. மற்றைய மாகாணங்களில் பரிசு வாங்கிக் கொண்டவர்களும் இங்கு வாங்கியிருக்கிறார்கள். பரிசு பெற்றவர்களே மறுபடியும் மறுபடியும் பரிசு பெற்றுக் கொண்டிருந்தால் ஏனைய கலைஞர்களின் நிலை என்னாவது? இங்கு 40க்கும் அதிகமானோருக்கு பரிசு வழங்கப்பட்டதாயினும் சுமார் 25 பேருக்கு மட்டுமே பணத் தொகை வழங்கப்பட்டது. ஏன் இந்த பாகுபாடு? எல்லோருக்குமே கொடுத்திருக்க வேண்டும். தமக்கு வேண்டியவர்களுக்கும் சார்ந்தவர்களுக்கும் மட்டுமே கொடுத்து திருப்திப்படுத்தியிருக்கிறார்கள் போல்தான் தெரிகிறது. பரிசளிப்பும் கௌரவமும்தான் இங்கு முக்கியமாக இடம் பெற்றது. படங்களில் இடையிடையே வரும் அனுசரணையாளர்களின் விளம்பரங்களைப் போல நடனங்கள் ஒரு சில இடம்பெற்றன. இதுதான் சாகித்திய விழாவா? உண்மையில் இது சாகித்திய விழா அல்ல. கௌரவிப்பு விழா என்றே பலரும் தெரிவிக்கின்றனர்.



உண்மையில் இந்த நிகழ்ச்சியைச் செய்த இராஜேந்திரனைப் பாராட்டவேண்டும். அவருக்கு சாகித்தியம், கலை, இலக்கியங்களில் அதிக ஈடுபாடு இல்லை. ஆனால் இப்படியொரு நிகழ்வை நடாத்தவேண்டும் என நினைத்தாரே அதுவே போதும். இந்த மாகாண சபையில் மதிப்பிற்குரியவர்களான செல்லச்சாமி, யோகராஜன், ராமதாஸ், வேலம்மாள் செல்லச்சாமி, மனோகணேசன், பிரபா கணேசன், குமரகுருபரன் எனப் பலர் இருந்திருக்கிறார்கள். இவர்கள் செய்யாத ஒன்றை ராஜேந்திரன் செய்து காட்டியுள்ளார். பிரபா கணேசனும் குமரகுருபரனும் இந்த நிகழ்வுக்காக நன்கொடையாகக் கொடுத்த 6 இலட்சம் ரூபாய்களையும், கலாச்சார அமைச்சு கொடுத்த சிறு தொகைப் பணத்தையும் வைத்து அமைச்சு சார்பில் இந்த நிகழ்வு நடத்தப்பட்டதாக எங்களுக்குக் கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன. ஆனால் இது மேல்மாகாண சபையின் சாகித்திய விழா என்று எந்த இடத்திலும் போடப்படவில்லை. மேல் மாகாண சாகித்திய விழா என்றுதான் குறிப்பிடப்பட்டிருந்தது. மேல்மாகாண சபையின் சாகித்திய விழா என்றால்தான் அது அரசு சார்ந்த விழாவாக இருக்கும். இதற்கான விண்ணப்பப்படிவம் ஏற்கனவே பத்திரிகைகளில் விளம்பரப் படுத்தப்பட்டிருந்தது. விழா ஏற்பாட்டுக் குழுவினர் தமக்குத் தெரிந்தவர்கள் சிலருக்கு கையிலே கொடுத்துமிருக்கிறார்கள். அந்த விண்ணப்பப்படிவத்தில் 'தேசிய ரீதியில் இதுவரை விருது பெறாதவர்கள் இவ் விருதுக்கு விண்ணப்பிக்கலாம்' என குறிப்பிடப்பட்டிருந்தது. அப்படியாயின் இந்த சாகித்திய விழாவில் விருது வாங்கியவர்கள் எவரும் ஏற்கனவே தேசிய ரீதியில் விருது வாங்காதவர்களா?

சாகித்தியம் என்பது சமயம் சார்ந்த விழா அல்ல. தமிழ்பேசும் அத்தனை கலைஞர்களும் அவர்கள் எந்த மதம் சார்ந்திருந்தாலும் தமிழர்தான். விருதில் சமயச் சின்னங்களை பொறிப்பது நாகரீகமல்ல. அன்றையதினம் விருது வாங்கிய சில முஸ்லிம் கலைஞர்கள் விருதில் பொருத்தப்பட்டிருந்த சரஸ்வதியின் உருவத்தை கழற்றி எறிந்துவிட்டுச் சென்றதை நாம் அவதானிக்கத் தவறவில்லை. அது அவர்களின் தவறல்ல. ஏற்பாட்டாளர்களின் தவறு. ஒரு முஸ்லிம் கலைஞர்கூட "அந்த விருதை ஆசையாக வெளியில் வைக்க முடியவில்லை. மறைத்து வைக்க வேண்டியுள்ளது. இது எங்களுடைய மத, கோட்பாடுகளுக்கு முரணாக இருக்கின்றது" என்று எங்களிடம் குறைபட்டுக் கொண்டார்கள். தமிழ் மக்கள் தங்களது தனித்துவங்கள், வித்தியாசங்கள் என்பவற்றில் ஒரு அங்கீகாரத்தைப் பெறவும் ஒரு பல்கலாசாரப் பண்பாட்டுடன் வாழ்வதற்கான ஒரு முதிர்ச்சியினைப் பெறவும் நல்ல அடிப்படையாக அமைய வேண்டிய ஒரு நிகழ்வு குறுகிய அரசியல் இலாபங்களை தேடுபவர்களால் பகடைக்காயாக ஆடபட்டு விட்டதோ என்ற கவலை எழுந்தது. பாவம் சரஸ்வதி..

நல்லதோ கெட்டதோ திரு. ராஜேந்திரன் ஒரு நல்ல கைங்கரியத்தை ஆரம்பித்து வைத்திருக்கின்றார். பயணம் செய்யப் பாதையின்றி வளர்ந்தவர்ளுக்கு வழி தந்திருக்கிறார். வாழ்த்துக்கள் ராஜேந்திரன் அவர்களே.

-சாகித்யா-

படங்கள் : ராமதாஸ்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Oriflame இன் "அழகும் ஆடற்கலையும்"

அழகு என்பது ஆடம்பரத் தேவை என்று கருதிய காலம் மாறி அது ஒரு அத்தியாவசியத் தேவையாகிவிட்டது. அழகை விரும்பாதவர்கள் யாராக இருக்க முடியும்? அதிலும் குறிப்பாக இளம் பெண்கள் எதை விட்டுவைத்தாலும் தங்களை விதம்விதமாக அழகுபடுத்த விட்டு வைப்பதில்லை. அவர்களின் தேவை கருதி காணும் இடமெல்லாம் தற்போது பியூட்டிபாலர்கள் மலிந்து காணப்படுகின்றன. அதற்கான பயிற்சி வகுப்புகளும் ஆங்காங்கே நடாத்தப்பட்டு வருகின்றன. இன்று ஆடவர்கள் கூட அழகுக் கலையில் மிகுந்த ஆர்வத்தைக் காட்டி வருவது மறுக்கமுடியாத உண்மை.

அதற்கு 'உங்கள் வாழ்க்கையை வெற்றிகரமாக மாற்றியமைக்க நாங்கள் வழிகாட்டுகிறோம்' என்ற தொனிப் பொருளில் இடம்பெற்ற இலவசக் கருத்தரங்கும் கலை நிகழ்வுமே சாட்சி. Natural Swedis Cosmetic நிறுவனமான Oriflame நடாத்திய இந்நிகழ்வில் ஆண், பெண் என இருபாலாருமே கலந்து கொண்டது குறிப்பிடத்தக்கது. அழகாக மிளிர்வதே ஒரு கலை. அந்த அழகும் ஆடற்கலையும் ஒன்று சேர்ந்தால் எப்படியிருக்கும்? அழகையும் ஆடற்கலையையும் மையப்படுத்தி முதன் முறையாக, அதுவும் இலவசமாக, முற்று முழுதாக தமிழில் இடம்பெற்ற ஒரு நிகழ்வு இது என்பது குறிப்பிடத்தக்கது. இந்நிகழ்வு அண்மையில் கொழும்பு தமிழ்ச் சங்கம் சங்கரப்பிள்ளை மண்டபத்தில் காலை 10.00 மணியளவில் மங்கள விளக்கேற்றலுடன் ஆரம்பமானது. ஆரம்ப நிகழ்வாக நடன ஆசிரியை திருமதி. ஜெயாமுருகதாசனின் நெறியாழ்கையில் ஜெயபாரத சேஷ்த்திர நாட்டியப்பள்ளி மாணவிகளின் வரவேற்பு நடனம் இடம்பெற்றது. அதனைத் தொடர்ந்து அந்நிறுவன ஊழியர்களால் பல நடன நிகழ்வுகள் இடம்பெற்றன. இந்நிகழ்வுகள் அனைத்தும் ஒரு oriflame நிறுவனத்தின் அதிகாரியான திருமதி Vergia corera தலைமையில் இடம் பெற்றது. வாழ்வில் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் மகிழ்ச்சியுடன் திகழ அழகும் கலையும் எவ்வளவு முக்கியத்துவம் பெறுகின்றது என்பதைப் பற்றிய ஒரு தெளிவான கருத்து முன்னோட்டம் செல்வி. வித்தியா அருமைநாயகத்தால் வழங்கப்பட்டது. அத்துடன் இலவசமாக அழகை மையப்படுத்திய ஒரு செய்கை முறையும் செய்து காட்டப்பட்டது.

இந்நிகழ்வினை நடாத்தியதன் நோக்கம் பற்றி அந்நிறுவனத்தின் அதிகாரிகளிடம் கேட்டோம். "oriflame இலங்கையில் ஆரம்பித்து 13 வருடங்களாகிவிட்டது. இப்போதுதான் முதன் முறையாக தமிழ் மக்களுக்காக அழகுக் கலை பற்றிய பயிற்சி நடாத்தப்பட்டது. இதன் நோக்கம் அழகுக்கலைபற்றிய பயிற்சி வழங்குவது, அதன்மூலம் பணம் சம்பாதிப்பது, அத்துடன் வாழ்க்கையில் சந்தோஷமாக இருப்பது. அதனால்தான் இவ்வழகுக்கலை நிகழ்வோடு நாங்கள் கலை, கலாசார நிகழ்வையும் நடாத்தினோம். இன்று நாங்கள் எதிர்பார்த்ததைவிட அதிகமானோர் வந்திருந்தனர். இவர்கள் போய் மற்றவர்களிடமும் இந்நிகழ்வைப் பற்றி கூறும்போது அது ஒரு நல்ல ஆரம்பமாக இருக்கும்" என்று கூறினர்.

இந்நிகழ்வானது முற்றுமுழுதாக தமிழ்பேசும் மக்களுக்காக நடாத்தப்பட்டது, மனநிறைவைத் தந்தது. அங்கு வந்திருந்தவர்களுக்கு இலவச ஆலோசனை வழங்கியது மட்டுமன்றி ஆண், பெண் என்ற பேதமின்றி வந்திருந்த பார்வையாளர்களிடையே சிறு போட்டி நிகழ்வுகள் நடாத்தப்பட்டு oriflame நிறுவனத்தினரால் விலையுயர்ந்த நினைவுப் பரிசுப் பொதிகளும் வழங்கப்பட்டன.

தமிழ் மக்களுக்காக நீங்கள் இனி வரும் காலங்களில் எவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட இருக்கின்றீர்கள் என்று கேட்டபோது "வடக்கு, கிழக்கிற்குச் செல்லும் ஒரு வாய்ப்பு நீண்ட காலத்துக்குப் பிறகு கிடைத்துள்ளது. எங்களது பயணத்தை வடக்கு, கிழக்கை நோக்கி விஸ்தரிக்க உள்ளோம். Oriflame என்பது வெறுமனே அழகுசாதன பொருட்கள் என்ற கருத்து நிலவி வருகின்றது. எங்களது நோக்கங்களில் ஒன்று மகிழ்ச்சியாக இருப்பது. (Have fun) அதாவது யுத்தத்தால் இழந்த சந்தோசத்தின் ஒரு பகுதியை பெற்றுத்தர இது உதவும். அவர்களது ஓய்வு நேரத்தில் மேலதிக பணத்தினை சம்பாதிக்கக் கூடியதாக இருப்பது, அவர்களின் முன்னேற்றத்துக்கு ஒரு பாலமாக அல்லது ஏணிப்படியாக இருக்கும் என்பது நிச்சயம்" என்றும் கூறினர்.

சர்வதேசத்தை மையமாக கொண்டு இயங்கும் ஒரு நிறுவனம் எமது தமிழ் சமூகத்திற்கும் இவ்வாறான இரு இலவச நிகழ்வினை நடாத்தியது வரவேற்கத்தக்கது. இருந்தும் செய்கை முறையினை தவிர்த்து சில வழிமுறைகளை கூறியிருந்தால் இன்னும் சிறப்பாக இருந்திருக்கும். காரணம் அவர்களுடைய உற்பத்திகளை வைத்து செய்து காட்டியதால் அது எந்தளவு மக்களிடையே சென்றடைந்திருக்கும் என்பது கேள்விக்குறிதான். எது எப்படியோ? இலங்கையில் முதன் முறையாக தமிழில் நடைபெற்ற இந்நிகழ்வு எம்மவர்களுக்கு பயனளித்திருக்கும் என்பதில் ஐயமில்லை.

-ஹர்ஷினி-





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

01-01-2010 முதல் 15-01-2010 வரை

# ராசிபலன்

## மேடம்



**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1**

எடுக்கும் கருமங்கள் நல்ல முறையில் அமையாது. பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். கையில் பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவி செய்வர். மன அமைதி இருக்காது.

## இடபம்



**கார்த்திகை 2 ,3, 4 ரோகினி, மிருகசீரிடம் 1, 2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். தாய் நலம். தந்தை நலம் இல்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக எண்ணம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் தொல்லைவர வாய்ப்புண்டு. மன அமைதி இருக்கும்.

## மிதுனம்



**மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 -**

காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப்பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலம் இல்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக ஆர்வம் காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறையில் முன்னேற்றம் உண்டு. எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்களால் தொல்லை உண்டு. மன அமைதி இருக்காது.

## கடகம்



**கடகம்: புனர்பூசம் 4, பூசம், ஆயிலியம்**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் போதிய அக்கறை காட்டார். தேக ஆரோக்கியம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. திருமண வாய்ப்புண்டு. புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். மன அமைதி இருக்கும்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## சிம்மம்



**மகரம், பூரம், உத்தரம் 1**

காரிய தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் உதவுவர். மன அமைதி இருக்காது.

## கன்னி



**உத்தராடம் 2 ,3, 4, அத்தம், சித்திரை 1, 2**

காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயலவர் உதவி செய்வர். தாய் நலம் இல்லை. தந்தை நலம். வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. திருமண வாய்ப்பு கால தாமதம் ஆகலாம். புதிய முதலீடுகள் அமையலாம். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மேலோங்கும். தொழில் துறை முன்னேறும். நண்பர்கள் உதவார். மன அமைதி இருக்கும்.

## துலாபம்



**சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3**

காரிய சித்தி உண்டு. பிரயாண வாய்ப்பு உண்டு. பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலமில்லை. நல்ல வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் திறன் முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். நண்பர்கள் விசுவாசமாக இருப்பர். மன அமைதி இருக்கும்.

## விருச்சிகம்



**விசாகம் 4, அனுஷம், கேட்டை**

காரிய தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை இருக்கும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் கூடுதலான அக்கறை காட்டார். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை வர வாய்ப்புண்டு. மன அமைதி இராது.

## தனு



**மூலம், பூராடம், உத்திராடம்**
காரிய தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகைகொள்ளக் கூடும். தாய் நலமில்லை. தந்தை நலம். வீடு வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் பாதிக்கலாம். பகைவரால் தொல்லை உண்டு. திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறும். மன அமைதி இருக்காது.

## மகரம்



**உத்தராடம் 2, 3, 4, திருவோணம், அவிட்டம் 1, 2**
காரிய சித்தியுண்டு. பிரயாண வாய்ப்புண்டு. பணம் இருக்கும். உறவினர், அயல்வர் உதவி செய்வர். பெற்றோர் நலமில்லை. வீடு, வாகனம் செலவை ஏற்படுத்தலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இருக்காது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாகலாம். மன அமைதி இருக்கும்.

## கும்பம்



**அவிட்டம் 3 ,4, சதயம், பூரட்டாதி 1, 2, 3**
காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் விசுவாசமாக இருப்பர். பெற்றோர் நலம். நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் ஆர்வம் காட்டுவர். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் அதிகரிக்கும். அதிஷ்டம் உண்டு. தெய்வீக நாட்டம் மெலோங்கும். தொழில் துறை முன்னேறும். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. நண்பர்களால் பிரச்சினை உருவாக வாய்ப்புண்டு. மன அமைதி இருக்காது.

## மீனம்



**புரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி**
காரியத் தடை இருக்கும். பிரயாண வாய்ப்பு பாதிக்கலாம். பணப் பற்றாக்குறை நிலவும். உறவினர், அயலவர் பகை கொள்ளக்கூடும். தாய் நலம். தந்தை நலம் இல்லை. நல்ல வீடு, வாகனம் அமையலாம். மாணவர்கள் கல்வியில் அதிக அக்கறை காட்டார். உடல் நலம் உண்டு. பகை விலகும். திருமண வாய்ப்புண்டு. முதலீடுகளால் லாபம் குறையலாம். அதிஷ்டம் இராது. தெய்வீக நாட்டம் குறையலாம். தொழில் துறையில் முன்னேற்றம் குறையலாம். எதிர்பார்ப்புகள் நிறைவேறாது. மன அமைதி இராது.

**சோதிடர் பொ. சந்திரலிங்கம்**
இணுவில், யாழ்ப்பாணம்.



# உதவும் வழி

இனியா

ஒரு நாள் ஒரு மதகுரு இயேசுவை மடக்க வேண்டும் என்ற எண்ணத்தில் அவரிடம் வந்து வாழ்க்கையில் எல்லாம் கிடைக்க வேண்டும் என்றால் நான் என்ன செய்ய வேண்டும் எனக் கேட்டார். அதற்கு இயேசு, ஆண்டவரின் சட்டங்களை போதிப்பவர் நீங்கள். அது என்ன கூறுகிறது? எனக் கேட்டார். மத போதகர் ஆண்டவரிடம் அன்பு செலுத்து. அவரை எப்பொழுதும் நினை. உனக்கு நெருங்கியவர்களை நேசி எனக் கூறப்பட்டிருக்கிறது என்றார் இயேசு. நீங்கள் அதன் படி செயலாற்றுங்கள் என்றார்.


மத போதகர் யார் எனக்கு நெருங்கியவர் எனக் கேட்கவும் இயேசு ஒரு கதை சொன்னார்.

ஜெருசலேமிலிருந்து எரிக்கோவிற்கு ஒருவர் சென்று கொண்டிருந்தார். வழி யில் கொள்ளையர்கள் அவரை வழி மறித்து அடித்து அவரிடமிருந்து பணாங் களையும் பறித்து சென்று விட்டனர். அவர் பாதி இறந்த நிலையில் சாலை யில் விழுந்து கிடந்தார். அப்போது அந்த வழியே வந்த மதகுரு அந்த மனிதனைக் கண்டு விட்டு அவனுக்கு உதவாமல் சாலையின் மறுபக்கம் வழியாக சென்றுவிட்டார்.

அதன் பின் கோயில் ஊழியன் ஒருவன் வந்தான். அவனும் மதகுரு போலவே சாலையைக் கடந்து சென்றுவிட்டான். ஆனால் அப் போது அந்த பக்கம் வந்த வழிப் போக்கன் அடிபட்டு கிடந்த மனித னுக்கு முதலுதவி அளித்து அவரை ஒரு விடுதியில் சேர்த் தார். அதன் பின் அங்கிருந்து செல்லும் போது விடுதிக் காவலா ளியிடம் இவரை நன்றாக கவனித்துக்கொள்ளுங்கள். இவருக்காக நீங்கள் செலவு செய்யும் பணத்தை நான் அடுத்த முறை வரும் போது தருகிறேன் என சொல்லிச்சென்றார்.

இந்தக் கதையை சொன்ன இயேசு மத போதகரிடம், இவர்களில் யார் அடிபட்ட வருக்கு நெருங்கியவர் எனக் கேட்டார். மதகுரு, அவருக்கு உதவிய வழிப்போக்கன் தான் என்றார்.

அதேபோல் கஷ்டத்தில் இருப்பவருக்கு உதவி செய்யுங்கள். அதுவே நெருங்கியவர் களுக்கு உதவும் வழி என இயேசு கூறினார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைந்த பக்கங்கள்...

மயில்வாகனம் சர்வானந்தா



## காதல் மன்னன் ஜெமினிகணேசன்

1920ம் ஆண்டு நவம்பர் 20ம் திகதி இராமசாமிக்கும் கங்கம்மாவுக்கும் மகனாகப் பிறந்தார் கணேசன். இவர் பிறந்த போது இவரது சின்னத்தாத்தா ஜெமினிக்கு வைத்தபெயர் கணபதி சுப்பிரமணிய சர்மா. கணேசனை சின்னத்தாத்தா நாராயண சாமி சிறு வயதிலேயே தத்தெடுத்து வளர்த்தார். சென்னை தாம்பரம் கிறிஸ்தவக் கல்லூரியில் படிக்கும் போது கணேசனை டொக்டராகவோ ஐ. ஏ. ஸ், ஐ. பி. ஸ் படித்த அரச அதிகாரியாகவோ உருவாக்கிப் பார்க்கவே குடும்பத்தினர் விரும்பினர். கணேசனுக்கு மேலே படிக்க வேண்டும் என்ற ஆசை. படிக்க வாய்ப்பில்லாவிட்டால் வேலை தேடலாம் என்ற எண்ணத்தில் இருந்தபோது கணேசனுக்கு கலியாண ஏற்பாடுகள் இடம்பெறத் தொடங்கின. 1940ம் ஆண்டு யூன் மாதம் 30ம் திகதி கணேசன்-பாப்ஜி திருமணம் நடைபெற்றது. திருமணம் முடிந்த சில நாட்களிலேயே ஜெமினியின் வாழ்வில் தொடர்ந்து துன்பமான சம்பவங்கள் தொடர்ந்தன. பாப்ஜியின் அக்காவின் கணவர், அப்பா, அக்கா என்று தொடர் மரணங்கள் ஏற் பட்டன. கணேசன் - பாப்ஜி தம்பதி களுக்கு பெண் குழந்தை பிறந்தது. அதற்கு ரேவதி என பெயரிட்டனர். கணேசன் குடும்பத்தில் சுமைதாங்கி ஆனார். இதுவே ஜெமினியின் ஆரம்ப வாழ்க்கை.

ஜெமினி ஸ்ரூடியோ பலருக்கு கோடம்பாக்கத்தின் நுழைவாயிலாகவே இருந்தது. ஜெமினி ஸ்ரூடியோவில் நல்ல சம்பளத்தில் நூற்றுக்கணக்கான கலைஞர்கள் நாட்டியம், நடிப்பு, கதை, இசை, கமரா, தயாரிப்பு, நிர்வாகம், இயக்கம் என பல்வேறு துறைகளில் பணிபுரிந்து வந்தார்கள். ஜெமினி ஸ்ரூடியோவிலிருந்து கணேசனுக்கு நேர்காணல் கடிதம் வந்தது. கல்லூரி நாட்களில் நடித்த கணேசன் தான் நடிகனாகி விட்டதாக கனவு கண்டார். ஜெமினி ஸ்ரூடியோவில் ஒலிப்பதிவு மேதையாக இருந்த கே.ராம்நாத் ஜெமினிக்கு முதலில் ஸ்கிறீன் ரெஸ்ட் எடுத்தார். அப்போது ஜெமினி உரிமையாளர் எஸ்.எஸ் வாசனும் உடனிருந்தார். ஒரு வாரத்தின் பின் ஜெமினியை, நடிகர்களை தெரிவு செய்யும் உதவியாளராக தேர்ந்தெடுத்தார்கள். ஜெமினிக்குள் நுழையும் வாய்ப்பை பயன்படுத்திக்கொள்ள அந்தப்பணியில் சேர்ந்தார்.

ஜெமினி ஸ்ரூடியோ, கொத்தமங்கலம் சுப்புவை கதாநாயகனாக வைத்து 'மிஸ் மாலினி' படத்தை









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தயாரித்தது. புஸ்பவல்லி கதாநாயகி, பிரபல எழுத்தாளர் ஆர். கே நாராயணன் கதை எழுதினார் இயக்கம் கே.ராம் நாத் இதில் இயக்குனராக ஜாவர் சீதா ராமனும் உதவி இயக்குனராக ஜெமினியும் நடித்தனர். கணேசனின் முதல் திரைப்படமாக மிஸ் மாலினி வெளிவந்தது.

1948 இல் ஜெமினி நிறுவனம் தயாரித்த பாண்டு ரங்க பக்தர் படத்தில் நாகையா பிரதான வேடத்திலும், புஸ்பவல்லி கதாநாயகியாகவும் நடித்தார். கணேசன் பாண்டுரங்கனாக நடித்தார். ஜெமினி ஸ்ரூடியோவின் படங்களில் நடித்துக்கொண்டிருந்த நடிகை புஸ்பவல்லியோடு, கணேசனுக்கும் நெருக்கம் அதிகரித்தது. இருவரும் காதலிக்க ஆரம்பித்தனர். பின்னர் ஒன்றாக குடும்பம் நடத் தினர். குழந்தைகள் பிறந்தனர். இதன் பின்னர் பிரபல ஆங்கில நாவல் ஆசிரியை மிஸிஸ் HENDRYWOOD எழுதிய கதையொன்றை 'தாயுள்ளம்' என்ற பெயரில் கே. ராம்நாத் தயாரித்தார். இதில் R.S. மனோகர் கதாநாயகன், கணேசன் வில்லனாக நடித்தார். படம் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. 'மனம் போல் மாங்கல்யம்' படத்தில் முதன்முதலில் ஜெமினி கதாநாயகனாக நடித்தார். அதுவும் இரட்டைவேடம். இவருக்கு ஜோடியாக சாவித்திரி, எஸ். பாலசரஸ்வதி தெலுங்கு நடிகையான சாவித்திரி இப்படத்துக்காக சிரத்தையெடுத்து தமிழைக் கற்றுக்கொண்டார். மனம்போல் மாங்கல்யம் கணேசனுக்குத்தான் முதல் கதாநாயகன் படம். சாவித்திரி இதற்குள் பல படங்களில் சிறு சிறு வேடங்களில் நடித்திருந்தார். அதே வேளை 'தேவதாஸ் படத்தில் கதாநாயகியாக புகழ் பெற்றிருந்தார். சாவித்திரியின் அழகு, நடிப்பு சுறுசுறுப்பு என்பன கணேசனைக் கவர்ந்தது. ஜெமினி கணேசனின் பார்வை, திறமை, அழகு என்பன சாவித்திரியை ஈர்த்தது. சினிமா ஸ்ரூடியோக்களில் அவர்களது காதல் வளர்ந்தது. மனம் போல் மாங்கல்யம் ஒத்திகையில் தொடங்கி அந்தக்காதல் 1953 நவம்பர் 5ம் திகதி தீபாவளியன்று படம் வெளியான போது, அது அவர்களுக்கு தலைத் தீபாவளியாக அமைந்தது. இதனைத் தொடர்ந்து A. V. M இன் தயாரிப்பில் 'பெண்' திரைப்படம் வெளிவந்தது. கணேசன் நடித்த 'மிஸ்ஸியம்மா'வின் மகத்தான வெற்றிக்குப் பின்னரே இவர் ஜெமினிகணேசன் ஆனார்.





இதன் பின்னர் ஜெமினி - சாவித்திரி ஜோடிக்கு அசாதாரண நட்சத்திரப் புகழ் கிடைத்தது. இரகசியமாக இருந்தவர்களது காதல் கொஞ்சம் கொஞ்சமாக கிசு கிசுவாக வெளிவந்தது. 'மிஸ்ஸியம்மா' படப்பிடிப்பு நடந்துகொண்டிருந்தபோது ஒருநாள் சாவித்திரி ஜெமினி வீட்டுக்கு வந்து சேர்ந்துவிட்டார். அடைக்கலம் தேடி வந்த சாவித்திரியை கோபிக்காமல் அடைக்கலம் கொடுத்தார். ஜெமினியின் முதல் மனைவி பாப்ஜி.

ஒருவருக்குத் தொடர்ந்து வெற்றி கிடைப்பது என்பது அரிது. ஆனால் ஜெமினிக்கு தொடர்ந்து வெற்றி கிடைத்தது. ஜெமினி -அஞ்சலி தேவி நடித்த கணவனே கண்கண்ட தெய்வம் 1955இல் வெளியாகி மதுரையில் வெற்றி விழாக் கொண்டாடியது. இதனை ஹிந்தியில் தயாரித்தபோது அதிலும் கதாநாயகனாக நடிக்கும் வாய்ப்பு ஜெமினிக்கே கிடைத்தது. 1956ம் ஆண்டு ஜெமினி, பானுமதியுடன் இணைந்து நடித்த படம் 'சதாரம்'. இதனைத் தொடர்ந்து பெண்ணின் பெருமை, ஆசை, பிரேமபாசம், காலம் மாறிப் போச்சு, மாதர் குல மாணிக்கம் என்பன வந்து நல்ல வசூலைக்குவித்தன. 'கணவனே கண்கண்ட தெய்வம்' படத்தின் அமோக வெற்றியைத் தொடர்ந்து ஜெமினி கணேசனின் படங்களில் மாயாஜால தந்திரக் காட்சிகள் இடம்பெறத் தொடங்கின. அஞ்சலி தேவியின் தயாரிப்பான 'மணாளனே மங்கையின் பாக்கியம்' படத்திலும் இவ்வாறான காட்சிகள் இடம்பெற்றன. ஜெமினியின் நடிப்பில் 'யார் பையன்'? 'மாதர் குல மாணிக்கம்', மர்ம வீரன் என்பன வெளிவந்தன. மர்ம வீரன் படத்தில் ஜெமினி கௌரவ வேடத்தில் நடித்திருந்தார். ஜெமினி ஸ்ரூடியோவில் கணேசனாக வேலை பார்த்த போது சிறு சிறு வேடங்களிலே வாய்ப்புக் கொடுத்த எஸ்.எஸ். வாசன் கணேசனை வைத்து பிரமாண்டமான படத்தை தயாரிக்க எண்ணினார். ஜெமினி, வைஜந்திமாலா, பத்மினி, வீரப்பா என பலரின் நடிப்பில் வெளியாகி சாதனை படைத்தது 'வஞ்சிக் கோட்டை வாலிபன். ஜெமினி - சாவித்திரி ஜோடியாக நடித்த படங்கள் ரசிகர்கள் மத்தியில் நல்ல வரவேற்பைப் பெற்றன. அவற்றில் மனிதன் மாறவில்லை, கடன் வாங்கிக் கல்யாணம், இரு சகோதரிகள் என்பவை குறிப்பிடத்தக்கவை. இந்நிலையில் பின்னர் மாற்றம் ஏற்பட்டது. 1957 - 1958 இல் வெளியான பத்தினித் தெய்வம், சௌபாக்கியவதி, மணமாலை, திருமணம் என்பன வெளியாகி ரசிகர்களின்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரவேற்பை பெறாமல் போயிற்று. அப்போதுதான் ஸ்ரீதரின் தயாரிப்பில் 'கல்யாணப்பரிசு' தயாரானது. ஜெமினி, சரோஜாதேவி, விஜயகுமாரி, தங்கவேலு, முத்துலட்சுமி ஆகியோர் நடித்து வெளிவந்த 'கல்யாணப் பரிசு' சுப்பர் ஹிட் ஆனது. கல்யாண பரிசு 'மன்னார் அண்ட் கம்பனி' நகைச்சுவை கே.ஏ.தங்கவேலுவுக்கு பெரும் புகழைப் பெற்றுத் தந்தது. 'வீரபாண்டிய கட்டபொம்மன்' 'ஜெமினிக்கு நல்ல பெயரைப் பெற்றுத் தந்தது. 1957 இல் ஜெமினி - சாவித்திரிக்கு பெண்குழந்தை பிறந்தது. அந்தக் குழந்தைக்கு விஜயாசாமுண்டீஸ்வரி என பெயர் வைத்தனர். 1960இல் கல்கியின் பிரபல நாவலான பார்த்தீபன், ஜெமினி வைஜந்திமாலா ஜோடியுடன் மிகப்பெரிய எதிர்பார்ப்புடன் உருவானது. படம் வெளிவந்தது. ஆனால் எதிர்பார்த்தபடி ஓடவில்லை.

A. V. Mஇன் தயாரிப்பில் உருவான களத்தூர் கண்ணம்மா, ஜெமினி சாவித்திரி ஜோடியாக வெளிவந்து வெற்றிகரமாக ஓடியது. இதனைத் தொடர்ந்து அம்மாவும் நீயே அப்பாவும் நீயே' என்ற பாடலுக்கு வாயசைத்தபடி ஒரு சிறுவன் அறிமுகமானான். அவன் தான் பின்னாளில் நவரசநாயகனான பத்மஸ்ரீ கமல் ஹாசன். ஸ்ரீதரின் டைரக்ஷனில் பின்னர் வெளிவந்தது 'மீண்டசொர்க்கம்'. இது ஜெமினி - பத்மினி ஜோடியாக நடித்து வெளிவந்தது. படம் எதிர்பார்த்தபடி ஓடவில்லை. 1960 இல் ஜெமினி - சரோஜாதேவி நடித்து வெளியான 'கைராசி' ரசிகர்களின் பாராட்டைப் பெற்று வெற்றிகரமாக ஓடியது. இதனைத் தொடர்ந்து ஸ்ரீதர் தயாரித்த 'தேன்நிலவு' உருவானது. ஜெமினி, வைஜந்திமாலா ஜோடியாக நடித்து வெளிவந்தது. காஷ்மீரில் உருவான படம், மிக எதிர்பார்ப்புடன் வெளிவந்தும் எதிர்பார்த்த வெற்றியைத் தரவில்லை. இப்படியே ஜெமினி கணேசன் நடித்த படங்கள் தொடர்ந்து வெளிவந்தன. அவை, பார்த்தால் பசிதீரும், கொஞ்சும் சலங்கை, பாதகாணிக்கை, ஆடிப் பெருக்கு, சுமைதாங்கி.

சுமைதாங்கியைத் தொடர்ந்து ஜெமினிக்கு மிகப்பெரிய இமேஜைத் தந்த படம் கற்பகம். 1963ம் ஆண்டு தீபாவளித் தினத்தன்று வெளிவந்த இப்படத்தில் கே. ஆர். விஜயா அறிமுகமானார். படத்தை தயாரித்தவர் கே. எஸ். கோபாலகிருஷ்ணன். அதன்பின் வெளிவந்த கிருஷ்ணன் - பஞ்சுவின் 'வாழ்க்கை வாழ்வதற்கே', கே. எஸ். கோபாலகிருஷ்ணனின் 'ஆயிரம் ரூபாய்', ஜெமினியின் 'வாழ்க்கைப் படகு' என்பன வெளிவந்து சுமாராகவே ஓடியன. மொடேன் தியேட்டர்ஸ் தயாரித்த 'வல்லவனுக்கு வ்லலவன்' படத்தில் முதன் முதலாக ஜெமினி வில்லனாக நடித்தார். கதாநாயகன் அசோகன். சாவித்திரி ஒரு பாடல் காட்சியில் மட்டும் கௌரவ நடிகையாக வந்துபோனார். ஜெமினி - சாவித்திரி உறவில் கொஞ்சம் விரிசல் விழுந்தது.

1967 இல் கே. எஸ். கோபாலகிருஷ்ணன் தயாரித்த இரண்டு படங்களில் பெயரளவில் ஹீரோவாக நடித்தார் ஜெமினி. திருமணத்திற்குப் பின்னர் பத்மினி திரையுலகில் பிரவேசித்த படம் 'சித்தி'. அடுத்த படம் 'சின்னஞ்சிறு உலகம்.' ஜெமினியின் நூறாவது படம் 1967 இல் வெளிவந்த 'சீதா'. 1968இல் கே.எஸ். கோபாலகிருஷ்ணன் தயாரித்த 'பணமா? பாசமா?' ஜெமினியின் கதாநாயகன் அந்தஸ்த்தை மீண்டும் உயர்த்தியது. ஜெமினி, சரோஜாதேவி, ரி.கே. பகவதி, எஸ். வரலட்சுமி, விஜயநிர்மலா, சிவகுமார், புஸ்பலதா ஆகியோர் நடிப்பில் வெளிவந்து தமிழ்நாட்டையே கலக்கியது. 1968 இல் கே. பாலச்சந்தரின் தயாரிப்பில் ஜெமினி நடித்த தாமரை நெஞ்சம் தமிழக அரசின் சிறந்த படமாகத் தேர்வு பெற்றது. இதன்பின் 'இரு கோடுகள்' வெளிவந்து ஜெமினியின் கௌரவத்தை மேலும் உயர்த்தியது. 1969 இல் குழந்தை உள்ளம், தங்கமலர், ஐந்துலட்சம், பூவா? தலையா? சாந்தி நிலையம், குலவிளக்கு என்பன வெளிவந்தன.

1970 இல் குறிப்பிடத்தக்க படங் கள் என்றால் சிநேகிதி, காவியத் தலைவி, எதிர்காலம்.

1971 இல் நூற்றுக்கு நூறு, திருமகள், அவளுக்கென்று ஓர்மனம், ரங்கராட்டினம்.

1972 இல் கண்ணா நலமா? குறத்திமகன், வெள்ளிவிழா

1973 இல் கங்கா கௌரி, ஸ்கூல் மாஸ்டர்

1974 இல் மலை நாட்டு மங்கை, நான்அவனில்லை

1975 இல் தசாவதாரம், சுவாமி ஐயப்பன்

1976 இல் உனக்காக நான், இதய மலர், லலிதா

1978 இல் காஞ்சி காமாட்சி

1979 இல் அலாவுதீனும் அற்புத விளக்கும்

1983 இல் ஒப்பந்தம், சூரக்கோட்டை சிங்கக்குட்டி

பின்நாட்களில் பல படங்களில் கௌரவ வேடங்களில் நடித்தார். அவற்றில் அவ்வை சண்முகி, காலமெல்லாம் காதல் வாழ்க, நாம் இருவர் நமக்கிருவர், கொண்டாட்டம், மேட்டுக்குடி, அடிதடி, ஜெமினி என்பன குறிப்பிடத்தக்கவை. ஜெமினியின் 85வது பிறந்த நாள் 17.11.2004 இல் கொண்டாடப்பட்டது. நோயுற்றிருந்த ஜெமினி 22.3.2005 இல் காலமானார். ஒரு நல்ல நடிகனுக்கு பலரும் அஞ்சலி செலுத்தினர்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னப் பையன்களே!

டொக்டர் எம்.கே.முருகானந்தன்.



## நீங்கள் பெரிய பிள்ளை ஆவது எப்போது?

பெண் குழந்தைகள் வளரும் போது உடல் வாளிப்படைகிறது மெருகேறுகிறது. தட்டையான மார்பில் குரும்பை அரும்புகிறது. எங்கிருந்து வந்ததெனத் தெரியாது கவர்ச்சி ஓடி வந்து அப்பிக் கொள்கிறது. பருவமடைதல் செய்யும் அற்புதம் இது. முதல் பீரியட் வந்ததும் அவள் பெரிய பெண்ணாகிறாள். ஆனால் பருவமடைதல் பெண்களுக்கு மட்டுமானது அல்ல. ஆண் குழந்தைகளும் பிள்ளைகளாக வளர்ந்து பருவமடையவே செய்கிறார்கள். ஆண் குழந்தை பெரிய பிள்ளை ஆவது எப்போது? இரவு படுக்கையில் தானாகவே விந்து வெளியேறிவிட அவசர அந்தரமாக காலையிலேயே பாத்ரூம் சென்று குளித்து அல்லது உடலைச் சுத்தம் செய்து சாரத்தையும் கழுவிப் போட்டுவிட்டு ஒன்றும் தெரியாத அம்மாஞ்சி 'போல வந்து அமர்ந்து கொள்கிறானே அப்பொழுதா?

இல்லை! ஆண்களைப் பொறுத்தவரையில் பருவமடைதல் என்பது ஒரு நாளில் திடீரென ஏற்படும் ஒரு நிகழ்வு அல்ல. படிப்படியாக ஏற்படும் மாற்றமாகும். உடல் வளர்கிறது. குரல் தடிப்படைகிறது. மீசை அரும்புகிறது. ஏனைய இடங்களிலும் முடி வளர்ச்சி ஏற்படுகிறது. 9 முதல் 14 வயது வரையான காலத்தில் பொதுவாக ஏற்படுகிறது. ஒவ்வொரு பையனும் தனது வளர்ச்சிக் கட்டத்தின் ஓரிடத்தில் பருவமடைகிறான்.

ஆயினும் பெரும்பாலும் ஆண்கள் பருவடைதல் பற்றி அதிகம் பேசப்படுவதில்லை. தகப்பன் கூட மகனுடன் பேசுவதில்லை. ஆசிரியர்கள் மாணவர்களுடன் பேசுவதில்லை. இதற்குக் காரணம் அவர்கள் மனதில் உள்ள தயக்கம் அல்லது வெட்க உணர்வு மட்டும்தான் என்பதில்லை. வளர்ந்த பல பெரியவர்களுக்கும் இவை பற்றிய தெளிவுகள் இல்லை **அதைப்பற்றிய சந்தேகங் கள் இருந்துகொண்டு தான் இருக் கின்றன..**

### உடல் வளர்ச்சி

பல பையன்கள் தனது வயது ஒத்த பெண் பிள்ளைகள் தன்னை விடத் தோற்றம் உள்ளவர்களாக வளர்வது கண்டு மனம் வெதும்புவதுண்டு. சில வேளைகளில் அவனது தங்கையே அவனைவிட வளர்த்தியானவளாக இருப்பதுண்டு. இதற்குக் காரணம் பெண்கள் சற்று முன்னராகவே பருவமடைவது தான். பெண்கள் 8 முதல் 13 வயதில் பருவமடையும்போது பையன்களுக்கு அது 9 முதல் 14 வயதாகக் காலம் சுணக்குகிறது.

அதற்குப் பின்னர் பொதுவாக பையன்கள் விரைவாக வளர்ந்து பெண்களைவிட உயர்ந்து விடுவது உண்டு. இருந்த போதும் இதில் பரம்பரை அம்சமும் முக்கிய இடம் வகிக்கிறது. பொதுவாக உயரமுள்ள குடும்பத்து பிள்ளைகள் உயரமாக வளர்வர்.

எதிர்பாலினரின் வளர்ச்சி மட்டுமின்றி தனது நண்பர்களின் உடல் மாற்றங்கள் கூட சில பையன்களைக் கலவரப் படுத்துகின்றன. தனது நண்பனைப் போல தனக்கு விரிந்த மார்பும் உயர்ந்த தோளும் இல்லையே என சில பையன்கள் கேட்பதுண்டு. விளையாட்டு மைதானத்தில் நண்பனின் தொப்புளுக்கு கீழும் அரையிலும் முடி அரும்புவது கண்டு எனக்கு அவ்வாறில்லையே எனது வளர்ச்சியில் குறைபாடு உள்ளதா என மனதிற்குள் கவலை கொள்ளும் பையன்கள் அதிகம்.

எல்லோரது வளர்ச்சியும் ஒரே விதமாக இருப்பதில்லை. ஒவ்வொருவரும் உடல் இயல்புக்கு ஏற்ற விதத்தில் வளர்கிறார்கள். பருவமடைகிறார்கள். எடை தூக்குவது போன்ற கடினமான உடற் பயிற்சிகள் செய்தால் விரைவில் மற்றவர்களைப் போல திடமாக வளரலாமா எனச் சிலர் முயற்சிப்பதுண்டு. உண்மையில் உங்களது உடலானது பருவமடைந்து அத்தகைய பயிற்சிகளுக்குத் தயாராகாத நிலையில் இருந்தால் அது நல்லதல்ல. சற்றுப் பொறுங்கள். அது வரை சைக்கிள் ஓட்டம் நீச்சல் போன்ற சாதாரண பயிற்சிகளும் போஷாக்குள்ள உணவும் எடுத்து உங்களைத் தயார்படுத்துங்கள்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாலுணர்வு**

தினமும் பாடசாலையால் வரும் போது அல்லது போகும்போது ஒரு பெண் பிள்ளை உங்கள் கண்களில் படுகிறாள். உங்களுக்குள் ஏதோ ஆர்வம். தினமும் கவனிக்கிறீர்கள். ஒரு நாள் அவள் நிமிர்ந்து உங்கள் கண்ணுக்குள் ஊடுருவிப் பார்க்கிறாள் சற்று துடிப்பான பெண் என்றால் ஹாய் சொல்லி விட்டுப் போகிறாள் என்று வைப்போம்.

உங்கள் உடல் சிலிர்க்கிறது. முகத்தில் வியர்வை அரும்புகிறது. உங்கள் நெஞ்சுக்குள் வண்ணத்துப் பூச்சிகள் சிறகடிக்கின்றன. அவள் குட்டைப் பாவாடை எகிறிப் பறக்க மலர்ந்து நடனமாடுகிறாள். இரவு படுக்கப் போகும்போதும் அவள் நினைவு அருட்டுகிறது. அடுத்த சில நாட்களுக்கு அவளது நினைவு அடிக்கடி வருகிறது? ஏன் இப்படி நினைவு வருகிறது. இது என்ன உணர்வு? இது ஒரு ஈர்ப்பு. பாலியல் ரீதியானது. ஆனால் பாலுணர்வு அல்ல. தெளிவாகப் புரியச் சற்றுக் காலம் எடுக்கும். அதே நேரம் உங்கள் நண்பன் மற்றொரு பெண்ணின் அழகு பற்றி நாள் முழுக்கப் பேசுவான். அவளது குணங்களை மெச்சுவான். ஆனால் உங்களுக்கு அவை ஆர்வம் ஊட்டாது இருக்கலாம்.

காரணம் என்னவெனில் ஒவ்வொருவருக்கும் அவருக்கே உரிய விருப்பு வெறுப்புகள் உள்ளன. கவர்ச்சிகள் உள்ளன. அதனால் அவனை அருட்டியவள் உங்களுக்கு துச்சமாகப் படலாம்.

விரும்பிய ஒருவரைப் பற்றி மீள மீள நினைப்பது அப்பருவ காலத்திற்கான உணர்வுதான். இதற்குக் காரணம் என்ன? உங்கள் உடலிலுள்ள சில ஹோர்மோன்கள் அதிகம் சுரக்க ஆரம்பித்துவிட்டன. அதனால் உங்கள் உணர்வுகள் வலுப் பெறுகின்றன. இதனால் குழப்பமடைய வேண்டியதில்லை. வாழ்க்கையின் ஒரு புது வட்டத்திற்குள் நீங்கள் நுழைகிறீர்கள் எனலாம்.




**முடி வளர்தல்**

நீங்கள் பருவடைய ஆரம்பிக்கும் போது ஏற்படும் மற்றொரு மாற்றம் உடல் முடியாகும். முகத்தில் மீசை தாடி அரும்பும் நெஞ்சில் வளரும் அக்குளுக்குள் தடிப்பாக வளரும். கீழே உங்கள் உறுப்புக்கு மேலும் தோன்றும். இதில் ஆச்சரியப்படுவதற்கு எதுவும் இல்லை. பயப்பட வேண்டியதும் இல்லை.

ஆனால் இது எவ்வாறு நிகழ்கிறது? இதுவும் ஹோர்மோன் சுரப்பிகளால் ஆவதுதான். ஆரம்பத்தில் உங்கள் அடரீனல் சுரப்பி சுரக்கத் தொடங்கும். பின் மூளையில் உள்ள பிற்றியுடரி சுரப்பி அதிகம் சுரக்கும். இதனால் உங்கள் விதைகள் வளரும். அதிலிருந்து பாலியல் ஹோர்மோன் ஆன டெஸ்டஸ்டரோன் சுரக்கும். முடி வளரும். ஏனைய மாற்றங்களும் தொடரும். எனவே இவையாவும் இயற்கை நியதிதான்.

சற்று வளர்ந்து கறுத்தால் ஷேவ் எடுப்பது பற்றி அப்பாவுடன் கதைக்கலாம். அவ்வளவுதான்.

**வியர்வை**

'இவன்றை வேர்வை மணக்கிறது' பல அம்மாக்கள் சொல்வார்கள். எல்லோருக்கும் தான் வியர்க்கிறது. ஆனால் பருவமடையும் காலத்தில் உங்கள் உடல் ஹோர்மோன்கள் முழு அளவில் வேலை செய்கின்றன. எனவே வியர்வை அதிகமாகவே சுரக்கச் செய்யும். வியர்வையில் நீர் மட்டுமே உள்ளது. ஆனால் மிகச் சிறிதளவு அமோனியா, யூரியா, சீனி, உப்பு ஆகியவையும் இருக்கும். வியர்வை உண்மையில் மணமற்றது. ஆயினும் உடலிலுள்ள பக்றீரியா கிருமிகள் சேரும்போது மணம் ஏற்படுகிறது.

இதை நீக்க என்ன செய்யலாம்? அடிக்கடி உடலைக் கழுவுங்கள். குளியுங்கள். முக்கியமாக விளையாடினால் அல்லது வேலை செய்தால் உடனடியாகக் குளியுங்கள். இப்பொழுது மணம் நீக்கிகள் (Deodorant) கிடைக்கின்றன. அவற்றை உபயோகிக்கலாம்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விறைப்படைதல்

முதன் முதலாக உங்கள் ஆண்குறி விறைப்பது ஆச்சரியமாகவும் புதினமாகவும் இருக்கும். சிறுநீர்கழிக்கும் போது ஏற்படுவது அல்ல. விறைப்பு என்பது உங்கள் ஆண் உறுப்பிற்குள் இரத்தம் நிரம்பி இறுக்குவதாகும். ஆண்குறி பெருத்து விறைத்து நிமிர்ந்து நிற்கும். பருவமடையும் காலத்தில் இது காரணம் இன்றியும் அடிக்கடி நடக்கும். இதுவும் இயற்கையான செயற்பாடுதான்.

இது எந்த நேரத்திலும் நிகழலாம். ஒரு நாளுக்கு ஒரு தடவையோ பல தடவைகளோ நிகழலாம். வயது பாலியில் ரீதியான உங்கள் வளர்ச்சி செயற்பாடு தூக்கத்தின் அளவு போன்ற பல விடயங்கள் இதற்குக் காரணமாக லாம். பகலில் மட்டுமல்ல தூக்கத்திலும் நிகழலாம்.

### தூக்கத்தில் விந்து வெளியேறல்

அந்நேரம் நீங்கள் விழித்து எழுந்து உங்கள் உள்ளாடை நனைந்திருப்பதைக் காணக் கூடும். இதனை ஆங்கிலத்தில் nocturnal emission என்போம். வெளியேறிய திரவம்தான் விந்து semen எனப்படுகிறது. உங்கள் உடல் அதிகளவு டெஸ்டஸ்டரோன் ஹோர்மோனை உற்பத்தி செய்வதே இதற்குக் காரணம். பெண்களுக்கு மாதவிடாய் வருவதோடு இதனை ஒப்பிடலாம். ஆனால் இரண்டுமே வித்தியாசமானவை. ஆண்களின் விந்தில் அவனின் உயிர் அணுக்கள் உள்ளன. இவை பெண்ணின் கருமுட்டையுடன் இணைந்தால் கரு உற்பத்தியாகிப் பிள்ளையாக பிறக்கும்.

ஆனால் பெண்களின் மாதவிடாய் இரத்தத்தில் அவளது கரு முட்டை இருப்பதில்லை. கரு முட்டையானது மாதவிடாய் வருவதற்கு 14 நாட்களுக்கு முன்னரே சூலகத்திலிருந்து வெளியேறி விடும். அந்நேரத்தில் ஆணின் விந்துடன் இணைந்தால் கரு உற்பத்தியாகும். கரு உண்டாகாத கருப்பையின் உட்புறம் தன்னைப் புத்துயிர்ப்புச் செய்து அடுத்த மாதத்திற்குத் தயாராவதே பீரியட் எனலாம்.

தூக்கத்தில் இவ்வாறு விந்து வெளியேறுவதை 'ஸ்கலிதமாதல்' என்றும் சொல்வதுண்டு. இவ்வாறு நிகழும் போது பல பையன்கள் இதையிட்டு வெட்கப்படுவதுண்டு. வேறு பலர் குற்ற உணர்வு கொள்வதும் உண்டு. இதனால் உடல் நலத்தில் எத்தகைய பாதிப்புகளும் ஏற்படுவதில்லை. ஆற்றலுள்ள ஆண்மையின் வெளிப்பாடு இது எனலாம். இது இயற்கையான செயற்பாடு. பருவமடையும் காலத்தில் மட்டுமல்ல வயதான பின்னரும் பலருக்கு ஏற்படுகிறது. ஆண் பெரிய பிள்ளையாகும் விடயத்தை பெற்றோர்கள் பிள்ளைகளுக்கு விளக்குவது அவசியம். தாயினால் இவை பற்றி தனது மகனுடன் பேசுவதில் தயக்கம் இருக்கலாம். ஆனால் தந்தையர் மறக்காமல் சொல்ல வேண்டியதாகும். தாங்கள் பருவமடையும் வயதில் பட்ட மன அவஸ்தைகள் தங்கள் மகனுக்கும் ஏற்படாமலிருக்கச் செய்வது அவர்களது கடமையாகும்.

யார் டைம் நமக்காக காத்திருக்காது என்று சொன்னது? கடிகாரத்தில் bettery ஐ எடுத்துவிட்டுப் பாருங்கள்! டைம் எப்போதும் உங்களுக்காக காத்திருக்கும்.





பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்





# நாயின் பரிந்துரை

ஒடுங்கிய ஒழுங்கை வழியே என் உடைகள் கந்தையாக ஒரு பிச்சைக்காரன் போல நான் நடந்து செல்லக் கனாக் கண்டேன்.

நாயொன்று என் பின்னிருந்து குரைக்கத் தொடங்கியது.

ஏளனத்துடன் திரும்பிப் பார்த்து அதனிடம் கத்தினேன்.

'அடீக்! பொத்து வாயை! எச்சில் நக்கி நாயே!'

அது தனக்குள் சிரித்தது.

'இல்லவே இல்லை!' என்றது. 'அவ் விடயத்தில் நான் மனிதருக்கு நிகரில்லை.'

பெரிதுஞ் சினங் கொண்டு 'என்ன!' என்றேன். அது அதி மோசமான அவமதிப்பாய்த் தெரிந்தது.

'செப்புக்கும் வெள்ளிக்கும் இடையே, பட்டுக்கும் பருத்திக்கும் இடையே, அதிகாரிகட்கும் சாமானியருக்கும் இடையே, எசமானர்கட்கும் அவர்தம் அடிமைகட்கும் இடையே... என்னால் வேறுபாடு காண இன்னமும் இயலவில்லை என்று சொல்லக் கூச்சப்படுகிறேன்'

நான் திரும்பி ஓடத் தொடங்கினேன்.

'கொஞ்சம் பொறு! நாம் இன்னமும் பேசலாம்...' என் பின்னாலிருந்து என்னை நிற்குமாறு அது என்னை வற்புறுத்தியது.

ஆனால் நான் நேராக, என்னால் இயன்றளவு வேகமாக, என் கனவிலிருந்து வெளியேறி எனது கட்டிலுக்கு மீளும் வரை ஓடிக் கொண்டிருந்தேன்.

**நன்றி – வினவு இணையத்தில் பேராசியர் சி.சிவசேகரம் எழுதும் இலக்கியத் தொடரில் இருந்து எழுத்தாளப்பட்டது.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# பரஸ்பர நிதிகள்

MUTUAL FUND

பரஸ்பர நிதிகள் என்றால் என்பது ஒரு வித முதலீட்டு நிறுவனங்களே! 'சிறு துளி பெருவெள்ளம்' என்ற தத்துவத்தின் அடிப்படையில் இயங்குவன. இந்தப் பரஸ்பர நிதிகள். நீங்கள் எத்தகைய முதலீடு செய்யவேண்டும் என்று விரும்பினாலும் அதற்கேற்ற ஒரு முதலீட்டுத் திட்டத்தை (Investment Scheme) பரஸ்பர நிதியங்கள் வழங்குகின்றன. இந்தப் பரஸ்பர நிதியங்களுக்கான தொடக்கம் 1774ம் ஆண்டே ஹோலந்து நாட்டில் ஏற்பட்டது.

**பரஸ்பர நிதியங்கள் எப்படிச் செயல்படுகின்றன?**

ஆயிரக்கணக்கான வாடிக்கையாளர்களிடம் இருந்து திரட்டப்பட்ட லட்சக்கணக்கான தொகையை, பங்கு நிறுவனங்களில் உள்ள நிதி நிர்வாகிகள் பல விதமான பங்குகளிலும், கடன் பத்திரங்களிலும் முதலீடு செய்கின்றனர். பங்குகளுக்குக் கிடைக்கும் பங்காதாயமும், கடன் பத்திரங்களில் கிடைக்கும் வட்டியும் முதலீடு செய்தவர்களுக்குப் பகிர்ந்தளிக்கப்படுகிறது. அது மட்டுமின்றி, நிதியங்கள் தம்மிடம் இருக்கும் பங்குகளை விற்பதால் கிடைக்கும் லாபம், முதலீட்டாளர்கள் தங்கள் பரஸ்பர நிதி முதலீடுகளை நிகர சொத்து மதிப்பினை (Net Asset Value-NAV) விடக் குறைவான விலையில் (Discount) செய்வதால் கிடைக்கும் லாபம் இவையும் பரஸ்பர நிதியங்களில் செய்யும் முதலீடுகளை கவர்ச்சிகரமாக மாற்றுகின்றன.



**பரஸ்பர நிதியங்களில் முதலீடு செய்வதால் என்ன பயன்?**

சாதாரணமாக நாமே நேரடியாக பங்குகளில் முதலீடு செய்வதை விட பரஸ்பர நிதியங்களில் முதலீடு செய்வதால் கீழ்க்கண்ட பயன்கள் விளைகின்றன.

**பயன் 1**

அபாயக்குறைவு. எந்த முதலீடாக இருந்தாலும் அதில் கொஞ்சம் ஆபத்து (Risk) இருக்கத்தான் செய்யும். ரிஸ்க் என்பதே இல்லாத முதலீடு எதுவுமே கிடையாது. ஆனால், நீங்கள் பங்குகளில் முதலீடு செய்கையில் பல்வேறு விதமான பங்குகளில் உங்களால் ஈடுபட முடியாது. அதாவது பரவல் (Diversification) குறைவு. அது ரிஸ்க்கை அதிகரிக்கச் செய்கிறது. ஆனால் பரஸ்பர நிதியங்களில் நீங்கள் முதலீடு செய்யும்பொழுது, உங்கள் பணமும், உங்களைப் போன்ற பல முதலீட்டாளர்களின் பணத்துடன் சேர்ந்து பல வகை நிறுவனங்களின் பங்குகள் மற்றும் கடன் பத்திரங்களில் முதலீடு செய்யப்படும். இதன் காரணமாக உங்கள் பணத்தின் மீதான ரிஸ்க் குறைகிறது





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பயன் 2

திறமையும் அனுபவமும் மிக்க நிதி நிர்வாகம். நீங்கள் உங்கள் பணத்தை எந்தப் பங்கில் முதலீடு செய்வது என்று தலையைப் பிய்த்துக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை. உங்கள் பணத்தை சிறந்த, லாபம் தரக்கூடிய, நம்பிக்கைக்குரிய பங்குகளில் முதலீடு செய்வது பரஸ்பர நிதி நிறுவனங்களில் உள்ள நிதி நிர்வாகிகளின் பொறுப்பாகி விடுகிறது.

பயன் 3

சிறிய அளவு முதலீடுகள். சிறிய முதலீடாக இருப்பின் பல விதமான பங்குகளில், பல நிறுவனங்களில் முதலீடு செய்ய இயலாது. அதற்கு நிறையப் பணம் தேவைப்படும். பரஸ்பர நிதியங்களில் நீங்கள் எவ்வளவு சிறிய அளவு தொகையையும் முதலீடு செய்ய இயலும்.

**பரஸ்பர நிதி நிறுவனங்களின் குறைபாடுகள்:**

**கட்டணங்கள்:** நேரடியாக நாமே முதலீடு செய்வதை விட பரஸ்பர நிதி நிறுவனங்களில் முதலீடு செய்கையில் லாபம் குறைவது உண்டு. ஏனெனில், நாம் பலவிதமான கட்டணங்களைச் செலுத்த நேரிடுகிறது.

நிதி நிறுவனங்களில் உண்மையாகவே அனுபவமும் திறனும் நிறைந்த நிதி நிர்வாகிகள்தான் இருக்கிறார்களா என்பது நமக்குத் தெரியாது. சரியான முறையில் நிர்வகிக்கப் படாத பரஸ்பர நிதிகளில் செய்யப் படும் முதலீடுகள் சரியான அளவு லாபத்தைக் கொடுப்பதில்லை. எனவே நல்ல தரமான, அனுபவமுள்ள நிறுவனங்களில் மட்டுமே முதலீடு செய்வது அவசியம்.



**கணக்குப் புதிர்**



ஒரு கடையில் 15 ரூபாவுக்கு 15 சொக்லேட் - 15 கவர். அதைக் கொடுத்தால் இன்னும் 5
சொக்லேட் - 5 கவர். அதில 3ஐக் கொடுத்து ஒரு சொக்லேட் வாங்கினால் மிச்சம்
ஒரு கவர். ஏற்கனவே இருக்கின்ற 2 கவரோடு இந்தக் கவரையும் கொடுத்தால் இன்னும் ஒரு
சொக்லேட் கிடைக்கும். ஆக மொத்தம் எத்தனை சொக்லேட்?

**விடை**

15+5+1+1 = 22



# தேர்தல் காலம்

ஸ்ரோபரி தோட்டத்தில் அன்று காலையில் இருந்தே ஒரே இரைச்சல். யாரோ ஒரு அரசியல்வாதியின் கூட்டம் ஒன்று நடைபெறப் போகின்றதாம். அதற்கு அக்கட்சியின் எடுபிடிகள் மேடை கட்டி, மைக் செட் போட்டு ஊரையே நாறடித்துக்கொண்டு இருந்தார்கள். இது போதாதென்று வீடுகள், தோட்டங்களின் சுவர்களை போஸ்டர் ஒட்டிப் பழுதாக்கி போற, வாறவங்களுக்கு நோட்டீஸ் வேற கொடுத்தார்கள். சனங்கள் வாங்கின உடனே அதைக் கசக்கி அதிலேயே போட்டுட்டுப் போனதுகள்.

அந்த ஊரைப் பொறுத்தவரை இந்த நிகழ்வு ஒரு புதினமானது. காரணம் ஐந்தாறு வருடங்களுக்கு முன்னர் தேர்தல் காலத்தில்தான் இப்படி இறுதியாக ஊரை ஏமாத்தியிருந்தார்கள். எனவே பாட்டுக் கேட்ட சிறுவர்களுக்கு கும்மாளம். இதைவிட பிஸ்கட்டும் ஏதோ அந்த பினாமிகள் கொடுத்திருந்தார்கள். பெரியவர்களுக்கு ஆர்வமில்லை. இப்படியான ஏமாத்துக்காரர்களுக்கு வாக்குப் போட்டு அவர்களுக்கு அழுத்துவிட்டது. வாழ்க்கை முழுந்தாலும் ஆண்டாண்டு காலமாக ஒவ்வொரு அரசியல் தலைமைகளிடம் இருந்தும் அத்தோட்டத்திற்கு விமோசனம் கிடைக்கப் போவதில்லை.

கூட்டம் ஆரம்பித்தது. ஊரின் சில வால் பிடிக்கும் தலைவர்களின் பேச்சுக்குப் பின்னால் அந்த அரசியல் தலைவரின் பேச்சு, வீட்டிலிருந்த சின்னச்சாமிக்கு தெளிவாகக் கேட்டது. "நான் சிறுவயது முதல் ஓடியாடித் திரிந்தது இந்தத் தோட்டத்தில்தான். என்ன வேலை இருந்தாலும் இந்தத் தோட்டத்தை நான் கவனிக்கத் தவறுவதில்லை. இவர்களது குறை நிறைகளை நான் நன்றாகத் தெரிந்து வைத்துள்ளேன். இதுவரை காலமும் இவர்களுக்குச் செய்து வந்த அபிவிருத்திப் பணிகளைப்போல் இனி நான் ஆட்சிக்கு வந்தாலும் செய்வேன்" தலைவர் முழங்கினார். கூட்டம் முடிவுற்றது. தலைவர் ஒவ்வொரு வீடாக வந்து வாக்குக் (பிச்சை) கேட்டார். சின்னச்சாமி வீட்டுக்கும் வந்து இரு கரம் கூப்பி வாக்குக் கேட்டார். அப்பொழுது சின்னச்சாமி "ஐயா நீங்கள் காலில விழுந்தாலும் நான் ஓட்டுப் போட முடியாது. நான் மட்டுமல்ல. இந்தத் தோட்டத்தில வாக்களிக்கத் தகுதியான 600 பேருக்குமேல அடையாள அட்டை இல்லாமல் இருக்கிறம். முதியவர்கள் கூட இன்னும் பிறப்புச் சான்றிதழ் பெறாமல் இருக்கினம். நீங்கள் வாக்கு வேண்டுறதுக்காவது எங்களுக்கு இதுகளை பெற்றுத்தர ஏதாவது வழிவகை செய்திருக்கலாம். இந்த லட்சணத்தில எங்களை நன்றாக தெரிந்து வைத்திருக்கிறன் என்று வாய் கூசாமல் சொல்லுறீங்களே" என்றான்.

தொண்டர்களுக்கும் சனங்களுக்கும் மத்தியில் அவமானப்பட்ட தலைவர் கூனிக்குறுகி நின்றார்.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலட்சியத்தை நோக்கி 2010

மனிதர்கள் பல விடயங்களுக்குப் பயப்படுகின்றனர். புதிய சூழல், புதிய தொழில், புதிய மனிதர்கள் ஆகியன மனிதர் மனங்களில் பயத்தையும் திகிலையும் ஏற்படுத்துகின்றன. எனவே அவற்றுக்கு முகம் கொடுக்காமல் தவிர்ப்பதன் மூலம் தமது உணர்வுகளுக்குப் பாதுகாப்புத் தேடுபவர்களும் இருக்கத்தான் செய்கின்றனர். ஆனால் யாராலுமே தவிர்க்கவோ தடுக்கவோ முடியாத ஒரு விடயம் தான் காலம். ஒவ்வொரு ஆண்டு கழியும் போதும் மக்கள் மனதில் இரண்டு பெரிய கேள்விகள் எழலாம். கடந்த காலத்தில் நான் இழைத்த தவறுகள், இழந்த சந்தர்ப்பங்கள் ஆகியவை என் எதிர்கால வாழ்வைப் பாதிக்குமா? புதிய முயற்சிகள் வெற்றியைக் கொண்டு வருமா? அல்லது தோல்விகள் தொடருமா?

அந்தப் பயத்தைப் போக்குவதற்காகவோ என்னவோ புதிய வருடம் பிறக்கும்போது நம்பிக்கையை ஊட்டக்கூடிய பல குதூகலக் கொண்டாட்டங்கள் ஏற்படுத்தப்படுகின்றன. புதுவருடக் கொண்டாட்டங்கள் இற்றைக்கு 4000 வருடங்களுக்கு முன்னரேயே அக்காலத்தில் வல்லரசாக இருந்த பாபிலோன் தேசத்தில் ஆரம்பிக்கப் பட்டுவிட்டன. ஆனால் கொண்டாடப்பட்ட தினம் வித்தியாசமானது. இயற்கையோடு இசைவானது. அதாவது வசந்த காலம் ஆரம்பித்த பின் மூன்றாம் பிறையை மக்கள் காணும் தினத்தில் புத்தாண்டு கொண்டாடப் பட்டது. மக்கள் மனதிலே புத்துணர்ச்சியையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தும் ஒரு புதிய இயற்கைச் சூழல், மரங்கள் துளிர்த்து பூக்கள் மலர்ந்து மணம் வீசும் வளர்பிறை காலம் இவையெல்லாம் உண்மையிலேயே மனதை உற்சாகப் படுத்தும் சூழல்தான். ஸ்வரங்கள் ஆரோகண வரிசையில் அமையும் தருணம், விவசாயம் சார்ந்து வாழ்ந்த மக்கள் மனதில் உழைக்கலாம் என்ற உற்சாகத்தையும் வாழ்வில் சுப காரியங்கள் நிறைவேறும் என்ற நம்பிக்கையையும் ஏற்படுத்தும் இந்தக் காலத்தை வரவேற்று கிட்டத்தட்ட 11 நாட்கள் கொண்டாட்டம் நடைபெற்றது. இக்காலத்திலே புதிய நாற்றுக்களை நடுவார்கள். இக்காலம் தற்கால நாட்காட்டியின்படி ஏப்ரல் மாதமாகும். சித்திரை முதலாம் திகதியை (ஏப்ரல்13, 14) யே தமிழ் மக்களும் புத்தாண்டாகக் கொண்டாடுகின்றனர்.

பிற்காலத்தில் ரோம அரசு வல்லரசான போது பங்குனி மாதத்தின் முதலாம் நாள் புத்தாண்டாகக் கொண்டாடப்பட்டது. ஆனால் ரோம நாட்காட்டியானது பலவித அரசியல் தலையீடுகள் காரணமாக மாற்றப்பட்டு இறுதியில் புத்தாண்டானது தை மாதம் முதலாம் திகதி கொண்டாடப்பட்டது. சித்திரை மாதம் புதுமலர்ச்சியின் காலமாக இருந்த போதும் அரசியல், இயற்கைப் பொருத்தத்தை அசட்டை செய்து விட்டது என்றுகூட நாம் கொள்ளலாம். கி. மு. 46 ஆம் ஆண்டளவில் ஜூலியஸ் சீஸர் ஜூலியன் நாட்காட்டியை அறிமுகம் செய்து தை மாதம் முதலாம் திகதியை புத்தாண்டு தினமாகப் பிரகடனம் செய்தார்.

ரோம நகரம் களியாட்டத்துக்கும் ஏகாதிபத்தியத்துக்கும் பேர் போன இடமாக இருந்ததனால் இக் கொண்டாட்டங்களில் ஆன்மீக வாசனை இருந்ததேயில்லை. எனவே கத்தோலிக்க மதத் தலைவர்கள் இக் கொண்டாட்டங்களை வெகுவாகக் கண்டித்தனர். ஆனால் ரோமாபுரி கத்தோலிக்க மதத்தை அரச மதமாக ஏற்றுக்கொண்டபோது வெறும் களியாட்டமாக இருந்த கொண்டாட்டத்தை அவர்கள் ஆன்மீக சடங்காக மாற்றினர். கிறிஸ்து பிறந்து எட்டாம் நாள் நிறைவேறியபோது யூத முறைப்படி அவருக்கு விருத்த சேதனம் செய்யப் பட்டதனால் சில கிறிஸ்தவ சபைப் பிரிவினர் தைமாதம் முதலாம் திகதியை இயேசுவின் விருத்த சேதன தினமாகக் கருதிக் கொண்டாடுவர். 1582 இல்








Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



போப்பாண்டவராக இருந்த 13 ஆம் கிரெகரி என்பவர் இப்போது நாம் பாவிக்கும் கிரெகோரியன் பஞ்சாங்கத்தை அறிமுகப்படுத்தி தைமாதம் முதலாம் திகதியை புதிய ஆண்டின் ஆரம்ப நாளாக தொடர்ந்தும் பிரகடனம் செய்தார்.

கொண்டாட்டங்களுக்கு ஒரு பாரம்பரியப் பின்னணி ஒன்று எப்போதும் இருக்கும். பொதுவாகக் கொண்டாட்டங்கள் சமூக ஐக்கியத்தை வலுப்படுத்துவதற்கான ஒரு முறையாகக் கடைப்பிடிக்கப்படுவது நாம் அறிந்ததே. ஆனால் காலங்கள் போக அந்தக் கொண்டாட்டங்கள் ஆரம்பிக்கப்பட்ட நோக்கங்கள் தெரியாமல் அவை கடைப்பிடிக்கப்படும்போது அவை அர்த்தமுள்ளதாக இல்லாமல் வெறும் பணச்செலவையும் நேர விரயத்தையுமே ஏற்படுத்தி விடுகின்றன.

சில இல்லங்களில் கொண்டாட்டங்கள் குறித்த சர்ச்சைகள் எப்போதும் இருந்து கொண்டிருக்கும். ஒருவர் பணவிரயம் என்பார். மற்றவர் உறவுகளை வளர்ப்பது அது என்பார். இந்த இரு கட்சியினரும் மனித குலத்தின் இரு பெரும் பிரதான கட்சிகளாக மாறி விடுகின்றன. சில வீடுகளில் கொண்டாடுபவர்கள் ஆளும் கட்சியாகவும் அமைதியானவர்கள் எதிர்க்கட்சியாகவும் இருப்பர். வேறு சில வீடுகளில் அமைதியானவர்கள் ஆளும் கட்சியாகவும், ஆர்ப்பாட்டக்காரர் எதிர்க்கட்சியாகவும் இருப்பர். இதனால் இத்தகைய கொண்டாட்ட காலங்களில் பல வீடுகள் கட்சி மனப்பான்மைக்கு இடம் கொடுத்து நிம்மதியை இழக்கும் சந்தர்ப்பங்களும் இல்லாமலில்லை. கொண்டாட்டங்கள் மனதில் வெவ்வேறு வகையான பாதிப்புகளை ஏற்படுத்தினாலும், ஒரு மனிதனுடைய எதிர்காலத்துக்கான சாவி அவனிடம் மட்டுமே உண்டு. அமைதியானவர் தன்னையும் தனக்குள் மறைந்திருக்கும் ஆற்றல்களையும் கொண்டு எவ்வாறு சாதகமான விளைவுகளை ஏற்படுத்தலாம் என்று சிந்திக்கிறார். கொண்டாட்ட மனநிலையில் இருப்பவர், மக்களுடன் அவர் வைத்திருக்கும் நல்லுறவை எவ்வாறு தனது மேம்பாட்டுக்குச் சாதகமாக்கிக் கொள்ளலாம் என சிந்திக்கிறார். இவ்விரு வகையினரும் ஒருவரிடமிருந்து மற்றவர் கற்றுக்கொள்ள வேண்டிய விடயங்கள் ஏராளம். ஒருவர் தன்மையை மற்றவர் குறை கூறுவதை விடுத்து எப்படி இருவரும் சேர்ந்து செயற்படலாம் என ஆலோசிப்பது நல்ல விளைவைக் கொடுக்கும்.

வாழ்க்கையில் முன்னேற நினைப்பவர்கள் பலர் எவரிடமும் எந்த ஆலோசனையும் பெறாமல் இரகசியமாக வளர்ச்சியடைந்து மற்றவர்களை வியப்புக்குள்ளாக்கி ஆனந்தமடையத் திட்டமிடுகின்றனர். ஆனால் அந்தக் காலம் மலையேறிப் போய்விட்டது. சேர்ந்து செயற்படுவதன் மூலம்தான் மக்கள் தமது இலட்சியங்களை அடையமுடியும். இன்று தற்கால யதார்த்தம், பொருட்களையும் சேவைகளையும் பரீட்சார்த்த சந்தைப் படுத்தலுக்குள்ளாக்கியது அந்தக் காலம். பரீட்சித்துப் பார்த்து தரமான பொருட்களையே சந்தைப்படுத்துவது இக்காலத் தேவை. ஒரு சந்தர்ப்பத்தை இழந்து போனால் அதை மீண்டும் பெறமுடியாத வேகத்திலே உலகம் சுழன்று கொண்டிருக்கின்றது. அந்த ஓட்டத்திலே தொலைந்து போகாமல், நிதானத்துடன், பிறர் ஆற்றல்களையும் சிந்தனைகளையும் மதித்து, பலருடைய இயலுமைகளை ஒருமுகப்படுத்தி, அவரவர் இலட்சியங்களை அடைய ஒருவருக்கொருவர் உதவி செய்து, சேர்ந்து செயற்படுவதன் மூலம் நாம் யாவருமே மேன்மையடையலாம் என்ற நம்பிக்கையுடையவருக்கு ஒவ்வொரு நாளுமே தமது இலட்சியத்தை நோக்கிய பயணத்தின் படிகளாகும் என்றால் அது மிகையாகுமா?

அன்பழகன்




டி.வி.டி ரைட்டர் இன்னும் மக்களிடையே நம்பிக்கை மிக்க சாதனமாக வலம் வருகிறது. புளு ரே ரைட்டர், பிளாஷ் டிரைவ் என எத்தனை வந்தாலும் டி.வி.டி ரைட்டர் இன்னும் தேவையாய்தான் உள்ளது. எனவேதான் சொனி நிறுவனம்கூட இன்னும் புதிது புதிதாய் டி.வி.டி ரைட்டர்களை வெளியிட்டு வருகிறது. அண்மையில் AD7240S என்ற பெயரில் புதிய டி.வி.டி ரைட்டர் ஒன்றை வெளியிட்டுள்ளது. முதல் முதலாக 24 எக்ஸ் (24X DVDRW) வேகத்தில் டி.வி.டியில் பதியும் ரைட்டர் இதுதான் என சொனி அறிவித்துள்ளது. இதில் ஒட்டோ ஸ்ட்ரேட்டஜி தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகிறது. ஒரு டி.வி.டியில் தகவல்களை பதிகையில் இந்த டிரைவ் மீடியாவில் உள்ள தகவல்களைச் சற்று முன்கூட்டியே பதிந்து வைக்கிறது.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org





# சட்டம் பேசுகிறது

செவே. விவேகானந்தன்
சட்டத்தரணி.



சட்டத்தரணி தேவசேனாதிபதி (L.L.B) ஒரு பிரபல்ய சட்டத்தரணியாவார். 25 வருடங்களுக்கு மேலாக சட்டத்தரணித் தொழிலை செய்து வருகின்றார். சிங்கள மொழியில் மிகப் பாண்டித்தியம் பெற்றவர். சிங்கள மொழியில் வழக்கு நடத்துவதில் அவருக்கு நிகர் அவரே ஆவார். அவரது தந்தையார் காலஞ்சென்ற வேலாயுதனும் ஒரு பிரபல்ய சட்டத்தரணியாவார். அவரிடம் கேட்கப்பட்ட கேள்விகளும் அதற்கு அவர் அளித்த பதில்களும்.

**கேள்வி** - அமலன் என்பவர் ராணி என்ற பெண்ணை காதலித்து திருமணம் செய்வதாக வாய்மொழி மூலம் வாக்குறுதி அளித்து அவளுடன் நன்கு பழகுகிறார். இப்பெண்ணையே திருமணம் செய்வதாக பலரிடம் கூறியுள்ளார். பின்னர் அவர் ஒரு பணக்காரப் பெண்ணை பெரும் சீதனத்துடன் திருமணம் செய்ய தீர்மானித்துள்ளார். இப்போது ராணி தனது சட்டத்தரணியை நாடி பின்னைய திருமணத்தை தடை செய்ய முடியுமா? ராணிக்கு என்ன நிவாரணம் பெற முடியும்? எவ்வாறான சட்ட ஆலோசனை பெற முடியும்?

**பதில்** - திருமண வாக்குறுதியானது திருமணங்கள் பொதுக்கட்டளைச் சட்டத்தின் 19ம் பிரிவின் கீழ் அத்தகைய திருமண வாக்குறுதி எழுத்தின் மூலம் தெரியப்படுத்தப்பட்டிருக்க வேண்டும். திருமண வாக்குறுதியானது எழுத்து மூலம் இல்லாவிட்டால் அத்தகைய திருமண வாக்குறுதி மீறலுக்காக எந்தவிதமான, எத்தகைய சட்ட நடவடிக்கையும் எடுக்க முடியாது. சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டுமானால் திருமண வாக்குறுதி கொடுப்பவரால் திருமண வாக்குறுதி கட்டாயம் எழுத்தில் காணப்பட வேண்டும். பல தீர்க்கப்பட்ட வழக்குகளில் திருமண வாக்குறுதியானது திருமணம் புரிவதற்கு வாக்குறுதி கொடுத்துள்ளார் என்பது மிகத் தெளிவாக வெளிப்படையாகவோ அல்லது அத்தகைய கடிதங்கள் மூலம் அப்பெண்ணையோ,





ஆணையோ திருமணம் செய்வதற்கு ஒரு வாக்குறுதி உள்ளது என்பது தெளிவாக உட்கிடையாகவும் காணப்படலாம். அவ்வாறான வாக்குறுதி மீறப்பட்டால் மாவட்ட நீதிமன்றம் சென்று போதிய நட்டஈடு பெற பாதிப்பு அடைந்தவர் அல்லது திருமண வாக்குறுதியை மீறியவருக்கு எதிராக நட்டஈடு பெற வழக்குத் தொடர உரிமை உண்டு. ஆனால் திருமணத்தை நிறுத்துவதற்கு நீதிமன்றத்தில் தடையுத்தரவு கோர உரிமையில்லை. அதேவேளை திருமண வாக்குறுதியை அமுல்படுத்தவும் நீதிமன்ற கட்டளை பெற முடியாது. திருமண வாக்குறுதி மீறலுக்கு எதிராக மட்டும் சாட்சியங்களின் அடிப்படையில் தீர்மானிக்கப்படும் நட்டஈட்டுத் தொகையை மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றக் கட்டளை மூலம் பெறலாம்.

**கேள்வி** - நீதிமன்றம் நட்டஈட்டை வழங்கும்போது எவ்வாறான காரணிகளின் அடிப்படையில் நட்டஈட்டுத் தொகையை தீர்மானிக்கின்றது?

**பதில்** - நீதிமன்றம் நட்டஈட்டைத் தீர்மானிக்கின்றபொழுது பின்வரும் முக்கியமான விடயங்களை கனத்தில் எடுத்துக்கொள்ளும். அவையாவன.

1. திருமண வாக்குறுதி நீடித்திருந்த காலம்.
2. திருமண வாக்குறுதி மீறலுக்கான காரணம்.
3. திருமண வாக்குறுதி மீறல், பிரபல்யமாக பலருக்கு தெரிந்ததா, இல்லையா என்ற விடயம்.
4. கட்சிக்காரர்களின் வயது, அந்தஸ்து, சமூகநிலை.
5. வழக்காளியின், எதிராளியின் சொத்து நிலைமை.
6. பாதிப்படைந்த வழக்காளிக்கு மீண்டும் ஒரு திருமணம் செய்வதற்கான வாய்ப்புக்கள்.
7. பாதிப்படைந்த வழக்காளிக்கு திருமண வாக்குறுதி மீறலால் ஏற்பட்ட மன உளைச்சல், பாதிப்பு, அவமானம், உடல், உள ரீதியான தாக்கங்கள்.
8. எதிராளியின் நிலை, நஷ்டஈடு கொடுக்கக்கூடிய தகுதி போன்ற பல விடயங்களை நீதிமன்றம் கருத்தில் கொள்ளும்.



**கேள்வி** - கந்தன் என்பவர் தனது மனைவியாக செல்வியைத் திருமணம் செய்தார். அவரை விவாகரத்துச் செய்யாமல் கைவிட்டுவிட்டு சுமனா என்கின்ற இன்னொரு பெண்ணுடன் கூடி சாந்தினி என்கின்ற மகளையும் ரவி என்கின்ற மகனையும் பெற்றெடுத்தார். இப்போது அவர் இரு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பெண்களையும் விட்டுவிட்டு பிரிந்து துற வறம் கொண்டுள்ளார். இவ்விரண்டு பெண்களும் உங்களிடம் சட்ட ஆலோசனைக்காக வந்தால் என்ன சட்ட ஆலோசனையை வழங்குவீர்கள்?

**பதில்** - முதல் பெண் செல்வியானவள் சட்டப்படி மனைவியாதலால் அவளுக்கு கணவன் பராமரிப்புப் பணம் செலுத்த வேண்டும். செல்வி நீதிவான் நீதிமன்றத்தில் விண்ணப்பம் செய்து தனக்கும் தனது பிள்ளைகளுக்கும் ஜீவனாம்சப் பணம் கண வனிடமிருந்து கோரலாம். அவள் இதனை எந்நேரத்திலும் எக்காலத்திலும் விண்ணப் பம் செய்ய உரித்துடையவள் ஆவாள். ஆனால் சுமனா என்கின்ற பெண் அவருடன் தகாத உறவு வைத்திருந்தாலொழிய அவள் சட்டபூர்வமான மனைவி அல்ல. முஸ்லிம் ஒருவர் ஒரே நேரத்தில் வலிதான நான்கு திருமணங்கள் செய்யலாம். ஆனால் முஸ்லிம் அல்லாத எந்த ஒரு நபரும் ஒன்றுக்கு மேற்பட்ட திருமணம் செய்ய முடியாது. அவ்வாறு செய்வதாயின் முதல் கணவனோ மனைவியோ இறத்தல் வேண்டும். அல்லது விவாகரத்துப் பெற வேண்டும். அவ்வாறு நடந்தால் மீண்டும் மறுமணம் செய்ய உரித்துடையவராவார். அவ்வாறு இல்லாதவிடத்து மீண்டும் பதிவுத் திருமணம் செய்வது, தண்டனைச் சட்டக்கோவையின் பிரகாரம் இருதார திருமணக் குற்றமாகக் கருதப்பட்டு, அவ்வாறு திருமணம் செய்தவர் நீதிமன்றத்தால் தண்டனைக்கு உட்படுத்தப்படுவார். அதேவேளை.முதல் மனைவி சோரம் போதல் என்ற குற்றச்சாட்டின் பேரில் தனது கணவனுக்கு எதிராக மாவட்ட நீதிமன்றத்தில் விவாகரத்துப் பெற்று சோரத்துக்கு உதவி புரிந்த பெண்ணிடமிருந்து .பலத்த நஷ்டஈடும் பெறலாம். அதேவேளை அந்த விவாகரத்து பெறுவதுடன் தனக்கு பிரிவினைப் பணமும் பிள்ளைகளுக்கு மாதாந்தம் ஜீவனாம்ச பணமும் மாவட்ட நீதிமன்றத்தில் பெறலாம்.



கள்ள உறவு வைத்திருந்த சுமனாவுக்கு எந்த பிரிவினைப் பணமும், எந்த நஷ்டஈடும் அல்லது எந்த ஜீவனாம்ச பணமும் பெற முடியாது. ஆனால் சுமனாவின் பிள்ளைகளான சாந்தினி, ரவி என்பவர்களுக்கு எந்நேரமும் தாபரிப்பு பணம் நீதிவான் நீதிமன்ற கட்டளை மூலம் பெற உரித்துடையவர்கள்.

அதேவேளை கணவன் இறந்தால் அவர் இறுதி விருப்பு ஆவணம் எழுதாது இறந்தால் அவருடைய சட்டபூர்வமான மனைவிக்கும் பிள் ளைகளுக்கும் அவருடைய சொத்து உரிமையும் வாரிசு உரிமையும் உண்டு. ஆனால் கள்ள உறவு வைத்திருந்த பெண்மணிக்கும் அக்கள்ள உறவி னால் பிறந்த பிள்ளைகளுக்கும் சொத்து உரி



மையோ, வாரிசு உரிமையோ செல்ல மாட் டாது. ஆனாலும் அக்கணவன் நன்கொடை உறுதி மூலமோ அல்லது வேறு உறுதிகள் மூலமோ அல்லது உயில் மூலமோ தனது சொத்தை தனது முதல் மனைவிக்கோ, பிள்ளைகளுக்கோ, கள்ள உறவு வைத்திருந்த சுமனாவுக்கோ அல்லது கள்ள உறவினால் பிறந்த சாந்தினி, ரவிக்கோ உயில் மூலம் கொடுக்க உரிமை உண்டு.

சுமனாவின் சொத்துக்களுக்கு எந்நேரமும் அவளது பிள்ளைகளான சாந்தினிக் கும் ரவிக்கும் இறுதி விருப்பு ஆவணம் எழுதாது இறந்திருந்தால் சொத்துக்களைப் பெற உரித்துடையவர்கள். எனவே பொதுவாகக் கூறுமிடத்து சட்டபூர்வமான விவாகத்திலோ சட்டபூர்வமற்ற விவாகத்திலோ பிறந்த பிள்ளைகளுக்கு தனது தந்தையிடமிருந்து போதிய பராமரிப்பு பணம் பெற உரித்துடையவர்களாவர்.

எனவே ஒரு கணவன் தனது சட்டபூர்வமான திருமணம் செய்த தனது மனைவி யையும் அத் திருமணத்தில் பிறந்த பிள்ளைகளையும் பராமரிக்க சட்டக் கடப்பாடு கொண்டவராவார். அவ்வாறே சட்டவிரோதமாக பிறந்த பிள்ளைகளுக்கும் அவர் தாபரிப்புப் பணம் செலுத்த சட்டக் கடப்பாடு கொண்டவராவார். ஆனாலும் சட்டத் திருமணம் இல்லாத மற்றைய பெண்ணுக்கு அவர் தாபரிப்புப் பணம் செலுத்தத் தேவையில்லை.

**கேள்வி**- காஞ்சனா என்பவள் ராஜிக்கு சொந்தமான ஒரு வீட்டில் வாடகைக் குடி யிருப்பாளராக 40 வருடங்களாக இருக்கின்றாள். கடந்த இரண்டு ஆண்டுகளுக்கு முன் காஞ்சனா உரிமையாளரின் சம்மதமின்றி அவ்வீட்டை முத்தையா என்பவருக்கு மீண் டும் வாடகைக்கு (sublet) கொடுக்கிறார் அத்துடன் அவ்வீட்டில் உரிமையாளரின் அனுமதியின்றி அக்கட்டிடத்தை இடித்து உடைத்து மாற்றியும் அமைக்கின்றார். கட்டிட உரிமையாளருக்கு சட்டத்தில் ஏதாவது பரிகாரமுண்டா?

**பதில்** - வாடகைக் குடியிருப்பாளர் ஒருவர் வாடகை ஒப்பந்த அடிப்படையில் தான் குடியிருக்கும் வாடகை வீட்டை அல்லது கட்டிடத்தை வேறு ஒருவருக்கு கீழ்க் குடியிருப்பு அல்லது வேறு ஒருவருக்கு வாடகைக்கு கொடுக்க முடியாது. இது பொதுச் சட்டத்திலும், 1972ம் ஆண்டின் 7ம் இலக்க வாடகைச் சட்டத்திலும் தடை



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

செய்யப்பட்டுள்ளது. அவ்வாறு கீழ்க் குடியிருப்புக்கு அல்லது வேறு ஒருவருக்கு வாடகை குடியிருப்பாளர் வாடகைக்கு கொடுப்பதாயின் நிலக்கிழாரின் அல்லது உரிமையாளரின் எழுத்திலான முன்கூட்டிய சம்மதம் பெற வேண்டும். அவ்வாறு பெறாது கொடுத்தல் சட்டப்படியான தவறாகும். எனவே நிலக்கிழார் அல்லது உரிமையாளர் வாடகைக் குடியிருப்பாளரை மனையிலிருந்து நீக்குவதற்காக வாடகை ஒப்பந்தத்தை இரத்துச் செய்து மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்து வாடகைக் குடியிருப்பாளரை வெளியேற்ற நீதிமன்றத்தில் வழக்குத் தொடர உரிமை உண்டு.

அவ்வாறு வழக்குத் தொடர்ந்து வாடகைக் குடியிருப்பாளரால் மூன்றாம் நபருக்கு காணி உரிமையாளரின் எழுத்திலான சம்மதமின்றி கீழ்வாடகைக்கு கொடுக்கப்பட்டுள்ளது என்பது நிரூபிக்கப்பட்டால், வாடகை குடியிருப்பாளரும் அவரின் கீழுள்ள உபகுடியிருப்பாளர்கள், கீழ்க்குடியிருப்பாளர்கள் அனைவரும் நீதிமன்ற கட்டளை மூலம் வெளியேற்றப்படுவார்கள்.

அடுத்தபடியாக காணி உரிமையாளரின் அல்லது நிலக்கிழாரின் எழுத்திலான சம்மதமின்றி இக்கட்டிடத்தில் எந்த மாற்றமோ, அல்லது கட்டிடத்துக்கு எந்த சேர்ப்பனவுகளோ அல்லது கட்டிடத்தை இடித்து உடைத்தலோ செய்ய முடியாது. அவ்வாறு செய்யப்பட்டால் காணி உரிமையாளரினால் அல்லது நிலக்கிழாரினால் மாவட்ட நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு வாடகைக் குடியிருப்பாளரையும் அவரின் கீழ் உள்ள அனைவரையும் கட்டிடத்தில் இருந்து வெளியேற்றலாம்.

எப்போதும் வாடகைக் குடியிருப்பாளர் வாடகைக் குடியிருப்பு ஒப்பந்தத்துக்கு அமையவோ வாடகைச் சட்டத்துக்கு அமைவாகவோ செயற்படவேண்டும். அவற்றை மீறும் வகையில் வாடகைக் குடியிருப்பாளர் செயற்பட்டால் அவரின் வாடகை ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டு அவர் காணிக் கட்டிடத்தில் இருந்து வெளியேற்றப்படுவதற்கான ஏற்பாடுகள் பொதுச்சட்டத்திலும், திருத்தத்திற்கு உட்படுத்தப்பட்ட 1972ம் ஆண்டின் 7ம் இலக்க வாடகைச் சட்டத்திலும் காணப்படுகின்றது.




**வாசகர்களே! சட்டம் தொடர்பான புதிய பகுதியொன்று ஆரம்பிக்கப்பட்டிருக்கின்றது. சட்டம் தொடர்பான உங்களுக்கு ஏதும் சந்தேகங்கள் இருப்பின் எங்களுக்கு எழுதி அனுப்புங்கள். அனுபவமிக்க சட்டத்தரணிகள் பதிலளிப்பார்கள்.**



# நல்ல மனைவி




ஒரு பெண் தனது கணவனை அழைத்துக் கொண்டு டொக்டரிடம் சென்றாள். கணவனைப் பரிசோதித்த டொக்டர் மனைவியை தனியே அழைத்து 'உன் கணவன் பலமான மன அழுத்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளான். இதற்கு வேறு வைத்தியங்கள் கிடையாது. ஒவ்வொரு நாளும் காலை, மதியம், இரவு உணவுகளை சத்தான உணவுகளாகக் கொடுக்க வேண்டும். இதற்கெல்லாம் அதிகமாக பணம் செலவழிகிறதே என்று கவலைப்படக் கூடாது.



அவனது மனம் பாதிக்கக்கூடிய எந்தப் பிரச்சினையையும் நீ அவனுக்குச் சொல்லக் கூடாது. தொந்தரவு கொடுக்கக் கூடாது. அவனுக்கு கவலை ஏற்படும் வகையில் நீ நடந்து கொள்ளக் கூடாது. அவனை அன்பால் அனுசரிக்க வேண்டும். இவ்வாறு பத்து மாதங்கள் தொடர்ந்து மேற்கொண்டால் உனது கணவன் பூரணமாக குணமடைந்து விடுவான்' என்றார்.

இருவரும் வைத்தியசாலையை விட்டு வெளியே வந்தனர். அதுவரை அமைதியாக இருந்த கணவன் மனைவியிடம் கேட்டான் 'டொக்டர் என்ன சொன்னவர்'?

சடாரென கணவன் பக்கம் திரும்பிய மனைவி சொன்னாள். 'இன்னும் கொஞ்ச நாளில நீங்கள் சாகப் போறீங்களாம்'.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நகைச்சுவைக் கதை

# விடிய விடிய அடிப்பானைக்குள் எரிந்த 'டோச்லைற்'!





**கனகம்மா** அவளுடைய மகளையும், மருமகனையும், பிள்ளைகளையும் பார்த்துப் போக ஒருநாள் பின்னேரம் வந்தாள். அது ஒரு குக்கிராமம். மின்சார வசதிகள் இல்லை. பாதைகளும் சீராக இல்லை.

அவள் இருந்த வீட்டிற்கும் இவர்களின் வீட்டுக்கும் கிட்டத் தட்ட ஒரு அரை மைல் தூரம் இருக்கும். நடந்து போகலாம், வரலாம். வழக்கமாக காலையில் வரும் கனகம்மா, அன்றைக்கென்று பிற்பகல் ஐந்து மணிபோலதான் வந்திருந்தாள். தன் கைப்படவே செய்த பனங்காப்பணியாரங்களை வரும்போது கொண்டுவந்து பிள்ளைகளின் கைகளில் கொடுத்து அவர்களோடும் மகளோடும் மகிழ்ச்சியாக ஊர்க்கதைகளையெல்லாம் அள்ளிப் போட்டு அலசிக் கதைத்ததில் நேரம் போனதே தெரியவில்லை.



முன்னிருட்டு வேளை நன்றாக இருட்டிவிட்டது. ''புள்ள கதச்சித்திருந்ததில நேரம் போனதே தெரியல்ல. நான் போப்புறன்'' என்றபடி கனகம்மா அவசரமாக எழுந்து நின்றாள். ஏற்கனவே அவளுக்குக் கண்பார்வை சரியில்லை. பார்க்குமிடமெல்லாம் அவளுக்கு பேயிருட்டாகவே தெரிந்தது. மெல்ல மெல்ல நடந்து சென்று ''எங்க புள்ள தெருவாசல் கதவக் காணல்ல?'' என்று மகளும் பேரப்பிள்ளைகளும் நின்றபக்கம் திரும்பிக் கேட்டாள்.



அவளை வழியனுப்பி வைக்க வந்த அவர்கள் அவளது காலுக்குள் நின்றதுகூட கனகம்மாவுக்குத் தெரியவில்லையென்றால் அவளுடைய கண் பார்வையின் 'பவரை' என்னவென்று சொல்வது! ''அம்மா, றோட்டுக் கதவுக்குள்ள நிண்டுத்து, கதவெங்க இரிக்கெண்டு கேக்கிற உங்களால ஊட்ட போக ஏலுமா? ராவைக்கு நிண்டுத்து, காலம்புற போங்கம்மா'' என்றாள் அவள் மகள்.

''உன்ட கதையும், நீயும்! அங்க எல்லாச் சாமானும் துறந்து போட்ட மாதிரிக் கிடக்கு. விடிஞ்சி போனா ஊடுமிருக்காது. டோச்லைற் இருந்தாத் தாங்க. கொண்டு போயித்து, காலம்புற கொண்டு வந்து தாறன்'' என்றாள். கனகம்மா மாமியைப் பார்க்க மரு மகனுக்கும் பரிதாபமாக இருந்தது. அன்றைக்குக் காலையில் தான் புதிதாக வாங்கிவந்த டோச் லைற்றைக் கொண்டுவந்து 'ஒண்' பண்ணி மனைவியின் கையில் கொடுத்து, மாமியாரிடம் கொடுக்கும்படிச் சொன்னான்.

''இடையில் நூத்துப் போடாம அப்படியே கொண்டு போய் ஊட்டவச்சி நூத்துப் போட்டுப் பத்திரமா வச்சிக் கொள்ளுங்க. நான் காலம்புற வந்து வாங்கிறன்'' என்றாள் மகள்.

கனகம்மா 'டோச்சை' அங்குமிங்கும் ஆட்டியபடி வீட்டுக்கு வந்து சேர்ந்து அரிக்கன் லாம்பைப் பற்ற வைத்துவிட்டு, டோச் லைற்றை அணைக்க எவ்வளவோ முயற்சித்தாள். அவளால் முடிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வில்லை. பள பளத்து விடிந் தது.வயலுக்குக் கொண்டுபோவதற்காக மாமியார் நேற்றிரவு வாங்கிவந்த டோச் லைற்றை எடுத்துப் போக மருமகன் தாமோதரம் அங்கே வந்து நின்றான். ''மாமி நான் வயல் காவலுக்குப் போப்புறன். நாளைக்கு விடியத்தான் வருவன். அந்த டோச் லைற்றைத் தாங்க''.

அவ்வளவுதான் தாமதம் கனகம்மா வீட்டுக்குள் ஓடிப்போய் அடுக்குப் பானைக்குள் கையைவிட்டு டோச் லைற்றை எடுத்துக் கொண்டுவந்து கொடுத்துவிட்டு நாணிக்கோணி நின்றாள்.

''என்ன மாமி இது? லைற் நூர்படாம இப்பவும் எரிஞ்சி கொண் டேயிருக்கு?''

''எனக்கு அது நூக்கத் தெரியாம அப்படியே கொண்டு போய் அடிப் பானைக்குள்ள வெச்சனான்'' என்றாள் மாமி.

மருமகன் அதைவாங்கி 'ஓவ்' செய்து மீண்டும் ஒண் பண்ணிப் பார்த்தான். மின்னி மின்னிப் பூச்சியிலும் கேவலமாக அது விட்டுவிட்டு எரிந்தது. ''இரவிரவாகப் பானைக்குள் எரிந்தபடி இருந்ததால் பெற்றி சவுத்துப் பொயித்து புதிசா வாங்க ரவுணுக்குத்தான் போய்வரவேணும். இப்ப என்ன செய்யிற?'' என்று புறுபுறுத்தபடி அவன் அங்கிருந்து வெளியே போனான்.

அமிர்தகழியான்

# குறும்புக்கார மாணவி



வாழ்வியல் பாடம் நடத்திக் கொண்டிருந்த ஆசிரியை-ஒருவர் கடவுள் என்று ஒருவர் இல்லை என்பதை மாணவர்களுக்கு புரிய வைக்க முயன்றார். ஒரு மாணவிஂய அழைத்து ''வெளியே சென்று மரம் தெரிகிறதா பார்'' என்றார்.

அந்த மாணவி ''தெரிகிறது'' என்றாள். ''இலைகள் தெரிகிறதா'' என்று ஆசிரியை கேட்க மாணவி ''தெரிகிறது'' என்றாள். ''கடவுள் தெரிகிறாரா'' என்று ஆசிரியை கேட்டார். ''இல்லை'' என்று மாணவி பதில் அளித்தார். கண்ணுக்கு புலப்படாததால் கடவுள் இல்லை என்று இதன் மூலம் தெரிந்து கொள்ளலாம் என்றார்.

உடனே வகுப்பறையில் இருந்த மற்றுமொரு குறும்புக்கார மாணவி அதே மாணவியை அழைத்து ''ஆசிரியை தெரிகிறாரா''? என்று கேட்டாள். ''தெரிகிறார்'' என்று முதல் மாணவி பதில் அளித்தாள்.

உடனே குறும்புக்கார மாணவி ''ஆசிரியையின் மூளை தெரிகிறதா'' என்று கேட்டாள். ''இல்லை'' என்று முதல் மாணவி கூற ''அதனால் ஆசிரியைக்கு மூளை இல்லை என்று முடிவு செய்து கொள்ளலாமா?'' என்றாள்.



# தெற்காசிய உதைபந்தாட்டம்

SAFF CHAMPIONSHIP

தெற்காசிய கால்பந்தாட்ட சாம்பியன்ஷிப் தொடரின் இறுதிப் போட்டியில் மாலைதீவு அணியை, 3 - 1 என்ற கோல் கணக்கில் வீழ்த்தி இந்திய அணி வெற்றி வாகை சூடியது. பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் 8 ஆவது தெற்காசிய கால்பந்தாட்ட சாம்பியன்ஷிப் தொடர் நடந்தது.


இந்தியா, இலங்கை, பாகிஸ்தான், பங்களாதேஷ் உட்பட 8 நாடுகள் பங்கேற்ற இத்தொடரில் லீக் சுற்றில் அபார ஆட்டத்தை வெளிப்படுத்தி இலங்கை, இந்தியா, பங்களாதேஷ், மாலைதீவு அணிகள் அரையிறுதிக்கு முன்னேறின. அரையிறுதியில் இந்தியா, மாலைதீவு அணிகள் வெற்றி பெற்று இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றன. கடந்த 13 ஆம் திகதி நடந்த இறுதிப் போட்டியில் இந்தியா, மாலைதீவு அணிகள் மோதின.

போட்டியின் ஆட்டநேர முடிவில் இரு அணியினரும் கோலடிக்கவில்லை. இதனால் இரு அணியினருக்கும் மேலதிக நேரம் வழங்கப்பட்டது. அதிலும் இரு அணியினரும் சாதிக்கத் தவறினர். இதனால்"பெனால்டி ஷூட்"முறையில் வெற்றி தீர்மாணிக்கப்பட்டது. இந்திய அணி 3-1 என்ற கோல் கணக்கில் வெற்றி பெற்றது.இந்திய அணி 7ஆவது முறையாக (1993, 1995, 1997, 1999, 2005, 2008, 2009) இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறி, ஐந்தாவது முறையாக (1993, 1997, 1999, 2005, 2009 ) சாம்பியன் கிண்ணத்தை வென்றுள்ளது. இதன் மூலம் ஐந்துமுறை கிண்ணத்தை வென்ற முதல் அணி என்ற சாதனை இந்திய அணிக்கு சொந்தமானது. கடந்த ஆண்டு நடந்த இத்தொடரின் இறுதிப் போட்டியில் மாலைதீவு அணியிடம் அடைந்த தோல்விக்கு இந்திய அணி இம்முறை பதிலடி கொடுத்தது. மாலைதீவு அணி நான்காவது முறையாக (1997, 2003, 2008, 2009) இத்தொடரின் இறுதிப் போட்டிக்கு முன்னேறி, ஒரேயொரு முறை (2008) மட்டும் கிண்ணத்தை வென்றுள்ளது

-ஆகாஷ்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கமலா - என்ன கனகா? கொஞ்ச நேரமாப் பாத்துக் கொண்டிருக்கிறன். உம்மடை முகத்திலை எள்ளும் கொள்ளும் வெடிக்குது.

கனகா - அந்த மனேஜரை நினைச்சா ஆத்திரம் ஆத்திரமா வருது மாமி.

கமலா - ஏன் ஏன்? என்ன விஷயம்? என்ன சொன்னவர்?

கனகா - அவரோ? எனக்கு வாற கோவத்திலை "அவனே இவனே" எண்டு பேசலாம் போலை இருக்கு.

கமலா - அட என்ன நடந்ததெண்டுதான் சொல்லுமன்.

கனகா - கன காலமா நடக்குது மாமி. வேலைச்சாக்கிலை அறைக்குள்ளை கூப்பிட்டுப் பாக்கிற பார்வையும்.. பக்கத்திலை ஒட்டிக்கொண்டு நிக்கிறதும்.. கையைப் பிடிக்கிறதும்.. சரி பிரச்சினை கிளப்ப வேணாமெண்டு இவ்வளவு காலமும் சும்மா இருந்தன். இண்டைக்கு.... இண்டைக்கு...

கமலா - இண்டைக்கு என்ன?

கனகா - இண்டைக்கு அவனின்ட அறைக்குள்ள நிண்டு நான் பைல் டொக்யூமண்ட்ஸைப் பாத்துக் கொண்டு நிக்கேக்க பின்னால வந்து கட்டிப் பிடிச்சுட்டான்! எனக்கு பதற துவங்கிட்டுது.

கமலா - சீச்சீச்சி அரியண்ட வேலை. ஆனா தெரிஞ்சு கொண்டும் இவ்வளவு நாளும் ஏன் ஒண்டும் செய்யாம இருந்தனீ?

கனகா - என்ன செய்யிறது? என்ட பொஸ்ஸைப் பற்றி எல்லாம் தெரியுந் தானே? லீவு கேட்டுப் போனாலும், ஒரு கொலர்ஷிப் எண்டாலும் அவன் என்ன செய்வானெண்டு? பழி வாங்கு வான் இல்லையோ?

கமலா - அ... அ... அ... இனி அப்பிடியெல்லாம் அவர் ஒண்டும் செய்யேலாது தெரியுமோ? தொழில் பார்க்கிற இடங்களில பாலியல் தொந்தரவுகள் ஏற்படுறதுக்கு எதிரா நடவடிக்கை எடுக்கக்கூடிய மாதிரி இப்ப சட்டம் வந்திருக்குது தெரியுமோ?

கனகா - சட்ட நடவடிக்கை எண்டா நாங்கள் சாட்சி அது இது எண்டு காட்ட வேணுமே?

கமலா - தேவையே இல்லை. அவருக்கு இந்த நோக்கம் இருந்ததெண்டு ஏதாவதொரு தடயம் இருந்தாப் போதும்.



# பாலியல் தொந்தரவுகள்

கனகா - அப்பிடியே மாமி?


கமலா - இதையும் கேளும். அவர் ஏதும் இசகு பிசகா எழுதிற ஈமெயில் காகிதங்களைப் பத்திரப்படுத்தி வையும். அவர் சேட்டை ஏதும் விடப்பாக்கேக்கை வேற யாரும் பாத்துக் கொண்டிருந்தாலும் நன்மைதான். அதுக்குப் பிறகு அவரின்ட நடவடிக்கை தொடர்பாக நீர் சொல்லுற எல்லாக் கதையும் கோர்ட்டில செல்லுபடியாகும் தெரியுமா?

கனகா - சும்மா.. எனக்கு இவ்வளவு நாளும் இது தெரியாமப் போச்சே!

கமலா - அதுக்குப் பிறகு நீர் தனக்கு எதிராகக் கோர்ட்டுக்கு போனனீர் எண்ட காரணத்துக்காக உம்மைப் பழிவாங்க அவர் உம்மடை வேலை விஷயங்களில தலை போட்டாரெண்டா நீர் உயர் நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மனு தாக்கல் செய்யலாம். எதுக்கும் ஒரு லோயரைப் பாருமன். காசுப் பிரச்சினை ஏதுமெண்டா அதுக்கும் கவலையில்லை. இந்த மாதிரி விஷயங்களுக்கு இலவசமா சட்ட ஆலோசனை தர நிறைய அமைப்புக்கள் இருக்குது கண்டீரோ.

கனகா - எனக்கு ஆறுதலா இருக்குது மிஸ் கமலா. பின்னேரம் இந்த விஷயம் தொடர்பான லோயர் யார் எண்டு விசாரிச்சு அப்பாயின்மன்ட் எடுப்பம்.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# விஜயின் தோல்விகளின் நீட்சி?

**நேர்மையான** பொலிஸ் அதிகாரியாக வர விரும்பும் மாணவன், கால ஓட்டத்தில் ரவுடிகளையும் சமூக விரோதிகளையும் அழிக்கும் வேட்டைக்காரன் ஆவதே அறிமுக இயக்குனர் பாபு சிவன் இயக்கத்தில் விஜய் நடித்து வெளியாகியிருக்கும் 'வேட்டைக் காரன்' திரைப்படத்தின் கதை.

ஏ.வி.எம் தயாரிப்பில் வெளியாகியிருக்கும் இந்தப் படத்தில் அனுஷ்கா, சலீம் கோஸ், ஷாயாஜி ஷிண்டே, சிறிநாத் உள்ளிட்டோர் நடித்துள்ளனர். விஜய் அண்டனி இசையமைத்துள்ளார். ஒளிப்பதிவை கோபிநாத் கையாண்டுள்ளார். கலை இயக்கத்தை மிலனும் படத்தொகுப்பை வி.ரி. விஜயனும் செய்துள்ளனர்.

தூத்துக்குடியில் நண்பர்களுடன் சுற்றிக்கொண்டும் சமூகத்தில் நடக்கின்ற தவறுகளை தட்டிக்கேட்டும் வருகிற ரவிக்கு (விஜய்) நேர்மையான பொலிஸ் அதிகாரியாக வரவேண்டும் என்று ஆசை. அந்த ஆசைக்கு தூண்டு கோலாய் இருந்தவர் பொலிஸ் அதி காரி தேவராஜ். தூத்துக்குடியிலிருந்து கல்லூரி கல்விக்காக சென்னை வரும் ரவி, வரும் வழியில் சுசிலாவைச் (அனுஷ்கா) சந்திக்கிறார். அதன் பின்னர் ரவிக்கும் சுசிலாவுக்கும் காதல் வர வேண்டும் என்பது இந்தியச் சினிமாவின் எழுதப்படாத விதி. அதுவே வேட்டைக்காரனிலும் தொடர்கிறது.


கல்லூரியில் சேர்ந்து படித்துக் கொண்டு தன்னுடைய வருமானத்திற்காக ஆட்டோவும் ஓட்டுகிறார் ரவி. இவ்வாறாக கதையின் நீட்சி வில்லன் குழுவின் செல்லாவை சந்திக்க வைக்கிறது. பின்னரான கதை ஓட்டத்தில் ரவி பொலிஸ் ஆனாரா? வில்லன்கள் எவ்வாறு பழிவாங்கப் பட்டார்கள்? ரவி சுசிலாவை கைப் பிடித்தாரா? என்பதே படத்தின் மீதிக்கதை.

எத்தனை




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

படத்தில் இதே கதை சொல்லி யாகிவிட்டது என்ற உங்களின் ஏக்கம் புரிகிறது. என்ன செய்ய நாங்கள் பார்ப்பது இந்தியச் சினிமா. பருத்திவீரன், பா, சக்தே இந்தியா, மொழி போன்ற வித்தியாசமான கதைக் களங்களைக் கொண்ட படங்கள் எப்போதாவது ஒருமுறை தான் வரும். நாங்களும் பொறுத் திந்துதான் பார்க்க வேண்டும். கல்லூரி மாணவராக வரும் விஜய் படம் முழு வதிலும் வில் லன்களைப் பந் தாடுகிறார். அனுஷ்காவுடன் நடனமாடுகிறார். ஆங்காங்கே தன் னுடைய அரசியல் ஆசையை வச னங்களின் மூலம் வெளிக் காட்டு கிறார். என்ன வயது ஆனாலும் பதின்ம வயதை தாண்டிய தோற்றத்திலேயே இருக்கிறார். மற்றப்படி விஜய் மாறவில்லை. மாறவும் போவ தில்லை.




'இரண்டு' படத்தின் மூலம் தமிழ் சினிமாவுக்கு அறிமுகமான அனுஷ்கா சிறிய இடைவெளிக்குப் பின்னர் வேட்டைக்காரனில் மீள் அறிமுகமாகியிருக்கிறார். இயக்குனர் சொன்னதை செய்திருக்கிறார். தமிழ் சினிமாவில் வழமைக்கு மாறாக சற்று உயரமான கதாநாயகி. 'தேவநாயகம்' எனும் பெயரில் தொழில் அதிபர், தாதா இன்னும் பிறவாக வரும் சலீம் கோஸ் நல்ல பொருத்தம். நீண்ட இடைவெளிக்குப் பின்னர் தமிழ் திரையுலகில் அவரைக் காண முடிகிறது. ஷாயாஜி ஷிண்டே, சிறிநாத், சத்யன், டெல்லி கணேஸ். என்று படத்தில் அனேக நடிகர்கள் இயக்குனர் சொன்னதைச் செய்திருக்கிறார்கள்.

வேட்டைக்காரன் பலங்களில் ஒளிப்பதிவையும், கலை இயக்கத்தையும் குறிப்பிட்டுச் சொல்லலாம். பாடல் காட்சிகளிலும், சண்டைக் காட்சிகளிலும் ஒளிப்பதிவின் அனுபவத்தை வெளிப்படுத்தியுள்ளார் கோபிநாத். 'பில்லா' படத்தில் கலை இயக்கத்தில் ஆடம்பரம் காட்டிய மிலன் இந்தப் படத்திலும் தன்னை நிரூபிக்க முயன்றுள்ளார்.



சண்டைக் காட்சிகள் குருவி, ஆதவன் என்று ஏற்கனவே எம்மை எரிச்சலூட்டிய யதார்த்த மீறல்கள் கொண்ட காட்சிகளின் தொடர்ச்சியே வேட்டைக்காரனிலும். படத்தின் பலமும், பலவீனமும் விஜய் அண்டனியையே சாரும். பாடல்களில் சில ஏற்கனவே வெற்றி பெற்றுவிட்டதால் இரசிகர்களை திரையரங்குக்கு அழைத்து வர உதவும். ஆனால் பின்னணி இசை சொல்லும்படியில்லை. இயக்குனர் தரணியின் படங்களில் இணை இயக்குனராகவும் வசனகர்த்தாவாகவும் பணியாற்றிய பாபு சிவனை இரசிகர்கள் வெற்றி இயக்குனராக்குவது கேள்விக்குறியே. வேட்டைக்காரனின் கதை, திரைக்கதை ஏற்கனவே பழக்கப்பட்டது. வசனங்களில் வசனகர்த்தா பாபு சிவனை காண முடிகிறது.



குருவி, வில்லு என்று தொடர்ச்சியான சரிவுகளில் இருக்கும் விஜய்க்கு வேட்டைக்காரன் அதே வலியைத் தரமாட்டான் என்று நம்பலாம். அதற்கு சன் பிக்சர்ஸின் விளம்பர உத்தி உதவக்கூடும். ஆனாலும் தமிழ் சினிமாவின் வசூல் ராஜாவாக வலம் வந்த விஜய்க்கு வேட்டைக்காரனும் பெரிதாக கைகொடுக்கவில்லை.


மலர்மகன் தங்கமயில்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செவ்வந்தி தலைகுனிந்திருந்தாள். அவளருகில் தனபாலன் மேற்கொண்டு என்ன பேசுவதென்று தெரியாமல் தூரத்திலிருக்கும் மலை முகடுகளையே பார்த்துக் கொண்டிருந்தான். அது மாலை நேரமானதால் மலையகத்துக்கேயுரிய குளிர்காற்று உடம்பை சுகம் விசாரித்தது. பெயர் தெரியாத குருவியொன்று எங்கிருந்தோ விட்டு விட்டுக் கத்தியது. கீழே பள்ளத்தில் ஒற்றையடிப் பாதையில் தொழிலாளர்கள் சிலர் சத்தமிட்டவாறு போய் கொண்டிருந்தார்கள். தனபாலன் நீண்டதொரு பெருமூச்சுடன் மறுபடியும் அவளை தீர்க்கமாக பார்த்தான்.

“இங்க பாரு செவ்வந்தி எங்கமாவுக்கு வரவர கண்ணும் சரிவர தெரிய மாட்டேன்னுது. நான் இன்னைக்கி படிச்சி பட்டம் வாங்கி ஒரு ஆசிரியனா இருக்கேன்னா அதுக்கு முழுக்க முழுக்க காரணமானவங்களா இருக்கிறது என்னோட அம்மாதான் வயசான காலத்துல அவங்கள நல்லா வச்சிக்கணும்னு பார்க்கிறேன். எங்கம்மா மேல என்னை மாதிரியே நீயும் அதிகமா அன்பு வச்சிருக்கே. அதுனாலத்தான் உன்னையே மணம் முடிக்கவும் விரும்புறேன். ஆனா நீயோ என்னவெல்லாமோ காரணங்களை சொல்லி காலத்தை கடத்துறே. அதுனாலத்தான் கடைசியா இன்னைக்கி உன்னோட உறுதியா பேசிட்டு போக

# கரை சேராதவர்கள்



வந்திருக்கேன். தவளை எவ்வளவு துள்ளினாலும் குட்டையிலேயே கிடக்குமுன்னுற மாதிரி நீ என்னதான் சிந்தனை செய்தாலும் கவலை உன்னை விட்டு போறமாதிரி தெரியலை. என்னாலும் உன்னை கைவிட முடியவில்லை

செவ்வந்தி சட்டென நிமிர்ந்தாள். அவள் கண்கள் இலேசாக கலங்கியிருந்தன.

“உங்களுக்கு என்னோட பிரச்சனைகள் எல்லாம் நல்லாகவே தெரியும்தானே. செவ்வாய் தோசமுள்ள அக்காவுக்கு இப்பதான் ஒரு வரன் அமைஞ்சிருக்கு. நோயால படுத்தப்படுக்கையாயிருக்கிற அம்மாவை சுகம் பார்க்க பணம் இல்ல. பேராதனை பல்கலைக் கழகத்துல ரெண்டாவது வருஷம் படிக்கிற தம்பி மேற்கொண்டு படிக்க பணம் வேணும். அப்பா மலையில வேலை. நான் காமென்சுல வேலை. ரெண்டு பேர் உழைச்சும் பத்தலை. அதனால தான் கொழும்புக்குப் போக முடிவு செஞ்சிட்டேன். அட்வான்சா பெரிய தொகை தாராங்க. பங்களாவுல வேலையாம். கிடைக்கிற அட்வான்ஸ் பணம் அக்காவோட கல்யாணத்துக்கும், அம்மாவோட நோயை குணப்படுத்தவும் போதும். ஒருவருஷம் நான் கொழும்புலதான் இருக்கணும் வரமுடியாது. எனக்கு இதைத்தவிர வேற வழியும் தெரியலை. உங்களை மணம் முடிக்க எனக்கு ஆசைதான். ஆனா கடமை என்னை கட்டிப் போட்டிருச்சி. முதல்ல என் வீட்டு விளக்கை ஏத்திதான் உங்க வீட்டு விளக்கை என்னால ஏத்தி வைக்க முடியும்..”

தனபாலன் சட்டென எழுந்து கொண்டான். “உன்னை மாதிரி நல்ல மனசுள்ளவளை என்னால இழந்து விடமுடியாது. ஒரு வருஷம்தானே பரவாயில்லை. நான் காத்திருக்கிறேன். உன்னோட கடமைகளை முடித்து விட்டு வா -நான் உன்னை கைப்பிடிக்கிறேன்...”

அவர்கள் மௌனமாக பிரிந்தார்கள். மறுநாள் காலை செவ்வந்தி வேலைக்கு செல்லவில்லை. அவள் அக்கா தனலட்சுமியும் மலைக்குப் போகவில்லை. தனலட்சுமி தன் தங்கைக்கு பிளெய்ன்ட் டீ ஊற்றி வந்து கொடுத்தவாறு பரிவுடன் அவளை நோக்கினாள். “ செவ்வந்தி ..நீ கொழும்புக்கு போக வேணாம். எனக்கு கல்யாணம் நடக்காட்டியும் பரவாயில்லை. நீ..கொழும்பு போகாதே. என் வாழ்க்கையை வளமாக்குறதுக்காக கொழும்பு போய் உன் எதிர்காலத்தையே நீர்மூலமாக்கிக்கப் போறியா...வேணாம்...நான் சொல்லுறதை கேளு....”

“இல்லக்கா..என் முடிவுல எந்த மாற்றமும் இல்லை. உன்னோட வாழ்க்கை நல்லபடியா அமையணும். அம்மா சுகமாகணும். தம்பி தொடர்ந்து படிக்கணும். இதெல்லாம் ஒழுங்கா நடக்கணும்னா நான் கொழும்புக்கு போயேயாகணும். ஒரு வருஷம் தானே அப்புறம் ஓடி வந்துடுவேன். நான் என்ன கொலைக்களத்துக்கோ போறேன். கொழும்புக்குத்தானே. அடிமை போல உழைச்சா நிச்சயமா அரசன் போல வாழமுடியும்னு நம்புறேன்...கண்டதையும் நினைச்சி கலங்காம போய் அம்மாவை கவனி..”



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இரண்டு நாட்கள் ஓடின. செவ்வந்தி புரோக்கர் பன்னீர் செல்வத்துடன் பஸ்ஸில் ஏறினாள். செவ்வந்தியின் தந்தை மாரிமுத்து கையிலிருந்த கட்டுக்கட்டான பணத்துடன் செவ்வந்தியை வழியனுப்பினான். அவன் வாழ்நாளில் இவ்வளவு பெரிய தொகையை பார்த்ததேயில்லை. கைநிறைய பணத்தை பெற்றுக்கொடுத்துவிட்டு கண்களில் கண்ணீருடன் கொழும்புக்கு போகும் தன் மகளை மறக்க செய்துவிட்டது பணம். செவ்வந்தி கொழும்பில் எந்த இடத்தில் வேலை செய்ய செல்லுகிறாள். முதலாளி பெயர் என்ன? என்று எந்த விடயத்தையும் பற்றி தெரிந்துக் கொள்ளாமல் புரோக்கருடன் தனியாக அனுப்பி விட்டு பணத்தை நெஞ்சோடு வாரியணைத் தவாறு ஆனந்தமாக நடந்தான் மாரிமுத்து., "ஏய் மாரி என்னப்பா கையில இவ்வளவு பணத்தோட நான் வாரதையும் பார்க்காம ரொம்ப சந்தோஷமா போறே..."

"அட சுந்தரமா ஒண்ணுமில்லப்பா என் மகள் கொழும்புக்கு வேலைக்குப் போறா. அதுக்காக கிடைச்ச அட்வான்ஸ் பணம் தான் இது..."

"என்னது கொமர் புள்ளையை கொழும்புக்கு அனுப்பிட்டியா? அதுவும் புரோக்கரோடயா..? உனக்கென்ன பைத்தியமா? கொழும்பு நெலமை சரியில்லைன்னு தெரிஞ்சும் புடிச்சி அனுப்பிட்டியா.."

"நீ சும்மா இரு சுந்தரம். மூத்த மவளுக்கு கல்யாணம் பேசியிருக்கு. காசு வேணும். வெறும் கையில முழம் போட முடியுமா? எனக்கு வேற வழிதெரியலை. அவ புத்திசாலி பொழைச்சிக்குவா..." "ம்..வயசு புள்ளையை வறுமையை காரணம் காட்டி காட்டுல தள்ளிட்டு அதுக்கு நொண்டி சாக்கு வேற சொல்லுறே. காலா காலமாக கஷ்டப்பட்டுக்கிட்டிருக்கிற நமக்கெல்லாம் என்னைக்கிதான் நல்ல காலம் பொறக்குமோ தெரியலை.."

இரண்டு மாதங்கள் சென்றன. செவ்வந்தியிடமிருந்து வாரத்துக்கொரு கடிதம் வந்தது. ஆனால் அதில் விலாசம் இருப்பதில்லை. அவசர அவசரமாக எழுதியதைப்போல இருந்தது. மேலும் இரண்டு மாதங்கள் சென்றன. அன்று சனிக்கிழமை அன்றைய தமிழ் நாளிதழொன்றில் பின்வருமாறு ஒரு செய்தி வெளியாகியிருந்து.

"இளம் பெண்ணொருத்தியின் சடலம் கடற்கரையில் கிடந்தது. சுமார் 25 வயது மதிக்கத்தக்க அந்தப் பெண்ணினருகில் ஒரு கடிதம் கண்டெடுக்கப் பட்டது. அதில் தான் தீராத வியாதியினால் மிகவும் கஷ்டப்பட்டதாகவும் எனவே வேதனை தாங்க முடியாமல் தற்கொலை செய்து கொண்டதாகவும் தமிழில் எழுதப்பட்டிருந்ததாம். பொலீசார் தீவிர விசாரணையாம்."

பாவம் தன் மகள் செவ்வந்தி மர்மமான முறையில் சடலமாக கொழும்பு பெரியாஸ்பத்திரி பிணவறையில் கிடப்பது தெரியாமல் மாரிமுத்து தன் மூத்த மகள் தனலட்சுமியின் நிச்சய தார்த்தத்தை செய்துக் கொண்டிருக்கிறார். வெளிச்சத்தால் கவரப்பட்டு விளக்கில் விழுந்து மடியும் விட்டில் பூச்சிகளைப் போல வறுமையை விரட்ட கொழுத்த சம்பளத்துக்காக கொழும்புக்குப் போய் மரணத்தை சந்திக்கும் மலையகப் பெண்கள் பாவப்பட்ட ஜென்மங்கள்தான்!

(யாவும் கற்பனை)


-பாலா சங்குப்பிள்ளை-



உலகில் 40 லட்சம் மக்கள் எயிட்ஸ் வைரசுக்கு எதிரான மருந்துகளை பெறுகிறார்கள். ஆனால் இன்னும் ஒரு 50 லட்சம் பேரைப் பொறுத்தவரை அவர்களுக்கு சிகிச்சை தேவைப்படுகின்ற போதிலும் இந்த மருந்துகள் அவர்களுக்கு இதுவரை கிடைக்கவில்லை. எச்.ஐ.விக்கு எப்போது சிகிச்சையை ஆரம்பிக்க வேண்டும் என்பது குறித்த உலக சுகாதார நிறுவனத்தின் பரிந்துரைகளின்படி மேலும் 30 தொடக்கம் 50 லட்சம் பேர் சிகிச்சைக்காக காத்திருப்போர் பட்டியலில் இணைகிறார்கள். எச்.ஐ.வி தொற்று ஏற்பட்டவர்கள் அவர்களது நோய் எதிர்ப்பு தொகுதி பலவீனமடைந்து அதற்கான சமிக்ஞைகள் தென்படத் தொடங்குவதற்கு முன்னதாக மருந்துகளைப் பயன்படுத்த ஆரம்பிக்க வேண்டும் என்று உலக சுகாதார நிறுவனம் தெரிவிக்கின்றது.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுமாறும் வயதில் தடம் மாறாமல் இருக்க




**எல்லோருடைய** வாழ்விலும் கல்வி என்பது அவர்களது எதிர்காலத்தை தீர்மானிக்கும் முக்கிய காரணியாகின்றது. இந்தக் கல்வியைப் பெறுவதில் பலரும் பல்வேறு பிரச்சினைகளை எதிர்கொள்கின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில் பாடசாலைக் கல்வி என்பது இலவசப்படுத்தப்பட்டிருப்பதால் அதைப் பெறுவதில் எவருக்கும் தடையில்லை. ஆனாலும் வறுமை மற்றும் இதுவரை காலமும் இருந்து வந்த போர்ச்சூழல் காரணமாக இடையூறில்லாமல் கல்வியைப் பெறுவதில் மாணவர்கள் சிக்கலை எதிர்நோக்குகின்றனர். எமது நாட்டில் தரம் 5 வரையான ஆரம்பப் பாடசாலைகள் அதேபோல் தரம் 9 வரை, தரம் 11 வரை மற்றும் உயர்தரம் வரையிலான பாடசாலைகள் பொதுவாக உண்டு. இவ்வாறான, நிலைமைகளில் படிக்க வேண்டும் என்று ஆர்வம் உள்ளவர்களும் வறுமை மற்றும் பிற இன்னல்களுக்கு உட்படாதவர்களும் மட்டுமே பூரணமாக உயர்தரம் வரை தமது கல்வியைத் தொடருகின்றனர். இதில் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையுள்ள பெற்றோருக்கு பெரும் பங்கு இருக்கின்றது. குறிப்பாக தரம் 9 , 10 மற்றும் சாதாரண தரம் வரை உள்ள பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்கள் தங்கள் பாடசாலையில் உள்ள வகுப்புக்கள் வரை படித்து முடிந்தவுடன் இன்னொரு பாடசாலையில் கல்வியைத் தொடராமல் கல்வியை இடை நடுவே விட்டு விடுகின்றனர். இவ்வாறான நிலைமைகள் கிராமப்புறங்களில் அதிக அளவில் காணப்படுகின்றன. அந்த மாணவர்கள் தங்கள் குடும்பங்களைக் காப்பாற்ற தொழிலுக்குச் சென்று விடுகின்றனர். மாணவர்களின் கல்வியில் பாடசாலையின் அமைப்புமுறை மிகப்பிரதான இடம் வகிக்கின்றது. எனவே பின்தங்கிய பிரதேசங்களில் சிறிய பாடசாலைகளில் ஆகக்குறைந்தது சாதாரண தரம் வரையாவது கற்பதற்கான நடவடிக்கைகளை கல்வியமைச்சு எடுத்து அதற்குரிய கட்டிட வசதிகள் மற்றும் ஆளணி வசதிகளை செய்து கொடுக்க வேண்டும்.

என்ன தான் உயர்தரம் வரை படித்தாலும் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவாவோரின் எண்ணிக்கை 10 வீதத்திலும் குறைந்தவர்களே? ஏனையவர்கள் கல்வியியல் கல்லூரிகளிலும் பிற அரச உயர்கல்வி நிலையங்களிலும் கல்வியைத் தொடருகின்றனர். கல்வியைத் தொடர நினைக்கும் ஏனையவர்களின் நிலை என்ன? இந்த தருணத்தில்தான் தக்க முடிவினை எடுக்க வேண்டும். வசதியுள்ள மாணவர்கள் மேல்படிப்பை வெளிநாட்டில்கூடத் தொடர்வார்கள். ஆனாலும் அவர்கள் வெளிநாடு செல்வதற்கான வழிவகைகளை கண்டறிய வேண்டும். அதற்கு அவர்கள் தெரிவு செய்யும் துறைகளும் கல்வி நிலையங்களும் முக்கியம் பெறுகின்றன.





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



கிராமப்புறங்களில் இருந்து நகர்ப்புறத்திற்கு மேற்படிப்புக்காக வரும் மாணவர்கள். சிறந்த வழிகாட்டல் இல்லாமல் காசையும் நேரத்தையும் செலவழித்து இறுதியில் கெட்டுக் குட்டிச்சுவராகிவிடுகின்றனர். இவர்கள் மொழிப் பிரச்சினையை எதிர்கொள்வதால் தெரிவுகள் தவறாகி விடுகின்றன. ஏதோ தலைநகர் வந்ததற்காக ஏதாவது ஒன்றைத் தொடங்குவார்கள். இவ்வாறு தளம்பிய மனதில் உள்ளவர்களுக்காக வருடந்தோறும் இலங்கை உயர்கல்வி அமைப்புக்கள் சேர்ந்து ஒரு கல்விக் கண்காட்சியினை ஒழுங்கு செய்கின்றன. இங்கு ஏற கூச்சப்படும் வெளிநாட்டுக் கல்வி நிறுவனங்களின் அதிகாரிகள்கூட எங்களை வரவேற்று சிறந்த ஆலோசனைகளையும் தெரிவுகளையும் வழங்குவார்கள். இவ்வாறான ஒரு உயர்கல்விக் கண்காட்சி ஒன்று (ADYAPANA) கடந்த மாதம் பண்டாரநாயக்க சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் இலவசமாக இடம்பெற்றது. அத்துடன் அக்காலப் பகுதியில் மூன்று நாட்கள் வழிகாட்டல் செயலமர்வுகளும் நடைபெற்றன.

இன்றைய இளையவர்களுக்கு வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுக்கும் இளைஞர்களுக்கான நாளைய அமைப்பின் தலைவரும் ஜனாதிபதியின் புதல்வருமான நாமல் ராஜபக்ஷ இந்த கண்காட்சி· இடம்பெற்ற பத்திரிகையாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கையில் "தொழில்நுட்ப உலகத்தில் நாங்கள் வாழ்ந்து கொண்டு இருக்கின்றோம். வளர்ந்து வரும் தொழில்நுட்பம் இந்த உலகத்தையே ஒரு குக்கிராமமாக மாற்றுகின்றது. கல்வி என்பது அறிவார்ந்த ஒரு சமூகத்தை கட்டி எழுப்புவதாகும். இது தான் நுண்ணறிவுள்ள சமூகத்திற்கு ஊன்றுகோலாக விளங்கும். இதற்கான தேவையை அடைவதற்கு உறுதியான பாதையாக எமது நாட்டம் உள்ளது. எங்களுடைய இளைஞர்களுக்கான நாளைய அமைப்பானது நாளை ஒரு புதிய உலகை அமைப்பதற்கு நம்பிக்கை கொண்டுள்ளது. எங்களுடைய விருப்பம் இன்றைய இளைஞர்களை அதிகாரம் படைத்த அறிவுள்ளதும் புத்தி சாதுரியம் உள்ளவர்களாக மாற்றி நாளைய உலகை வெல்வது. இந்தக் காரணங்களுக்காகத்தான் நாங்கள் இளைஞர்களுக்கும் யுவதிகளுக்கும் ஆதரவளிக்கின்றோம். அவர்களை நாளைய உலகத்துடன் இணைந்து வாழ வழிப்படுத்துகின்றோம் அறிவூட்டுகின்றோம். எந்த சந்தேகமும் இல்லாத உறுதியான இளைஞர்கள் ஏமாற்று இல்லாத தேசத்திற்கு மதிப்புள்ளவர்களாவார்கள். நாங்கள் வழிகாட்டல் அளித்துள்ளோம். நாளை பொறுப்புள்ள இளைஞர்கள் நாட்டை கட்டியெழுப்புவதற்கான சமுதாயத்தை உருவாக்க வேண்டும். அவர்களுக்காக எமது அமைப்பு கருத்தரங்குகள், கலந்துரையாடல்கள், தொழில்பயிற்சிகள் என்பவற்றை தரம் 5 மற்றும் சாதாரணதரம், உயர்தரம் மாணவர்களுக்கு வழங்குகின்றோம். அதனால் அவர்களுக்கு நிச்சயம் நன்மை உண்டு. எதிர்வரும் காலங்களில் இவ்வாறான கண்காட்சிகளை தலைநகர் தவிர்ந்து யாழ்ப்பாணம், கண்டி, வவுனியா போன்ற இடங்களிலும் நடாத்தத் திட்டமிட்டுள்ளோம்" என்று கூறினார்.

இந்தக் கண்காட்சிக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் வழங்கிய வாழ்த்துச் செய்தியில் "ஆசிய நாடுகளுடன் ஒப்பிடும் போது எமது நாட்டில் கல்வி அறிவானது உயர்ந்த நிலையில் உள்ளது. எப்படியிருந்தாலும் நாங்கள் எமது நாட்டின் பின் தங்கிய இடங்களுக்கும் கல்வி வசதிகளை கொண்டு செல்ல கடின முயற்சி எடுக்க வேண்டும். வடக்கு கிழக்கு மற்றும் மலையகப் பிரதேசம் கடந்த சில வருடங்களாகப் புறக்கணிக்கப்பட்டு வந்தது. பாடசாலையில் இருந்து விலகும் மாணவர்களுக்கு அவர்களின் வாழ்க்கையை நிரப்புவதற்கு இவ்வாறான கல்வி நிலையங்கள் வழிகாட்டும். இவ்வாறான மாணவர்களுக்கு இலங்கை அரசாங்கத்தின் கீழ் இயங்கும் தொழில்நுட்பக் கல்லூரிகளும் தனியார் உயர்கல்வி நிறுவனங்களும் பெரிய சேவையாற்றுகின்றன. துரதிஷ்டவசமாக பின்தங்கிய மாவட்டங்களிலுள்ள மாணவர்கள் இவ்வாறான உயர்கல்வி வாய்ப்புக்கள் பெற வாய்ப்பில்லை. இந்த மாதிரியான கண்காட்சி அவர்களுக்கு பெரிதும் உதவும். எனவே அங்குள்ள மாணவர்கள் இவ்வாறான கண்காட்சிகளில் கலந்து கொண்டு





Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தங்கள் கல்வித் தகைமைகளை வளர்த்துக் கொள்ள வேண்டும்" என்றார்.

இவ்வாறான பெரும் கண்காட்சிகளை திறம்பட ஒழுங்கமைப்பு செய்யும் இலங்கை கண்காட்சி மாநாட்டு சேவைகள் தனியார் நிறுவனத்தின் முகாமையாளர் அர்ஜூன் தர்மதாஸ கருத்துக் கூறுகையில் "இவ்வாறான கண்காட்சியை ஏற்பாடு செய்வதில் பெருமையடைகின்றேன். எங்களுடைய நோக்கமே கல்வித்துறையைச் சேர்ந்த பங்காளிகள் அனைவரையும் ஒன்றிணைப்பதாகும். அத்தியாப்பண (ADYAPANA) இலங்கையில் மிகப்பெரிய, மிகவும் தூரநோக்குக் கொண்ட உயர்கல்வி கண்காட்சியாகும். இலங்கையிலுள்ள இளைஞர் யுவதிகளுக்கு அவர்களுடைய எதிர்காலம் பற்றி வழிகாட்டுவதற்கு இது ஊடகமாக அமையும். இதனால் ஜனாதிபதி விருது வென்ற கம்பனியான நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம். மாணவர்களும் பெற்றோரும் உலகலாவிய ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட உயர்தரத்திலான கல்வி நிலையங்கள், பல்கலைக் கழகங்கள் பற்றி அறிந்து கொள்வதற்கும் அதன் பிரதிநிதிகளை சந்திப்பதற்கும் வாய்ப்பாக அமைகின்றது என்றார்.

இந்த அத்தியாப்பண (ADYAPANA) கண்காட்சியில் வணிகம், தகவல் தொழில்நுட்பம், நிதியிடல், சந்தைப் படுத்தல், மருத்துவம், கட்டிடக்கலை, ஹோட்டல் முகாமைத்துவம், விமானத் துறை போன்ற பல்வேறுபட்ட பிரிவுகளில் உயர்கல்விக்கான உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு கல்வி நிறுவனங்களின் காட்சிக் கூடங்கள் அமைக்கப் பட்டிருந்தன. உயர்ந்த மட்டத்தினரே அதிகளவில் பயன்படுத்திய இக் கண் காட்சியில் அடுத்த வருடம் நாட்டின் பல்வேறுபட்ட பகுதிகளிலும் இருந்து மாணவர்கள் வந்து கலந்து கொண்டு பயன்பெற வேண்டும்.

இன்று அதிகமான தமிழ் மாண்வர்கள் சரியான முறையில் மேற்படிப்பைத் தெரிவுசெய்ய முடியாத நிலையில் இருக்கின்றார்கள். எனவே இனிவரும் காலங்களில் இவ்வாறான கண்காட்சிகள் தமிழ் மாணவர்களுக்குச் சிறந்த வழிகாட்டிகளாக இருக்கும் என்பதில் ஐயமில்லை.

**வரோதயன்**



## கடவுளும் மனிதனும்

புதிதாக காதல் திருமணம் செய்துகொண்ட ஒருவன் தனது மனைவியைப் பற்றி பெருமையாக நினைத்துக் கொண்டிருந்தான். அப்போது அவன் முன்னால் கடவுள் தோன்றினார். அவன் கடவுளிடம் என் மனைவியை ஏன் இவ்வளவு மென்மையான இதயம் கொண்டவளாக படைத்தீர்கள்? என்று கேட்டான். உடனே கடவுள் அப்போதுதான் அவள் மீது உனக்கு காதல் ஏற்படும் அதனால்தான் அவ்வாறு படைத்தேன் என்றார். என் மனைவியை ஏன் இவ்வளவு அழகானவளாக படைத்தீர்கள்? என்று கேட்டான் அவன். உடனே கடவுள் அப்போதுதான் அவளை நீ விரும்புவாய் என்றார். தொடர்ந்து பேசிய இளைஞன் என் மனைவியை ஏன் முட்டாளாக படைத்தீர்கள் என்று கேட்டான். உடனே கடவுள் அப்போதுதான் அவள் உன்னை காதலிப்பாள் என்றார்.



# கடி SMS



கோபமா? பேசமாட்டியா?
sms கூட அனுப்ப மாட்டியா?
நான் தெரியாமத்தானே உன்
வாலை மிதித்தேன்
அதுக்கு பேய் மரத்துல
ஏறி உட்கார்ந்திட்ட???

அக்காட Friend
அக்கா ஆகலாம் தங்கச்சிட Friend
தங்கச்சி ஆகலாம்
பொண்டாட்டிட Friend பொண்டாட்டி ஆக
முடியுமா?

Mutton shopல
தொங்குற ஆட்டைப் பார்த்து
உன் கண்ணுல தண்ணீர் வந்தா சைவம்
உன் நாக்குல தண்ணீர் வந்தா அசைவம்

காதலியின் கண்ணசைவுக்கு
1000 அர்த்தங்கள்
ஆனால் நண்பனின் கண்ணசைவுக்கு
ஒரே அர்த்தம்
அது என்ன தெரியுமா?
"மச்சான் சூப்பர் Figure வருது. திரும்பி பாரடா"

ஒரு சிங்கம், ஒரு புலி Engineering
படிக்குது
ஒரு கழுதை MBBS படிக்குது
ஒரு குரங்கு இந்த SMS ஐ படிக்குது



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதற்குத் தக

# இலக்கியமும் இரசாயன மாற்றமும்

அஷ்ரப் சிஹாப்தீன்



"என். எஸ். கிருமியின் பிறப்பிடம் வழமையாக விஞ்ஞானிகள் சொல்வது போல அமேசன் காடோ ஆபிரிக்கக் காடோ அல்ல. தென் கிழக்காசியக் காடுகளில் உள்ள ஒருவகைப் புழுக்களின் மூலம் நரிகளில் ஏற்பட்ட தொற்று காரணமாக என். எஸ். கிருமி உருவாயிற்று என்று கண்டறியப்பட்டுள்ளது. என். எஸ். என்பது ஆங்கிலச் சொல்லான Notorious என்ற சொல்லின் சுருக்க வடிவமாகும். இக்கிருமி மிகவும் ஆபத்தானது. பொதுவாக நோய்க் கிருமியொன்றின் தொற்றுக்கு ஆளான நபர் மாத்திரமே பாதிக்கப்படுவதுண்டு. என். எஸ். நோய்க் கிருமி தொற்றிய ஒருவருக்குப் பெரிய பாதிப்புகள் ஏற்படுவதில்லை. ஆனால் தொற்றுக் குட்பட்ட நபரால் ஏனையோரே அதிகமாகப் பல்வேறு தாக்கத்துக்குள்ளாவார்கள்."


மேலாளரின் அழைப்பு வந்ததும் வாசித்துக் கொண்டிருந்த புத்தகத்தை அப்படியே வைத்து விட்டு அவன் அவசரமாக கழிவறைக்குள் நுழைந்து கண்ணாடியில் முகம் பார்த்தான். கண்ணாடிச் சட்டகத்தில் பொதி செய்யப்பட்ட பல் குத்தும் குச்சி ஒன்றிருந்தது. சற்று முன்னர்தான் காலை ஆகாரத்தை முடித்திருந்த அவன், தனது பற்களைக் கிண்டு



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

வதற்காக அக்குச்சியைக் கையிலெடுத்தான். அக்குச்சி முனையில்தான் கண்ணுக்குப் புலப்படாத அந்த என். எஸ். கிருமி உட்கார்ந்திருந்தது.

மேலாளரிடம் சென்று திரும்புவதற்கிடையில் பல்லிடுக்கின் சிதைவினூடாக என். எஸ். கிருமி அவனது இரத்தத்தில் கலந்தது. சற்று நேரத்தில் அவனுக்கு இலேசான தலைவலி உண்டாயிற்று. காரியாலயச் சிற்றுண்டிச் சாலையில் இரண்டு மாத்திரைகளை வாங்கி உட்கொண்டான். வேலை முடிந்து வீடு செல்லத் தயாரான போது மீண்டும் தலைவலி துவங்கிற்று. ஏதாவது ஒரு குன்யாவாக இருக்குமோ என்று சந்தேகம் வர வழியில் உள்ள தனியார் மருத்துவர் ஒருவரிடம் செல்லத் தீர்மானித்தான். அறிமுகமற்ற அந்த டிஸ்பென்சரிக்குள் நுழைவதற்கு முன்னர் அதன் விளம்பரப் பலகையைப் பார்த்தான். வைத்தியரின் பெயரின் பின் எம்.பி.பி.எஸ் என்று போடப்பட்டு, அடைப்புக் குறிக்குள்ளிருந்த எச் எழுத்தை மறைத்து, ஊன்றிக் கவனித்தாலொழிய விளங்காத வகையில் பாதிச் செங்கல் வைக்கப்பட்டிருந்தது. அதைப் பார்த்ததும் அவனுக்குக் கோபம் வந்தது. வைத்தியரைக் கிண்டலடிக்க வேண்டும் போல் இருந்தது





அவனுக்கு. மருந்து பெறும் யோசனையைக் கைவிட்டு வீட்டுக்கு வந்து சேர்ந்தான்.

அன்றிரவு அவன் விசித்திரமான கனவு ஒன்றைக் கண்டான். பிரபல எழுத்தாளர்களான லா.சா.ரா.நா. பார்த்தசாரதி, சுந்தரராமசாமி, கி. வா. ஜகந்நாதன் மற்றும் க. நா. சுப்ரமணியம் போன்றவர்கள் ஒருவர் பின் ஒருவராக வந்து கனவில் அவனுக்குப் பொன்னாடை போர்த்தினார்கள். ஜெயகாந்தனைக் கண்டு சட்டெனத் திரும்புகையில் பொன்னாடையில் இருந்த சரிகை நூல் காதில் சிக்கி இரத்தம் வருமளவு அறுத்துவிட, சுள்ளென வலித்தது. கண் விழித்த போது அவனது வீட்டுச் சேவல் அவனது காதில் கால் வைத்து உன்னிப் பறந்ததில் தோல் கிழிந்து இரத்தம் கசிவதை அவதானித்தான். படுக்கையருகே கழிந்து விட்டு வேறு போயிருந்தது சேவல்.

சில தினங்களில் தன்னில் பல மாற்றங்களை அவன் அவதானித்தான். பத்திரிகையில் யாருடைய பெயரைக் கண்டாலும் அவர்கள் மீது அவனுக்குக் கோபம் வந்தது. இரண்டு பெண்டாட்டிக்காரர்களைக் கண்டால் இரக்கம்

வார்த்தை தடுமாறக் காரணம் கண்கள்
வாழ்க்கை தடுமாறக் காரணம்
'பெண்கள்'
'Be careful'
Running Race இல் கால் என்னதான்
வேகமாக ஓடினாலும்
பரிசு கைக்குத்தான் கிடைக்கும்.

வந்தது. யாராவது ஒருவர் வேறு ஒருவரைப் புகழ்ந்தால், புகழ்ந்தவரின் கழுத்தைக் கடித்து விட வேண்டும் போல் இருந்தது அவனுக்கு. தன்னைவிடச் சிறந்த மனிதன், தன்னை விடப் புத்திசாலி மனிதன், தன்னை விடப் புகழ் வாய்ந்த மனிதன் உலகத்தில் யாரும் கிடையாது என்று அவனது உள் மனம் அவனிடம் சொல்லிக் கொண்டேயிருப்பது அவனுக்கு மட்டும் கேட்டது. யாராவது ஒரு கேள்வியை அவனை நோக்கிக் கேட்டால் கிண்டலாகப் பதில் சொன்னான். அவனுடனான சங்காத்தமே வேண்டாம் என்று பலர் விலகிப் போனார்கள்.

மாடு, ஆடு, கோழி போன்றவற்றுடன் பேச வேண்டும் என்று திடீரென அவனுக்கு ஆசை பிறந்தது. வீட்டில் உள்ள கோழிகளிடம் பேசினால் மனைவியும், பிள்ளைகளும், அயலாரும் தப்பாக நினைத்து விடுவார்கள் என்பதால் காரியாலயத்துக்கு லீவு அறிவித்து விட்டுத் தோட்டத்துக்குப் போனான். வழமையாக தோட்டத்துக்குள் பயிர்களைத் தின்ன வரும் ஆடுகளைக் கல்லெறிந்து துரத்தி விடும் அவன் அன்று அவற்றுடன் பேசும் ஆவலுடன் காத்திருந்தான். ஆனால் அன்றைய தினம் பார்த்து எந்த மிருகங்களும் வராத காரணத்தால் மிகுந்த ஏமாற்றமடைந்தான். வேறு வழியில்லாமல் பக்கத்துத் தெருவிலுள்ள நண்பரின் நாயைப் பார்க்கச் சென்றான். அது ஆடு அளவு உயரத்துக்கு வளர்ந்த நாய். அதனை நெருங்கி ஹலோ என்று சொன்னான். அந்த நாய் இவனைப் பார்த்த பார்வையில் பயந்து அவசரமாகத் திரும்புகையில் பாய்ந்து அவனது வலது காலின் ஆடு சதையில் அரைக் கிலோவைக் கடித்து எடுத்தது. இரத்தம் வெள்ளமெனப் பீறியடிக்க இடறிக் குப்புற வீழ்ந்தான். (கதை இன்னும் முடியவில்லை.)

அமெரிக்காவின் இல்லினொயிஸ் மாநிலத்தில் விஞ்ஞான புனை கதைகளுக்குப் பரிசு கொடுக்கும் நிலையத்துக்கு எனது சொந்தச் சரக்கான இந்தக் கதையை அனுப்ப உத்தேசித்துள்ளேன். உங்களிடமும் இவ்வாறு ஒரு கதை இருப்பின் நீங்களும் அனுப்ப முடியும். ஆனால் அங்கு பணிபுரியும் யாருக்கும் கடிதம் எழுதிக் காக்காய் பிடித்துப் பரிசு வாங்க முடியாது என்பது கவனத்தில் கொள்ளப்பட வேண்டும். முகவரி தேவைப்படுவோர் என்னிடம் முகவரியை வாங்கி விட்டு எனது கதைப் போய்ச் சேருவதற்கு முன்னர் என்னைப் பற்றி மொட்டைக் கடதாசி எழுத மாட்டேன் என்று சத்தியம் செய்து தர வேண்டும்.

ஏன் பாட்டி என் மேல இவ்வளவு பாசமா இருக்க?
நீதாண்டா பேராண்டி நாளைக்கு எனக்கு கொள்ளி போடோணும்!
போ பாட்டி! எனக்கு நாளைக்கு ஸ்கூல் இருக்கு! இண்டைக்கே கொள்ளி வைச்சிடவா?




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தோட்டியின் பதிவு


# ஏமாறுபவர்கள் இருக்கும் மட்டும்..!

வாழ்வில் எத்தனையோ விடயங்கள் சம்மந்தமில்லாமல் நிர்ப்பந்தமாகவே அமைந்து விடுவது வழமைதான். அதனை ஏற்றுக்கொள்ளும் மனப்பாங்குக்கு நாங்களும் இயைபாகிவிட்டோம். சிந்தித்துப் பார்த்தால்தான் ஏமாந்ததும் ஏமாற்றப்பட்டதும் தெட்டத்தெளிவாக விளங்குகின்றது.

நீண்ட நாளைக்கு பின்னர் எனக்கு கல்லூரி லீவு கிடைத்தது. அதில் ஒரு நாளை செலவழிப்பதற்காக கொழும்பில் உள்ள பிரபல்யமான விகாரமாதேவிப்பூங்காவுக்குச் சென்றிருந்தேன். பூங்காவைச் சுற்றி நடந்ததால் ஏற்பட்ட களைப்பில் பானம் ஏதும் குடிக்கலாம் என்ற எண்ணத்தில் பூங்காவின் சிற்றுண்டிச்சாலையை நோக்கிச் சென்றேன். பல பேர் கதிரைகளில் அமர்ந்து கொண்டு உல்லாசமாய் காற்று வாங்கியபடி சாப்பிட்டுக் கொண்டிருந்தார்கள். நானும் ஒரு பற்றீசையும் பால்பைக்கற்றையும் வாங்கிவிட்டு 'கீயத' என்று கேட்டேன். 'எக்கசிய விஸ்ஸாய்' (120/=) என்றார் சிற்றுண்டிச்சாலை ஊழியர். விலையைக் கேட்டதும் உடனே சாப்பிட்டது செமிச்சுப்போச்சு. பிறகென்ன காசை கொடுத்திட்டு திரும்பிப் பார்க்காமல் வீடுவந்து சேர்ந்தேன். இது எனக்கு மட்டுமல்ல இப்படி எத்தனை பேர்தான் ஏமாந்திருப்பார்கள்.

கொழும்புக்கு புதிதாக யார் வந்தாலும் உடனே ஓடிப்போய்ப் பார்ப்பது விகாரமாதேவிப் பூங்காவைத்தான். அவ்வளவுக்கு பிரபல்யமானதுடன் பழமை வாய்ந்ததும் கூட. அப்படியான ஒரு இடத்திற்கு சிறுவர் முதல் பெரியோர்வரை பல இனத்தவர்களும் நாள் தோறும் வந்துபோகிறார்கள். இவ்வாறான இடத்தில் நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலையில் அனைத்து உணவுப் பொருட்களின் விலைகளும் சாதாரண வெளி விலையை விட இரண்டு மூன்று மடங்குக்கு அதிகமாக விற்கப்படுகின்றது. பூங்காவுக்கு வந்தவர்களும் என்ன செய்வதென்று சொன்னவிலையைக் கொடுக்கிறார்கள். அதைவிட காதலர்களின் பாடோ திண்டாட்டம் தான். பேரம்பேசப்போய் எங்கே காதலி தன்னை மட்டமாக நினைத்துவிடுவாளோ என்று சொன்ன விலைக்கு பணத்தைக் கொடுத்துவிட்டு தனிமையில் தனது பேர்சை வெறித்துப் பார்த்த காதலர்கள் ஏராளம்.

இது தனியுரிமைச் சந்தை என்ற அடிப்படையிலேயே நடாத்தப்படுகிறது போல் தெரிகிறது. இது தொடர்பாக யாருமே கேள்விகேட்க முற்படவில்லை.தியேட்டர் மற்றும் மிருகக் காட்சிச்சாலையில் நடாத்தப்படும் சிற்றுண்டிச்சாலைகளிலும் இவ்வாறே குறித்த விலையைவிட அதிகமாக விற்பனை செய்கிறார்கள். இவ்வாறான ஒரு கலாச்சாரம் ஏன் நிலவுகின்றது என்று யாருக்குமே தெரியவில்லை. அதிகமாக மக்கள் கூடும் இடங்களில் இவ்வாறான ஒரு சர்வாதிகார முறையில் சிற்றுண்டிச்சாலைகள் நடாத்தப்படுவது விமர்சனத்துக்குள்ளாகிறது. வந்தவர்களும் எவ்வளவோ செலவழிக்கிறோம். இவ்விடத்தில் அத்தேவையை பூர்த்திசெய்வதற்காக காசை காசாக பொருட்படுத்துவதில்லை. அவர்கள் அந்த இடத்தில் ஏன் விலைகள் இப்படியாக அதிகமாக காணப்படுகின்றது என சிந்திப்பதில்லை. சிற்றுண்டிச்சாலையாளர்களும் நுகர்வோர் கேட்பதைக் கொடுப்பதால் வாங்குபவர்கள்தான் மேலும் இவ்வாறான விலை அதிகரிப்பான சிற்றுண்டிச்சாலைகளை மறை முகமாகவே ஊக்குவிக்கிறார்கள். இந்த நிலையில் நுகர்வோரான நாங்கள்தான் சிந்திக்க வேண்டும். இந்நிலையில் இது பற்றி சிந்தித்து மாற்று நடவடிக்கைகளையும் தேட வேண்டி உள்ளது. அதற்காகத்தானே நுகர்வோர் விவகார சபையே நிறுவப்பட்டுள்ளது. பட்டப் பகலிலேயே சும்மா பார்த்துக்கொண்டிருக்க முடியாதுதானே. இவ்வாறான செயல்கள் விருட்சமாகுமுன் அதற்கான விதைகளை இன்றே தோண்டி எடுங்கள்



ஸப்தமி

**'இருக்கிறம்' நுகர்வோர் உரிமைகளைப் பாதுகாப்பதற்கான விழிப்புணர்வைத் தூண்டுவதற்கு பாதிக்கப்பட்டோரின் அனுபவங்களை வேண்டுகிறது. நீங்கள் உங்கள் அனுபவங்களை எங்களுக்கு எழுதி அனுப்புங்கள் அவற்றை "தோட்டியின் பதிவு" என்னும் பகுதியில் பிரசுரிப்போம்..**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# My Computerஇல் இருந்து Floppy Driveஇன் Iconஐ நீக்குவது எப்படி?


தற்போது Floppy Driveஇன் பாவனை இல்லை என்று சொல்லுமளவுக்கு Floppy Driveஇன் பாவனை இல்லாமலேயே போய் விட்டது. என்றாலும் விண்டோஸ் இன் My Computer இல் Floppy Drive இன் Icon ஒரு




தேவையில்லாத Iconஆக இருக்கின்றது.

இந்த Floppy Driveஇன் Icon ஐ எவ்வாறு My Computerஇல் இருந்து தற்காலிகமாக நீக்குவது என்று பார்ப்போம்

முதலில் Runக்கு சென்று devmgmt.msc என Type செய்து Ok பண்ணவும். அல்லது My Computer இன் Iconஇல் Right click செய்து Device Manager என்பதை தெரிவு செய்யவும்.




அப்போது Device Manager ஆனது Open ஆகும்.

அதில் Floppy Disk Drive என்பதன் முன்னால் இருக்கும் + குறியீட்டைக் Click செய்யவும். sk



பின் அதில் வரும் Floppy Disk Drive என்பதன் மேல் Right click செய்து Disable என்பதை Click செய்யவும்.

அப்போது வரும் "disabling this device will cause it to stop functioning. Do you really want to disable it?" என்ற Massage box இல் yes என்பதை தெரிவு செய்யவும்.

இப்பொழுது உங்கள் My Computer இல் இருந்து Floppy Drive இன் Icon மறைந்திருக்கும்.

ஏதாவது சந்தர்ப்பத்தில் உங்களுக்கு Floppy Drive தேவைப்பட்டால் மேற்கூறிய முறையில் Device Managerக்கு சென்று Floppy Disk Driveஐ Enable பண்ணிக் கொள்ள முடியும்.

## இணையத்தின் வயது 40 சில ஆச்சரிய தகவல்கள்

நமது அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாகிவிட்ட இணையத்தின் வயது 40. நாற்பது ஆண்டுகளுக்கு முன் இரண்டு கணனிக்குத் தகவல் பரிமாற்றம் செய்யத் தொடங்கி இன்று அபார வளர்ச்சி அடைந்து இருக்கின்றது.

**1969 :** செப்டம்பர் 2 ஆம் திகதி, கலிபோர்னியா பல்கலைகழகத்தில் இரண்டு கணனிகள் சில தகவல்களை பரிமாறிக்கொண்டன. இது Arpanet இராணுவத்தின் சோதனை இணையமாகும்.

**1972 :** Ray Tomilinson மின்னஞ்சலை மற்ற கணனிகளுக்கு அனுப்பும் முறையைக் கண்டுபிடித்தார்.

**1973 :** Arpanet மூலம் இங்கிலாந்து மற்றும் நோர்வே நாடுகளில் வெற்றிகரமாக செயல்படுத்தப்பட்டது.

**1974 :** Viant Cerf and Bob kahn தகவல் தொடர்பில் ஒரு புரட்சியான TCP உருவாக்கினர். இதன் மூலந்தான் உண்மையான இணையம் உருவானது.

**1983 :** வலைத்தளங்களுக்கு Domain Name System கொண்டுவரப்பட்டது. ".com" அடுத்த வருடங்களில் ".gov" and ".edu" அறிமுகப்படுத்தப்பட்டது.


**1988 :** இணையத்தை தாக்கியது Internet Worm Morris, ஆயிரக்கணக்கான கணனிகள் சேதமடைந்தன.

**1990 :** Tim Berners - Lee World Wide Wed (WWW) உருவாக்கினர்.

**1994 :** Andreessen மற்றும் குழுவினர் உலகின் முதல் கமர்ஷியல் இணைய உலாவியான Netscape ஐ உருவாக்கினர்.

**1998 :** Larry page, Sergey Brin Stanford பல்கலைக்கழகத்தில் கூகிளை உருவாக்கினர்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



ரிப்போர்ட்டர்: விஜய் சேர் ஏன் வேட்டைக் காரன் வெளியாகும் திகதி சொல்றீங்களில்ல

விஜய்: சாகிற நாள் தெரிஞ்சா வாழுற நாள் நரகமாயிடும். அது தான் சொல்லலே.

# வேட்டைக்காரனைப் பற்றிய குறுஞ்செய்திகள்

விஜய் படம் ரிலீஸ் என்றாலே நம்மட பெடியளுக்கு கொண்டாட்டம்தான். அப்படி என்னதான் சந்தோசமோ வேட்டைக்காரனைப் பற்றி கலாய்த்து குறுஞ்செய்தி அனுப்பும் பெடியளுக்கு. இந்தப் பெடியள் அனுப்புற குறுஞ்செய்தி தமிழில் உள்ள எல்லா நடிகர்களுக்கும் பொருந்தும் என்பதும் அவர்களுக்குத் தெரியும். இருந்தாலும் என்ன செய்யிறது? காய்ச்ச மரம்தானே கல்லடி படும்.





டைரக்டர்: நம்மளோட அடுத்த படம் 100 நாட்கள் ஓடோணும்

விஜய்: இல்லை 200 நாட்கள் ஓடோணும்

டைரக்டர்: ஜோக் அடிக்காதீங்க சேர்

விஜய்: கொய்யாலே முதல்ல ஜோக் அடிச்சது யாரு நீயா? நானா?

ரிப்போர்ட்டர் : சேர் உங்களோட வேட்டைக் காரன் படத்தின் ரிலீஸ் தேதி தள்ளிப் போய்க்கொண்டே இருக்குதே ஏன்?

விஜய் : சென்சார் போர்ட் மெம்பர்ஸ் படத்தை பார்க்க பயப்படுறாங்க.

காதல் என்பது விஜய் படம் மாதிரி. பார்க்காதவன் பாக்கத் துடிப்பான், பார்த்தவன் சாகத் துடிப்பான்.

குயில புடிச்சி கூண்டில் அடைச்சு கூவ சொல்லுகிற உலகம்
விஜய புடிச்சி காசு கொடுத்து நடிக்க சொல்ற உலகம்
அது எப்படி நடிக்கும் ஐயா? படம் எப்படி ஓடும் ஐயா?

எமன் : நான் உன் உயிரை எடுக்கப் போகிறன், உன் கடைசி ஆசை என்ன?

விஜய்: நான் நடிச்ச வேட்டைக்கரன் படத்தை நீங்கள் பார்க்கோணும்.

எமன் : கொய்யாலே நான் உன்ன கொல்லப் பாத்தா நீ என்ன கொல்லப் பாக்கிறியே.......

**சத்தியமா விஜய் ரசிகர்கள் இந்தப் பக்கத்தைப் படிக்காதையுங்கோ.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பில் ஹேட்சுக்கு ஒரு கடிதம்.

**வணக்கம் பில் கேட்ஸ் ஐயா!** எங்கட ஊரில என்னை மாதிரிப் படிச்ச பள்ளிக்கூட வாத்திமாருக்கு உங்களைத் தெரியும். கடிதம் எழுத முந்தி ஒரு விசயம். பொதுவா ரவுண் கடையளில 'பில்' தாறவை, எங்கட ஊரில படலையளுக்கு ஆங்கிலத்தில கேட் எண்டுதான் சொல்லுறவை, அதெப்பிடி ஐயா இரண்டும் சேர்த்த பெயரா உங்கட பெயர் இருக்கு எண்டு எனக்குத் தெரியேல்லை.

அது இருக்கட்டும், நான் உங்களுக்கு எழுத வந்த விசயத்தை அவசரமா சொல்லிப் போடுறன். நீங்களும் பல சோலிக்காரன். என்ர பிள்ளையள் வெளி நாட்டில இருக்கினம். நான் ஒரு ஊர் அறிஞ்ச தமிழ் வாத்தி, பலதையும் பத்தையும் தெரிஞ்சவன் எண்டு, கிட்டடியில கொம்பியூட்டர் ஒண்டு அனுப்பி வச்சவை. அதில உள்ள விண்டோஸ் உங்கட தயாரிப்பு எண்டு அறிஞ்சன். பில் கேட்ஸ் ஐயா! அதில பிழையள் கனக்க இருக்கு. உங்களுக்கு எழுதினா திருத்துவீங்கள் எண்ட காரணத்தால இதை எழுதுறன்.

முதலாவது விசயம். கொம்பியூட்டர் வந்ததும் நெற்றும் போட்டு முதல் வேலையா மெயில் கணக்கு ஒண்டு திறந்தன். அதில password கேட்ட இடத்தில எதைரைப் அடிச்சாலும் ★★★★★ எண்டுதான் வருது. விசயம் தெரிஞ்ச பொடியள கேட்டா அவங்கள் என்ர Key Board நல்லா வேலை செய்யுது எண்டுதான் சொல்லுகினம். ஆனா உங்கட கொம்பியூட்டரில password அடிச்சா அது ★★★★★ எண்டுதான் வருகுது. அதை ஒருக்கா கட்டாயம் பார்க்கவும். எனக்கே என்ர password தெரியேல்லை.

2. Shut Down எண்டுறதை அமத்தின பிறகு எதையும் பதிவு செய்ய முடியாம இருக்கிறது ஏன் எண்டும் விளங்கேல்லை. முடிஞ்சா அதிலும் ஒருக்கா கவனம் செலுத்தவும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

3. Start எண்டு ஒண்டு இருக்குது ஆனா நீங்கள் Stop எண்ட விசயத்தை எங்கயும் வைக்கேல்லை. வேலை அவசரத்தில கவனிக்காம விட்டிருப்பியள் அதையும் ஒருக்கா கவனிக்கவும்.

4. Run எண்ட ஒண்டு இருக்கிறதையும் பார்த்தன். நான் தமிழ் வாத்தியா இருந்தாலும் எனக்கும் விசயம் தெரியும். அதை அடிச்சா ஓடோணும் அல்லது ஓடியந்து அதை அடிக்கோணும் எண்டது விளங்குது. சின்ன பிள்ளையளுக்கு அது சரி. எங்களை மாதிரி ஆக்களுக்காக தயவு செய்து Sit என்ற பொத்தானையும் போடவும். அப்பதான் இருந்து கொண்டு எதையும் செய்யலாம்.

5. இன்னொரு விசயம் ஏன் நீங்கள் Re - Scooter என்ற ஒரு விசயத்தை சேர்க்கவில்லை. Re - Cycle போட்டிருக்கிறது தெரியுது என்ன செய்ய என்னிட்ட ஸ்கூட்டர் தானிருக்கு Re-Scooter போட ஏலாதா?

6. முக்கியமான விசயம். இது என்ர மனிசியே கோபப்பட்ட விசயம். உங்கட சிஸ்டத்தில இருக்கிற Find வேலை செய்யுது இல்லை. கிட்டடியில மனிசி சாவியைத் துலைச்சுப் போட்டா, நான் Find அடிச்சு பார்த்தன் எந்த பயனும் இல்லை.



கடைசியா ஒண்டு, என்ர பேரன் Microsoft Word பழகிட்டான். எப்ப Microsoft Sentence போட்டு அவனுக்கு பழக்குவீங்கள்.

என்னதான் அங்கயும் இங்கயும் இப்பிடிக் கொஞ்ச பிழையள் இருந்தாலும் நீங்கள் கெட்டிக்காரன். எப்பயும் படிச்சவங்கள் படிச்சவங்கள்தான், என்னை மாதிரி.

பதிலுக்காக காத்திருக்கும்,

கனகர்
முன்னாள் தமிழ் ஆசான்

*(இங்கிலத்தில் இருந்ததை உருவியது இதி)*






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









'ஊடக மயக்கம்' உண்மையிலேயே தமிழ் ஊடகங்களில் என்ன நடக்கின்றது என்பதை எடுத்துக் காட்டும் ஒரு தொடர். ஒரு ஊடகவியலாளர் என்ற வகையில் இத்தொடரில் குறிப்பிடப்பட்டிருக்கும் விடயங்களில் நானும் அவ்விதமான அனுபவங்களைச் சந்தித்திருக்கின்றேன். சந்தித்துக்கொண்டும் இருக்கின்றேன். தமிழ் ஊடகங்களில் நடக்கும் இவ்விதமான கசப்புணர்வுக் கலாசாரத்திற்கு நானும் ஆதாரமாக இருக்கின்றேன். தொடரட்டும் ஊடக மயக்கம்.
சாஹிர் முகமட்
தென்றல் வானொலி




# வாசகர் கருத்து!


தரமான ஆக்கங்களை உள்ளடக்கி இருக்கும் இருக்கிறம் சஞ்சிகையினை எமது பகுதிக்கு அன்போடு இருகரம் நீட்டி வரவேற்கின்றேன். உனது சேவை மென்மேலும் வளர வாழ்த்துகின்றேன். ஆனாலும் இணையத்தளங்களில் தொடர்ந்தும் இருக்கிறம் சர்ச்சைகளுக்குள் சிக்கி வருகின்றதே ஏன்?
என்.கலாமதி
குட்செட் றோட், வவுனியா

இருக்கிறம் சஞ்சிகையை எமது பகுதியில் பெற்றுக்கொள்வது பகீரதப் பிரயத்தனமாக இருக்கின்றது. என்றாலும் ஒரு நண்பர் மூலமாக பெற்றுக்கொண்டேன். உள்ளடக்கம் அனைத்தும் அற்புதம். அதிலும் குறிப்பாக அமிர்தகழியானின் 'ஓய்வெடுப்போர் சங்கமும் லீவு மன்னர் லிங்கப்பாவும்' கட்டுரை சிரிப்போடு சிந்திக்க வைத்தது. அத்தோடு ஜனூஸின் 'ஊடக மயக்கம்' கட்டுரை சிறப்பாக அமைந்திருந்தது. ஊடகத் துறையில் இப்படியும் இருக்குமா?
திருமதி. பாலசிறிதரன்
நிலாவெளி, திருகோணமலை

01.12.2009 இருக்கிறம் சஞ்சிகையை வாசித்தேன். அனைத்து விடயங்களும் அற்புதமாக இருந்தது. குறிப்பாக 'ஊடக மயக்கம்' கட்டுரையானது ஒரு கணம் என்னை யோசிக்க வைத்தது. எனக்குத் தெரிந்த தோழர் ஒருவரும் இது குறித்த அனுபவங்களைப் பகிர்ந்துகொண்டபோது ஜனூஸ் எழுதியதில் 90 வீதமான உண்மைகளை புரிந்துக்கொண்டேன். இப்படியான விடயங்களை வெளிக்கொணர்ந்த இருக்கிறமுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களையும் தெரிவிக்கின்றேன்.
விக்னேஸ்
வெள்ளவத்தை

இருக்கிறம் சஞ்சிகை பல அற்புதமான தகவல்களைத் தாங்கி, அழகிய முறையில் வெளிவருவது மகிழ்ச்சியான விடயம். தகவல்கள் சிறப்பாக இருக்கின்றன. 'சட்டம் பேசுகிறது' பகுதி சட்டம் பற்றிய அறிவை வளர்த்துக்கொள்ள உதவியாக இருக்கின்றது. பதிப்பகத்தார் பகுதி அருமை. இவர்களின் துணிவும் தைரியமும் பாராட்டவேண்டியது. கடந்த இரண்டு இதழ்களில் 'ஊடக மயக்கம்' என்ற பகுதி பலர் சொல்ல மறந்த விடயங்களாகவே உள்ளது. இவ்வாறான தொடர்களை இருக்கிறமில் தொடர்ந்து எதிர்பார்க்கின்றோம். இருக்கிறம் சஞ்சிகையின் பணி தொடர என் வாழ்த்துக்கள்.
இராவின்
வவுனியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சதம் அடித்தார் நிடினி

சீ. கே. மயூரன்

சர்வதேச அளவில் கிரிக்கெட் விளையாடும் ஒவ்வொரு வீரனதும் இலட்சியம் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவேண்டுமென்பதே. அதிலும் டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் பங்கு பற்றும் வீரனது எதிர்பார்ப்பு. தான் 100 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவேண்டுமென்பது. ஆனால் பல வீரர்களுக்கு 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாட வாய்ப்புகள் குறைவு. காரணம் என்னவென்றால், உடல் வலிமை, அடிக்கடி ஏற்படும் உபாதைகள், வயது, புதிய வீரர்களின் வருகை என்பவற்றால் தொடர்ச்சியாக விளையாடமுடியாமல் போகிறது.

ஆனால் இவற்றையெல்லாம் தமது திறமையாலும் அனுபவத்தாலும் முறியடித்து 100 போட்டிகளைப் பூர்த்தி செய்த பல வீரர்களும் இருக்கிறார்கள். அந்த வகையில், பல்வேறு தடைகளைத் தாண்டி தனது அசுர வேகப்பந்து வீச்சால் பல விக்கெட்டுக்களை சாய்த்து தனது அணிக்குப் பெருமை தேடிக்கொடுத்து தனது 100 ஆவது போட்டியில் காலடி எடுத்து வைத்துள்ளார் மக்காயா நிடினி(Makhaya Ntini) தென்னாபிரிக்க அணியில் கடந்த 11 வருடங்களாக இடம்பிடித்திருக்கும் நிடினி பல துடுப்பாட்ட வீரர்களை நிலைகுலைய வைத்தவர் என்றே சொல்லலாம். ஒரு வேகப்பந்துவீச்சாளர் 100 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் விளையாடுவதென்பது மிகப் பெரிய சாதனையே. சர்வதேச அளவில் 100 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகள் விளையாடிய வேகப் பந்துவீச்சாளர் வரிசையில் இவர் 8 ஆம் இடத்தில் இருக்கிறார். முதல் 7 இடங்களில் இருக்கும் வீரர்கள் ஏற்கனவே சர்வதேச போட்டிகளிலிருந்து ஓய்வு பெற்ற வீரர்கள். சர்வதேச அளவில் 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய 49 ஆவது வீரராகவும் 5 ஆவது தென்னாபிரிக்க வீரராகவும் இடம் பிடிக்கும் இவர், 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய, 2 ஆவது தென்னாபிரிக்க வேகப்பந்து வீச்சாளர் என்ற பெருமையினையும் தனதாக்கியுள்ளார் 1998 ஆம் ஆண்டு இலங்கை அணிக்கெதிராக கேப்டவுனில் நடைபெற்ற டெஸ்ட் போட்டியின் மூலம், டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமான இவர் அந்தப் போட்டியில் முதல், இரண்டாம் இனிங்சில் தலா ஒரேயொரு விக்கெட்டை மட்டுமே வீழ்த்தினார். 2000 ஆம் ஆண்டு நியூசிலாந்து அணிக்கெதிராக தனது 6 ஆவது போட்டியில், முதல் 5 விக்கெட் (66/6) பெறுதியைப் பெற்றார். டெஸ்ட் கிரிக்கெட்டில் அறிமுகமான 1998 ஆம் ஆண்டில் 4 போட்டிகளில்






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

10 விக்கெட்டுகளை மட்டுமே கைப்பற்ற முடிந்தது. 2002 ஆம் ஆண்டுக்குப் பின்னர் அதிக விக்கெட்டுகளைக் கைப்பற்றத் தொடங்கினார். 2002 ஆம் ஆண்டு 8 போட்டிகளில் 40 விக்கெட்டுகளையும் 2003 ஆம் ஆண்டு 12 போட்டிகளில் 59 விக்கெட்டுகளையும் 2004 ஆம் ஆண்டு 11 போட்டிகளில் 39 விக்கெட்டுகளையும் 2005 ஆம் ஆண்டு 10 போட்டிகளில் 47 விக்கெட்டுகளையும் 2006 ஆம் ஆண்டு 10 போட்டிகளில் 58 விக்கெட்டுகளையும் 2007 ஆம் ஆண்டு 9 போட்டிகளில் 35 விக்கெட்டுகளையும் 2008 ஆம் ஆண்டு 15 போட்டிகளில் 54 விக்கெட்டுகளையும் கைப்பற்றினார்.

அவுஸ்திரேலிய அணிக்கெதிராக 15 போட்டிகளில் 58 விக்கெட்டுகளையும் பங்களாதேஷ் அணிக்கெதிராக 8 போட்டிகளில் 35 விக்கெட்டுகளையும் இங்கிலாந்து அணிக்கெதிராக 17 போட்டிகளில் 70 விக்கெட்டுகளையும் இந்திய அணிக்கெதிராக 10 போட்டிகளில் 36 விக்கெட்டுகளையும் நியூசிலாந்து அணிக்கெதிராக 11 போட்டிகளில் 46 விக்கெட்டுகளையும் பாகிஸ்தான் அணிக்கெதிராக 9 போட்டிகளில் 41 விக்கெட்டுகளையும் இலங்கை அணிக்கெதிராக 12 போட்டிகளில் 35 விக்கெட்டுகளையும் மேற்கிந்தியத்தீவுகள் அணிக்கெதிராக 15 போட்டிகளில் 63 விக்கெட்டுகளையும் சிம்பாப்வே அணிக்கெதிராக 3 போட்டிகளில் 6 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ளார்.

தென்னாபிரிக்க மண்ணில் 52 போட்டிகளில் 249 விக்கெட்டுகளையும் வெளிநாட்டு மண்ணில் 48 போட்டிகளில் 141 விக்கெட்டுகளையும் கைப்பற்றியுள்ள நிடினி, தென்னாபிரிக்க அணி சார்பாக டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக விக்கெட் வீழ்த்தியோர் வரிசையில் 2 ஆம் இடத்திலுள்ளார். முன்னாள் வீரரான ஷோன் பொலொக்கின் சாதனையை முறியடிக்க இன்னும் 32 விக்கெட்டுகள் தேவை. 100 டெஸ்ட் கிரிக்கெட் போட்டிகளில் 390 விக்கெட்டுகளை வீழ்த்தியுள்ள நிடினி, ஒரு இனிங்சில் 5 அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெட்டுக்களை 18 தடவையும் ஒரு போட்டியில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெட்டுகளை 4 தடவைகளும் கைப்பற்றியுள்ளார். சிறந்த பந்துவீச்சுப் பெறுதி 37 ஓட்டங்களுக்கு 7 விக்கெட்டுகள். இது மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கெதிராக 2005 ஆம் ஆண்டு போர்ட் ஒப் ஸ்பெயினில்









நடைபெற்ற டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் பெறப்பட்ட பெறுதியாகும். இந்தப் போட்டியில் மொத்தமாக 132 ஓட்டங்களைக் கொடுத்து 13 விக்கெட்டுகளைக் கைப்பற்றிய நிடினி தென்னாபிரிக்க பந்துவீச்சாளரொருவர் ஒரு போட்டியில் பெற்ற சிறந்த பந்துவீச்சுப் பெறுதி என்ற சாதனையை தன் வசப்படுத்தினார். தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்ற அந்தப் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் தெரிவானார் நிடினி.

தென்னாபிரிக்க அணி சார்பாக ஒரு போட்டியில் 10 அல்லது அதற்கு மேற்பட்ட விக்கெட்டுகளை (4 தடவைகள்) அதிக தடவைகள் கைப்பற்றிய வீரரும் இவரே. 1998 முதல் இன்று வரை தென்னாபிரிக்க அணி சார்பாக நிடினி விளையாடியுள்ள 100 போட்டிகளின் அடிப்படையில், தென்னாபிரிக்க அணி வெற்றி பெற்றுள்ள 50 சந்தர்ப்பங்களில் நிடினி வீழ்த்திய விக்கெட்டுகள் 233. தென்னாபிரிக்க அணி தோல்வியுற்ற 27 சந்தர்ப்பங்களில் நிடினி வீழ்த்திய விக்கெட்டுகள் 99 மட்டுமே. தென்னாபிரிக்க அணி வெற்றி தோல்வியற்ற முடிவைப் பெற்ற 23 சந்தர்ப்பங்களில் நிடினி வீழ்த்திய விக்கெட்டுகள் 58.

பந்து வீச்சில் சிறப்பாக செயற்பட்டுள்ள இவர் இலங்கை, சிம்பாப்வே அணிகளுக்கெதிராக ஒரு தடவைகூட ஒரு இனிங்சில் 5 விக்கெட்டுகளை கைப்பற்ற முடியவில்லை.

மிகச் சிறந்த வேகப் பந்துவீச்சாளராகத் திகழுமிவர் மிக விரைவில் 400 ஆவது விக்கெட்டை, இங்கிலாந்துடன் இடம்பெற்றுவரும் டெஸ்ட் கிரிக்கெட் தொடரில் கைப்பற்றும் வாய்ப்பு அதிகம். நீங்கள் இதை வாசிக்கும்போது சிலசமயம் 400 ஆவது விக்கெட்டைக் கைப்பற்றியிருப்பார் நிடினி.

பந்துவீச்சில் சாதித்த இவர் துடுப்பாட்டத்திலும் ஒரு சாதனைக்கு சொந்தக்காரன். அதிக தடவைகள் (21) ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்த தென்னாபிரிக்க வீரரென்ற சாதனையே அது. (இங்கிலாந்து அணிக்கெதிராக நடைபெற்று முடிந்த முதலாவது டெஸ்ட் கிரிக்கெட் போட்டி வரையான தரவுகள்) சர்வதேச ஒரு நாள் போட்டிகளிலும் இவரது பந்துவீச்சு சிறப்பான பெறுபேறுகளை பெற்றுக் கொடுத்துள்ளது. 173 ஒருநாள் சர்வதேச போட்டிகளில் 266 விக்கெட்டுகளைக் கைப்பற்றியுள்ளார்.

வேகத்தால் சாதிக்கும் நிடினி, இன்னும் வேகமாகப் பந்துவீசி விக்கெட்டுகளை சாய்க்க வேண்டுமென்பது கிரிக்கெட் ரசிகர்களின் எதிர்பார்ப்பு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# ஊடக மயக்கம்



## இக்கரைக்கு அக்கரைப் பச்சை


S.ஜனூஸ்

'அயலூர் அழகனை விட உள்ளூர் முடவன் எவ்வளவோ மேல்' எமது ஊடக நிறுவனங்களுக்கும் ஊடகத்தாருக்கும் இந்தப் பழமொழி மிகப் பொருத்தமானது. ஏனென்றால் உள்ளூர் கலைஞர்களை ஒற்றைக் கண்ணாலும் வெளிநாட்டு கலைஞர்களை விரிந்த கண்களாலும் பார்க்கும் (விமான நிலையம் வரை சென்று பூங்கொத்து கொடுத்து வரவேற்கும்) அதி உத்தமர்கள் உருவாகி இருக்கும் உன்னதமான தளம்தான் இன்றைய ஊடகங்கள்.

சொந்தச் சரக்கில்லாமல் சரக்கு இருக்கும் திறமைசாலிகளை சந்திக்குக் கொண்டுவராமல் அயலகப் படைப்புக்கு அட்வான்ஸ் கொடுத்துவிட்டு சொந்த நிலையத்தின் LOGO வோடு அந்த நிலையத்தின் LOGO வை இணைத்துக்கொள்ளும் இவர்களையிட்டு அழுவதா? சிரிப்பதா? என்று புரியவில்லை. இதைவிட இன்னுமொரு அதிசயமாக அந்த நிலையத்தாரைப் போல் இந்த நிலையத்தார் கதைக்கப் போய், தமிழை சப்பித்துப்பி குத்திக் குதறி கடைசியில் பிள்ளையார் குரங்கு பிடிக்கப் போன கதையாய் மாறியதை என்ன சொல்ல? எப்படிச் சொல்ல?

இன்றைய இலங்கையின்- ஒலி, ஒளி ஊடகங்களை ஆக்கிரமித்திருக்கும் இந்திய மோகம் இன்று நேற்று வந்த ஒன்றல்ல. அதே வேளைத் தொடரும் அந்த மோகத்தை இதுவரை தணிக்கவோ குறைக்கவோ ஈழத்துக் கலைஞர்களால் முடியவில்லையா? இல்லை தணிப்பதற்கான வாய்ப்புகள் அவர்களுக்கு வழங்கப்படவில்லையா? இதை யோசிக்கின்றபோது எமது மீடியாக்கள் இந்த நூற்றாண்டில் திருந்தும் அல்லது திருத்தப்படலாமென்ற நம்பிக்கை குறைந்து கொண்டே போவது மிகவும் வேதனையாக இருக்கிறது. இந்தியப் படைப்புகளை கத்தை கத்தையாய் பணம் கொடுத்து ஒலி, ஒளிபரப்பாக்கும் பெரும்பாலான ஊடகத்தார், இலங்கைப் படைப்பாளி ஒரு படைப்பை சொந்தமாகச் செய்து 'தயவு செய்து எனது படைப்பை ஒலி, ஒளிபரப்புங்கள்' என்று கேட்கின்ற போதும் அதனைச் செவிமடுக்காது இருக்கிறார்களே அது ஏன் என்று புரியவில்லை. ஊடகத்தார் இதயங்களில் இந்தியப் படைப்புகள் மீதான மதிப்பீடு மிக உச்சத்தில் இருக்கிறது. அதே சமயம் எம்மவரின் படைப்பு ஏளனமாகத் தெரிகிறது. அதனால்தான் அவர்கள் கைவசம் எத்தனையோ இலங்கைப் பாடல்களும் படைப்புகளும் இருந்தாலும் ஒன்பது தரம் 'போட்ட' இந்திய பாடல்களையும், படங்களையும் மீண்டும் மீண்டும் ஒலி, ஒளிபரப்புகிறார்கள். முற்றத்து மல்லிகையை ரசிக்கத்தான் தெரியவில்லை. சற்று முகர்ந்தவாறு அவர்கள் பார்க்க வேண்டாமா? என்ற கோபம் எழுகிறது.

முற்றத்து மல்லிகையாய் இங்கே மணக்க முடியாமல் போனதால்தான் ஒரு பாலு மகேந்திராவை தமிழகத்தில் மிகச்சரியாக இனம் காண முடிந்தது. சுயமாக சிந்திக்கும் எமது படைப்பாளிகளை உலகுக்கு வெளிச்சம் போட்டுக் காட்டவேண்டியது நாம்தான். இங்கே 'யானைப் பசிக்கு சோளப் பொறி' கொடுப்பதைப் போல அவ்வப்போது இந்தியச் சாயலோடு இலங்கைக் கலைஞனை திருப்திப்படுத்த வர்த்தக ஊடகங்கள் மேற்கொள்ளும் பகீரதப் பிரயத்தனம் கொஞ்சமா? நஞ்சமா? வர்த்தக ரீதியான வெற்றிக்கு உகந்தவை இந்தியாவிலிருந்து இறக்குமதியாகும் தரமான நிகழ்ச்சிகளே அன்றி எம்மவரின் படைப்புகள் அல்ல என்பதை மூளைகளில் தேக்கி வைத்திருப்பது இந்த நூற்றாண்டின் வேடிக்கையான வேதனையேயன்றி வேறென்ன? வர்த்தக ரீதியாக வெற்றிபெறும் கலைப்படைப்புக்களை எம்மவராலும் தாராளமாகத் தரமுடியும். அதற்கான வாய்ப்புக்களையும் களங்களையும் தாராளமாக ஏற்படுத்திக் கொடுங்கள். ஒரு நாட்டின் கலை, கலாசார பாரம்பரியங்களை கட்டி





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யெழுப்புவதில் ஊடகங்களின் பங்கு மிக கணிசமானது. ஆனால் எம் ஊடகங்கள் இந்திய நாட்டின் கலை, கலாசார பாரம்பரியங்களைத்தான் கட்டியெழுப்புகின்றன.

எமது ஒலி, ஒளி ஊடகங்கள் காலம் காலமாக கேள்வி ஞானத்தோடும், பார்வை ஞானத்தோடும் பக்கத்து வீட்டை விடுப்பு பார்த்துக் கொண்டிருப்பதை விடுத்து எமக்கான சுய தேடல்களை, எமது மண்ணின் வாசனையை, எமது கலை அடையாளத்தை வெளிக்கொணரும் முயற்சிகளில் முன் நிற்க வேண்டும். அதற்கான தளங்களை அமைத்து எமது படைப்பாளிகளுக்கும் எமது ரசிகர்களுக்கும் ஆரோக்கியமான ஒரு பணியைச் செய்ய வேண்டும். முதலில் உட்சுவர் மெழுகப்பட வேண்டும். அதன் பின்னர் வெளிச்சுவரை மெழுகலாம். அப்படியான ஒரு நிலமை ஏற்படுமாயின் இலங்கைக் கலைஞர்களின்



திறமைகளை, அவர்கள் சார்ந்த படைப்புகளை இந்த வையகமே மெச்சும். அதை விட்டு நூற்றுக்கு நூறு வீதமான இந்திய இறக்குமதிகளையே நம்பி இலங்கைக் கலைஞர்களின் திறமைகளை முடக்கிவிடாதீர்கள். இலங்கையைப் பொறுத்தமட்டில் இங்கேயுள்ள அரச, தனியார் தமிழ் ஒலி, ஒளி ஊடகங்கள் நம்மவர்களின் படைப்புக்களுக்கு முக்கியத்துவம் கொடுத்திடல் வேண்டும். இது அவர்களுக்கான தார்மீக கடப்பாடுமாகும். ஆனால் அந்த தார்மீக உணர்வுகளை எமது ஊடகக்காரர்கள் நடைமுறைப்படுத்துவது அரிதிலும் அரிது. இலங்கையின் சகோதர மொழி ஊடகங்களையும், அது சார்ந்த படைப்புக்களையும் படைப்பாளிகளையும் எம்மவர்கள் அவதானிக்க வேண்டும். சகோதர மொழி ஊடகங்கள் தங்களது இனத்திற்கும் இனம் சார்ந்து வரும் படைப்புகளுக்கும் படைப்பாளிகளுக்கும் கொடுக்கும் முன்னுரிமை குறித்து சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். சிங்களப் படைப்புக்களை உலகளாவிய ரீதியில் பேச வைத்த பெருமை அவர்களையே சாரும். இலங்கையர்கள் என்ற வகையில் இது குறித்து நாங்கள் எல்லோரும் பெருமைப்பட்டாலும் மறுபுறம் எம்மவர்களின் நிலமை குறித்து எமக்கு கவலை ஏற்படுகிறது. இலங்கையின் தமிழ் படைப்பையும் படைப்பாளிகளையும் நாடு தழுவிய ரீதியிலேயே அறிமுகப்படுத்தத் தயங்கும் தமிழ் மீடியாக்கள் உலகளாவிய ரீதியில் நமக்கான அங்கீகாரத்தைப் பெற்றுத் தருமா? என்பது ஐயத்திலும் ஐயமே.





இன்று எமது சகோதர மொழியைச் சேர்ந்த பாத்யா, சந்தோஷ், பிரபல நடிகை மாலினி பொன்சேகா ஆகியோரை உலகத்தின் மூலை முடுக்கெல்லாம் இருக்கின்ற மக்கள் அறிந்து வைத்திருக்கின்றார்கள். சிங்கள இசையை சர்வதேசத்தரத்திற்குக் கொண்டு சென்ற பெருமை பாத்யா, சந்தோஷையும், சிங்கள சினிமாவை சர்வதேசம் பேசுமளவுக்கு கொண்டு சென்ற பெருமை நடிகை மாலினி பொன்சேகாவையும் சார்ந்திருக்கிறது. மாலினி பொன்கேசாவின் 'ஆகாஷ குசும்' (ஆகாயப்பூக்கள்) என்ற திரைப்படம் உலகளாவிய ரீதியில் அவருக்கு இரண்டு விருதுகளைப் பெற்றுக் கொடுத்திருக்கிறது. இதுவெல்லாம் எப்படி சாத்தியமானது? உண்மையிலேயே நான் மேற் குறிப்பிட்ட சகோதர மொழி கலைஞர்களை பட்டைத் தீட்டிய பெருமை கணிசமாக சகோதர ஊடகங்களுக்கே உரித்தானது. கலை உணர்வுகளையும் கலைஞனையும் ஆழமாக மதித்து புடம் போடும் தன்மை மிக ஏராளமாகவே சகோதர மொழியில் இருக்கிறது. இன்று நீங்கள் ஒரு தொலைக்காட்சி முன்னாலோ அல்லது வானொலிக்கு முன்னாலோ இருந்து பாருங்கள். அல்லது கேளுங்கள். அந்த உண்மையை அனுபவபூர்வமாக உணர்ந்து கொள்வீர்கள். முழுக்க முழுக்க சுய தேடலையும், இனம் சார்ந்த படைப்புக்களையும் அவர்களது வாழ்வியல் யதார்த்தங்களையும், சொந்த மண்ணின் பெருமைகளையும் உணர்த்தும் தரமான நிகழ்ச்சிகளை அவர்களால் தர முடிகிறது. எந்த நாட்டின் சாயலுமில்லாமல், எந்த நாட்டின் தயவையும் நாடாமல், முழுக்க முழுக்க இலங்கையின் தனித்துவத்தை பிரதிபலிக்கிறது. ஆனால் இலங்கையின் தமிழ் ஒலி, ஒளி ஊடகங்களை ஒரு நாள் வேலைக்கு லீவு போட்டு கவனமாக அவதானியுங்கள். அப்படி அவதானித்தால் அவர்களின் தனித்துவத்தை கீழ் வரும் வகையில் வகைப்படுத்தலாம்.

**தமிழ் பேசும் இலங்கை ஊடகங்கள் இவர்களது ஊடகத்தில் ஒலி, ஒளிபரப்பாகும் பிற நாட்டு அலை வரிசைகள்**

**நேத்ரா** TV - விஜய் TV, ராஜ்TV, BUTTERFLY TV, தூர்தர்ஷன்

**சக்தி** TV - சன் TV யின் முதல்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தரமான இலங்கை வெளியீட் டாளர்கள் (முழுக்க முழுக்க இந்தியா)

வசந்தம் TV- MEGA TV (இந்தியா) (புதுப்பையன்) பக்கா இந்திய வாசனை

வெற்றி TV- TBO (Tamil Box Office) சிங்கப்பூர். இலங்கை வாசனை மருந்துக் கும் இல்லை

தென்றல் Fm- தென்னிந்தியப் பாடல்களை நம்பியிருப்பவர்கள்.

சக்தி Fm- தென்னிந்தியாவின் பிராந்திய ஒலிபரப்பு (இலங்கை)

வசந்தம் Fm - நாங்களும் இந்தியா தாங்க.

வெற்றி Fm- தென்னிந்தியப் பாடல் களை முதல்தரமா போடுவமில்ல.

வெளிச்சம் Fm- மத்தவங்கள திருத்துங்க. நாங்களும் திருந்துறம்.

சூரியன் Fm- நாங்கதானே அவங் களுக்கு ஏஜென்சி. சும்மாவா?

பிறை Fm- நாங்க பிஸ்னஸ்காரங்க. தென்னியந்தியாதான் விற்கும்.

பொது ஜனம் - திருடனாய்ப் பார்த்து திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது.

அட்டவணையைப் பார்த்துவிட்டு அதன் உண்மை, பொய்மை அறிய ஒரு தரம் எல்லா மீடியாக்களையும் தரிசனம் செய்யுங்கள். இன்னும் நிறைய யதார்த் தங்களை நீங்கள் உணரலாம். புலம் பெயர் நாடுகளிலும் சிங்கப்பூர், மலே சியா போன்ற நாடுகளிலும் எமது தேசத்தவர்கள் சென்று எமது உணர்வு களைப் பிரதிபலிக்கும் நிகழ்ச்சிகளை தருகின்ற ஒலி, ஒளி அலைவரிசைகளை நிறுவி, இன்று உலகளாவிய ரீதியில் பேசப்படும்போது காலம் காலமாக தமிழ் வளர்க்கும் ஈழத்திருநாட்டில் மாத்திரம் இந்த நிலமை தொடர்வது தான் எமது கவலைக்கு காரணமாகிறது. இறுதியாக வினயமாக கேட்டுக்கொள் வது யாதெனில் நீங்கள் தற்போது தமிழ் வளர்த்துக்கொண்டிருக்கும் ஊடகங் களில் நூற்றுக்கு நூறு வீதமான எமது படைப்புக்களைத் தர முடியாவிட்டா லும் பரவாயில்லை. ஐம்பது சதவீத மான படைப்புக்களாவது எமது சொந்த நாட்டுக் கலைஞர்களின் படைப்புக் களாக மிளிர்வதற்கு வழிவிடுங்கள். 'ஊரான் பிள்ளையை ஊட்டி வளர்த்தால் தன்பிள்ளை தானாக வளரும்' என்ற பழ மொழி உங்களது விடயத்தில் பொய்த் துப்போய் நிற்கிறது. நீங்கள் காலம் காலமாக வளர்க்கும் ஊரான் பிள்ளையே வானுயர்ந்து நெடுத்து வளர்ந்திருக்கிறது. இலங்கைக் கலை ஞர்களாகிய உங்கள் பிள்ளைகள் வளரவு மில்லை. வளர்க்கப்படவுமில்லை. தென்னிந்தியப் படைப்புக்களை ஊட்டி வளர்க்கும் நீங்கள் தயவு செய்து எம்மவர்களையும் ஊட்டி வளர்த்து அழகு பார்க்க வேண்டும். தமிழைத் தமிழாகப் பேசும் எமது மண்ணின் மைந்தர்களை இனியாவது ஏற்றிவிடும் ஏணியாக இருந்து நமது மண் வாசத் தையும், நமது படைப்புக்களையும் வெளிக் கொணரும் எண்ணத்தை வளர்த்துக் கொள்ளுங்கள். ஊடகங் களே, அதன் ஊழியர்களே, ஊடக நண்பர்களே, பொறுப்பு வாய்ந்த அதிகாரிகளே இது உங்களின் கவனத் திற்கு!

வாசகர்களே! ஊடக மயக்கம் என்ற இவ்வாக்கம் தொடர்பாக உங்களுக்கு கருத்து வேறுபாடுகள் ஏதும் இருப்பின் உங்கள் விமர்சனங்களையும் கருத்துக்களையும் எமது முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

இருக்கிறம்

07, டொரிங்டன் அவனியூ,

கொழும்பு - 07

மின்னஞ்சல் - Irukiram@gmail.com



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருக்கிறம் ற்கு ஒரு மடல்.....................

## ஊடக மாயம்? உண்மை சொல்கிறேன்..

அண்ணன் தயானந்தா எம் பலபேரின் மதிப்பிற்குரிய அற்புதமான ஒரு ஊடகவியலாளர், மனிதர். அவர் எழுதும் இந்த ஒருபக்கம் எம்மில் பலர் எழுதும் பல நூறு பக்கங்களுக்கு மேலான வலிமை யையும், அடர்த்தியான பொருளும் அடங்கியது. இந்த ஒருபக்கத்துக்காகவே இருக்கிறம் வாசிக்கும் பலரை நான் அறிவேன். இதே இதழில் ஒவ்வொரு வாரமும் விளையாட்டு கட்டுரைகளை நான் எழுதி வருகிறேன்.

இவ்வார இதழை நான் நேற்று வாசித்தபோது எனக்கு கடும் கோபத்தையும் எரிச்சலையும் ஏற் படுத்திய விடயம், ஊடக மாயம் என்றவொரு கட்டுரை. இந்தக் கால இலத்திரனியல் ஊடகங்கள் பற்றி எல்லாருமே வரிந்து கட்டிக்கொண்டு விமர்சனங்கள் தொடுத்துவரும் நிலையில் (என்ன செய்வது.. ஒரு சிலர் விடும் தவறுகளால் ஒட்டுமொத்த ஊடகவியலாளரும் விமர்சிக்கப்படுவது எமது சாபமாகிப் போனது) எஸ்.ஜனூஸ் என்பவர் கண்மூடித்தனமாக இந்தக் கால ஊடகவியலாளர் வெட்டுக் கொத்துக்களே பிழைப்பாகக் கொண்டுள்ளது போலவும், வாழ வருமானம் இல்லாமல் கையேந்தி பிச்சை எடுக்கும் நிலையில் அல்லலுறுவது போலவும் ஒரு கட்டுரை எழுதி இருக்கிறார். இதில் அது தொடரும் எனப் போட்டிருப்பது மற்றுமொரு வேடிக்கை.

யாரடா இந்த ஜனூஸ்? இப்படியொரு ஒலிபரப்பாளரை இதுவரை கேள்விப்பட்டதில்லையே என விசாரித்துப் பார்த்தால் ஒரு சில மாதங்கள் இன்னொரு தனியார் வானொலியில் பணி செய்து கொண்டிருந்து பின் ஒழுங்கான உச்சரிப்பு இல்லாததாலும் சில ஒழுக்காற்றுப் பிரச்சினைகளாலும் விலக் கப்பட்டவராம் எனத் தெரியவந்தது. இப்படிப்பட்ட ஒருவர் பல ஆண்டுகளாக நிலைத்துள்ள ஊடகங் களையும் எம்மையும் தரக்குறைவாகப் பேசுவதா? இப்படிப்பட்ட ஒருவர் தான் இவ்வளவு தூரம் விமர்சிக் கிறாராம்.

ஒரு ஒலிபரப்பாளனாக நான் கௌரவமாகவும், என் சக ஒலிபரப்பாளர்கள் மரியாதையாகவும் நடத்தப்படுவதையே நான் விரும்புகிறேன். இவர் தான் பட்ட கசப்பான அனுபவங்களை பொதுமைப் படுத்துவது சரியல்ல. தனது நடத்தையால் தானே தேடிக் கொண்டவை அவை. இது போன்ற ஆக்கங் களை வெளியிடுவது வளர்ந்துவரும் இருக்கிறம் சஞ்சிகைக்கும் அழகல்ல. அதுவும் தயானந்தா அவர் கள் ஆசிரியராக இருக்கும் ஒரு சஞ்சிகையிலா? (அண்ணன் வெளிநாட்டில் இருப்பதால் தம்பிமார் எதை வேண்டுமானாலும் பிரசுரித்து அண்ணனுக்கு களங்கம் தேடித் தரப் போகிறார்களா?) யார் வேண்டு மானாலும் எதை வேண்டுமானாலும் எழுதலாமா?

இருக்கிறம் காரர் எதை பிரசுரிப்பது, எதை தணிக்கை செய்வது என சிந்திக்காமலா அச்சிடுகிறார்கள்? உடனடியாகவே இருக்கிறமின் இலங்கையில் உள்ள துணை ஆசிரியர் சஞ்சீத்துக்கு ஒரு கண்டனக் கடிதம் அனுப்பியுள்ளேன். ஒரு பொறுப்பான ஊடகத்தின் முதன்மைப் பதவியில் இருக்கும் என்னால் நான் இருக்கும் துறையையே விமர்சித்து இப்படிப்பட்ட குப்பைத்தனமான ஆக்கங்கள் வரும் சஞ்சிகைக்கு தொடர்ந்து எழுத முடியாதென்று. இருக்கிறம் சஞ்சிகைக்கு நான் தொடர்ச்சியாக எழுதிவர ஒரே காரணம் தயானந்தா அண்ணா மட்டுமே. (தரப்படும் சன்மானம் பற்றி பேசவேண்டாமே) விமர் னங்கள் என்றால் வேறு.. இது சேறு பூசும் செயல் அல்லவா? ஏற்கனவே அச்சுவாலை சந்திப்பினால் பதிவர்கள் பலரோடு முரண்பட்டுள்ள இருக்கிறம், இவ்வாறு ஆதாரமில்லாத கட்டுரைகளினால் வானொலிகளையும் பகைத்துக்கொள்ளப் போகிறதா?

A.R.V லோஷன்

# "சாமியே சரணம் ஐயப்பா"

**தற்பொழுது சபரிமலை யாத்திரைக் காலம். தலைநகரிலும் சரி, இந்துக்கள் அதிகமாக வாழும் ஊர்களிலும் சரி. கறுப்புடை தரித்து கழுத்திலே உருத்திராட்சை மாலை அணிந்த ஐயப்ப பக்தர்களை வீதிகளில் கண்டிருப்போம். மகசி என்ற அரக்கியை அழிப்பதற்காக பிறந்த ஹரிஹரபுத்திரன்தான் "ஐயப்பன்" ஒவ்வொரு விரதத்துக்கும் ஒவ்வொரு காரணம் இருக்கும். ஆனால் இந்த சபரிமலை யாத்திரைப்பற்றி யாருக்கும் தெரியாது. இந்த உலகிலேயே பக்தி உணர்ச்சி தழைத்தோங்கி, தூய உள்ளத்துடன், உலக மாயை அகற்றி, உள்ளம் தெளிவாக்கி, பற்றற்ற பரந்த மனப்பான்மையோடு, பக்தர் வெள்ளம் பயபக்தியுடனும் பரவசத்துடனும் பயணம் தொடர்கின்ற புனித யாத்திரைதான் இந்த சபரிமலை யாத்திரை.**



சபரிமலை யாத்திரை என்பது மிகப் புனிதமான யாத்திரை. ஆரம்பத்தில் ஒரிருவரே மேற்கொண்ட இந்த யாத்திரையினை தற்போது பலர் மேற் கொள்கின்றனர். அண்மையில் இது சம்மந்தமான தகவல்களைப் பெறு வதற்காக எமது 'இருக்கிறம் டீம்' ஹட் டனை நோக்கிப் பயணித்தது. அங்கு ஹட்டன் ஸ்ரீமாணிக்கப் பிள்ளையார் ஆலயத்தில் ஐயப்ப பக்தர்களான ஹரி ஹரசுதன் யாத்திரைக் குழுவினரிடம் ஐயப்ப வழிபாடு பற்றி கேட்டறிந்து கொண்டோம். அவர்கள் சொன்ன தகவல்கள் ஒவ் வொன்றும் ஆச்சரிய மாகவும் அதிசய மாகவும் இருந் தது. அவர்கள் இந்த விரதத் தைப் பற்றி சொன்ன விட யங்கள் ஒவ் வொன்றும் எங் களை மெய்சிலிர்க்க வைத்தது என்றால் பார்த்துக் கொள்ளுங்களேன் அந்த விரதத்தின் மகிமையை.

ஹட்டன் ஹரிஹரசுதன் யாத்திரைக் குழுவைச் சேர்ந்த குருசாமி சுரேஸ் என்ற ஐயப்ப பக்தரிடம் இந்த விரதம் கடைப்பிடிக்கும் வழிகளைப் பற்றிக் கேட்டோம். துளசிமணி அல்லது உருத்திராட்சை மாலை 108 அல்லது 54 மணிகள் உள்ளதாகப் பார்த்து வாங்கி அத்துடன் ஐயப்ப திருவுருவப் பதக்கம் ஒன்றினை இணைத்து முறையாக விரதம் இருந்து பெருவழிப் பாதையில் சென்று வந்த பழமலை ஐயப்பன்மார் ஒருவரை குருவாக ஏற்று திருவிளக்கு முன் பாகவோ, திருக்கோயில்களிலோ குரு நாதரை வணங்கியோ அவர் தம் திருக்கரங்களால் மாலையணிந்து கொள்ள வேண்டும். மாலையணிந்து கொண்டவுடன் குருநாதருக்கு தங்க ளால் இயன்ற குருதட்சணையை கொடு த்து, அடிவணங்கி, ஆசிபெற வேண்டும். ஐயப்பனாக மாலை தரித்த நேரத்திலி ருந்து குருசாமியை முழு மனதுடன் ஏற்று, அவர் தம் மொழிகளை தேவவாக்காக மதித்து மனக் கட்டுப் பாட்டுடன் பணிந்து நடந்து யாத்தி ரையை இனிதாக்க ஒத்துழைக்க வேண்டி யது அவசியம்.

களவு, சூதாடுதல், பொய், திரைப் படங்கள், விளையாட்டு, வேடிக்கை கள், உல்லாசப் பயணங்கள், போதை யூட்டும் பொருட்கள், புகைப்பிடித்தல் முதலியவைகளைத் தவிர்க்க வேண்டும். படுக்கை, தலையணைகளை நீக்கி தன் சிறுதுண்டை மட்டும் தரையில் விரித்துத் துயில வேண்டும். காலணிகளை அணி வதைத் தவிர்க்க வேண்டும். பிரம்மச் சரிய விரதத்தை ஒழுங்குடன் தவறாமல் கடைப்பிடிப்பது தலையாய விரதமா கும். காம இச்சையைத் தவிர்க்க வேண் டும். மது, மாமிசம் ஆகியவற்றை அறவே ஒழிக்க வேண்டும். மற்ற ஐயப்பன்மார்களிடம் பேசும்போது 'சாமி சரணம்' என்று தொடங்கி, பின் விடைபெறும் போது 'சாமி சரணம்' எனச் சொல்ல வேண்டும். வீட்டிலேயே தூய்மையாகத் தயாரித்த சைவ உண வையே உண்ண வேண்டும். எல்லாப்





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொறுப்பினையும் ஐயப்பனிடம் ஒப்படைத்து அவன் திருவடிகளே சரணம் என்ற பக்தி உணர்வுடன் சரணம் விளித்து புறப்பட வேண்டும்.



மாலையணிந்தபிற குடும்பத்தில் நெருங்கியவர் எவரேனும் காலமாகி அதன் காரணமாகத் துக்கத் தீட்டு ஏற்படுமானால் அந்த வருடம் யாத்திரை செல்லக்கூடாது. சவரம் செய்தல் கூடாது. துக்கக் காரியங்களில் கலந்துகொள்ளவோ, பெண்களின் ருது, மங்களச் சடங்கிற்கோ, குழந்தை பிறந்த வீட்டிற்கோ, திருமணங்களிற்கோ சென்று கலந்து கொள்ளக் கூடாது. மாதவிலக்கானப் பெண்களைக் காணக்கூடாது. அப்படி தெரியாது காண நேர்ந்தால் உடனே நீராடி ஐயப்பனை வணங்குதல் வேண்டும். பன்னிரண்டு வயதுக்குட்பட்ட ருது காலம் அடையாத சிறுமிகளும், ருது காலம் நின்ற வயதான பெண்களும் சபரிமலை யாத்திரையை மேற்கொள்ளலாம்.

யாத்திரைக் குழுவைச் சேர்ந்த சுரேஸிடம் இந்த வழிபாட்டு முறையினைக் கேட்டபோது கார்த்திகை ஒன்றில் தொடங்கி தைமாதம் பதினைந்தாம் திகதி மகரஜோதி தரிசனத்தில் இவ்விரதம் முடிவடையும். இவ்வழிபாட்டு முறையால் மதம் மாறியவர்கள்கூட திரும்பி வந்துள்ளார்கள். மலையகத்தில் 1000க்கும் மேற்பட்டவர்கள் இருக்கின்றனர். யாத்திரை செலவு ஏறக்குறைய 22000 ரூபாய் ஆகும். அவர்களுடைய வாழ்க்கை நிலையில் அது ஒரு பெரிய சிரமம். அன்றாட வாழ்க்கைக்கே சிரமப்படும் இந்த மக்கள் மிச்சம் பிடித்து இந்த யாத்திரையை மேற்கொள்கின்றனர். 'பாணகம்' என்னும் ஒரு வகை திரவம் ஐயப்பனுக்கு மிகவும் பிடிக்கும். எழுமிச்சை, சரக்கரை, ஏலம் போன்றவற்றை ஒன்றாக்கி செய்வதுண்டு. நெய்யும் அவருக்குப் பிடிக்கும். அதில் அபிஷேகம் செய்து மூன்று கன்னிச் சாமிகளை நிறுத்தி வழிபடுவோம் என்றார்.

இந்த வழிபாட்டு முறையினை மேற்கொள்ளும்போது அவருக்கு ஏற்பட்ட அனுபவத்தை எம்முடன் பகிர்ந்துகொண்டார். "நான் ஒரு நகைக் கடையில் வேலை செய்யும் போது ஹட்டனைச் சேர்ந்த கிருஷ்ணன் என்னும் சாமி இவ்வழிபாட்டு முறை பற்றிக் கூறும்போது நானும் அதை மேற்கொள்ள வேண்டும் என்ற ஆர்வம் உருவாகியது. எம்முடன் பாலகிருஷ்ணன், ஜெயமோகன், ராகிருஷ்ணன், சிவகுமார், மகேந்திரன், ரதீபன் போன்ற சாமிகள் இந்த யாத்திரையை மேற்கொண்டோம். இப்போது எங்களைப்போல மஸ்கெலியாவிலும் பூண்டுலோயா, ரம்பொட ஆஞ்சனேயர் கோயில், பொகவந்தலாவ, தலவாக்கலை போன்ற இடங்களிலும் நிறையப் பேர் மாலை போடுகின்றனர். அன்று மிகவும் மோசமான சூழ்நிலை காணப்பட்டது. இப்போது நிறைய வசதி இருக்கின்றது. நாங்கள் அனுபவிச்சதில கொஞ்சம்கூட இப்போது இருக்கின்றவர்கள் அனுபவிக்கவில்லை.





குடிக்கின்ற தண்ணீரில் அசிங்கம் மிதக்கும். அந்த தண்ணியைத்தான் குடிப்பம். அன்றுதான் நாங்கள் நினைத்தோம் என்ன பாவம் பண்ணினாலும் இந்த சபரிமலை யாத்திரையில மன்னிப்பு இருக்கின்றது என்று. எந்த விரதமும் இப்படி அனுஷ்டிப்பதில்லை. மிகவும் கஷ்டப்பட்டு வாழ்கின்றவர்கள்கூட மாலை போட்டிருக்காங்க. சாமானிய மனிதனையும் தெய்வமாக்கும் புனித யாத்திரை இது. இந்தியாவில் நாங்கள் வழிபடும்போது சாமியை கண்மூடிக் கண் திறப்பதற்குள் வழிபடவேண்டும். இல்லாவிட்டால் அதற்கான சந்தர்ப்பம் கிடைக்காமல் போய்விடும். பதினெட்டுப் படிகளையும் ஏறி படிப்பாட்டுப் பாடி படிப்பூசை நடக்கும். நமது நாட்டினைப் போலல்லாது அங்கு தமிழில் தான் பாடல்களை பாடுவர்" என்று சர்வசாதாரணமாக கூறிச் சிரித்தார்.

அவரிடம் கறுப்பு உடை அணிவதற்கான காரணம் பற்றி கேட்டோம். 'கறுப்பு உடை போடுவதற்கான காரணம் தீட்டு உள்ளவர்கள் அவ்வுடையினைக் கண்டதும் விலகிச் செல்வர். இதன் வரலாறானது என்ன கூறுகின்றது என்றால் ஐயப்பன், சனி பகவானிடம் என்னை வழிபட வருகின்றவர்களை நீ தீண்டக் கூடாது என்று கேட்டுக்கொண்டாராம். அதனால் தோசங்கள் குறையும். இதுவே கறுப்பு உடை அணிவதற்கான காரணமாகும் என்றார். வைத்த கண் வாங்காமல் அவரையே பார்த்துக்கொண்டு நின்ற எங்களுக்கு நேரம் போனதே தெரியவில்லை. அந்தக் குழுவினரிடம் நன்றி கூறி அவர்களது பயணம் சிறப்புற வாழ்த்திவிட்டு கொழும்பு திரும்பினோம்.

ஏழை பணக்காரர் என்ற பேதம் இல்லை. உயர்ந்தவர், தாழ்ந்தவர், படித்தவர், பாமரர் என்ற வித்தியாசம் இல்லை. எல்லோரும் ஓர் குலம் என்ற உணர்வோடும், அன்போடும், பண்போடும் மேற்கொள்கின்ற யாத்திரையே இந்த சபரிமலை புனித யாத்திரை. இந்த யாத்திரையின்மூலம் ஒருமைப்பாட்டு உணர்வு வளர்கின்றது. சாதி, சமய வேறுபாடுகள் வேரறுக்கப்படுகின்றன. சமத்துவம் என்பது நடைமுறையில் நடாத்திக் காட்டப்படுகிறது. நல்லவைகளையே செய்து நல்லவைகளையே நினைத்து 'சுவாமியே சரணம் ஐயப்பா' என்ற தாரக மந்திர சக்தியுடன் பக்தர் பெருவெள்ளம் பரம் பொருளை உணர்ந்துகொள்ளத் துடிக்கும் ஓர் அறப் போர்க்களமே ஐயப்ப சுவாமியின் சபரி மலை யாத்திரை என்றால் மிகையாகாது.

—கோகுல்ஷியாம்—

—வர்ஷினி—



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்

# இருப்பு



"மாடுகள் பசியாறுகின்றன"



வினைத்திறன் மிக்க சேவை
நிர்வாகம் மற்றும் பிரஜைகளின்
ஆலோசனை பெறல்
என்பவற்றினூடாக பொருளாதார
வளர்ச்சியினை
மேம்படுத்துவதற்காக பிரதேச
சபை, நகர சபை, மாநகர சபை
என்பவற்றுடன் இணைந்து
செயற்படும் ஒரு உயரிய
அமைப்பே
"இலங்கை ஆசிய நிலையம்"
உள்ளூராட்சி சபைகளின்
வெளிப்படையான தன்மையை
மேம்படுத்தி, சிறந்த பொருளாதார
வளர்ச்சியை பொதுமக்கள்
அடைவதற்கு அர்ப்பணிப்புடன்
பணியாற்றுவதே ஆசிய
நிலையத்தின் முக்கிய
நோக்கமாகும்.

The Asia Foundation

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Photo & Video

# Sri Sugandan's

# STUDIO



289-1/1, GALLE ROAD,
COLOMBO-6
SRI LANKA.
Tel- 077 7309638, 011 2507265
Email- srisuganthans@yahoo.com

For Video Filming & Photography
Digital Video Filming & Editing
Album Makers (Karizma)
VHS to DVD

Jeya Offset Printers, No. 29 St`Sebastian Street, Colombo 12. Tel: 0112 478444

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org